

சக்தி

மாத வெளியீடு

●

சாரத் திரள்

வந்தே-ஏ-ஏ-மாதரம்!

ராஷ்டிரபதி

பக்கம் 3

எனது பிரார்த்தனை	...	மகாத்மா காந்தி	43
அன்பர்களே!	...	குமாரசாமி ராஜா	53
மாளாத மாளவியா	...	மனிதாபிமானி	58
நாணுகிறுன் தமிழன்	...	மு. வரதராஜன்	61
ஏனழுதாய் என் திருவே?	...	சுரபி	64
ஒழுக்கம் விழுப்பம் தருமா?	...	சுப. நாராயணன்	66
அமெரிக்காவில் தேர்தல்	...	ரா. ராமநாதன்	69
என்னைத் தெரியுமா?	...	ப. வெ. வேங்கட...	71
நோயும் மருந்தும்	...	குரு	77
சிங்காரி	...	க. சு. அறிவோன்	79
சிந்தனை	...	பூரா	84
மார்க்ஸியம்	...	ரா. ஹாலாஸ்யநாதன்	86
நாகரிகச் சந்தையில்	...	ரா. கி. பார்த்தசாரதி	90
புத்தக உலகம்	...	நாரா	96

முதலியவை

✲

விய — கார்த்திகை

மலர் 13 — இதழ் 8

சக்தி

அணா 8

491.

2816

1-DEC 1946 MADRAS

பவானி பிரசுரம்

ராயவரம், புதுக்கோட்டை ஸ்டேட்

		ரூ.	அ.	பை.
சுந்தரி	வ. ரா.	5	0	0
சஞ்சீவி	'துகப்ரியை'	3	4	0
பவானி	'லக்ஷ்மி'	2	8	0
மஞ்சி விரட்டு	கொத்தமங்கலம் சுப்பு	3	8	0
காதல்	வாண்டா வாஸிலெவ்ஸ்கா	3	12	0
ஜெயகாதல் கீதம்	துர்கனேவ்	0	8	0
வனிதாலயம்	சகுந்தலா ராஜன்	2	0	0

●

தயாராகின்றன

அசோக மௌர்யன்	'துகப்ரியை'
பெண் மனம்	'லக்ஷ்மி'
வாழ்க்கைச் சித்திரம்	'வ. ரா.'
அன்னு கரினினு	டால்ஸ்டாய்
வானவில் (2-ம் பதிப்பு)	வாண்டா வாஸிலெவ்ஸ்கா

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 59,80,000

கிளைகள் : பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

பிரதம ஏஜெண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

கொஞ்சம் பொருள் அதிகமாய்ப்பயன் படும்படிச்செய்வது.

AC93TM



பிரசினை:

9 தீக்குச்சிகளைக் கொண்டு
5 முக்கோணங்கள் அமைக்கவும்.



விடை. படத்தில் காட்டியுள்ளபடி ஷ தீக்குச்சிகளை அமைக்கவும். ஐந்தாவது முக்கோணம் நிழலுருவமாய் அமைக்கப் பட்டுள்ள தீக்குச்சிகளினல் உண்டாகிறது.

தற்போதைய விலைவாசிகள் இருந்து கொண்டிருக்கிற வரையில்—உணவு விஷயத்திலாகிலும், துணி விஷயத்திலாகிலும், கல்வி விஷயத்திலாகிலும் ஒரு திட்டத்தை அனுசரிக்காமல் காரியங்களைக் கண்டபடி செய்யும் பட்சத்தில் கொஞ்சப் பொருள் அதிகமாய்ப் பயன்படும்படி செய்யமுடியாது. குடும்பத்தின் வரவு செலவு திட்டத்தைச்

சிக்கனத்தினால் ஏற்படும் அவசரமான சந்தர்ப்பங்களைச் சமாளிக்க ஏன் ஒரு திட்டம் வகுக்கக்கூடாது? நீர் இடைவிடாமல், ஒழுங்காகச் சேமித்து வருவீரானால், உம்மிடம் எப்போதும் ஒரு சேமநிதி இருக்கும். இத்தகைய சேமிப்புகளை வட்டிக்குப் போட்டு வைப்பதற்கான சிறந்த சாதனங்கள் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளுமே யாகும

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

இவை முக்கியமான அனுகூலங்களாகும்:—

1. நேஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5. 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா யிருந்தாலுஞ்சரி மைனரா யிருந்தாலுஞ் சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்க முடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சத விதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகி விடுகிறது. இது யாதொரு கவர்ன்மென்ட் பத்திரத்தின் மேல் கிடைக்கக் கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம்டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வரப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபிஸுகளிலாவது கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்!

விய	சக்தி	கார்த்திகை
மலர் 13		இதழ் 8

மெய்ப்பொருள் காண்பது அறிவு

எப்படி முடியும்?

விழிப்படைந்துவரும் இன்றைய உலகம்—பலாத்காரச் செயல்களால் படுகாய முற்றுத் தேறி, முன்னேறி, வாழ வழி தேடத் துடி துடிக்கும் இன்றைய உலகம்—நாலு கூறுகப் பிரிந்து நிற்கிறது: ருஷ்யா பொதுவுடைமைக்கும், அமெரிக்கா தனிவுடைமைக்கும், இங்கிலாந்து சமூக உடைமைக்கும், இந்தியா மக்கள் உடைமைக்கும் போராடுகின்றன. புதிதாய்க் கிளம்பிய நிப்பொன் வல்லரசு படுத்துவிட்டது. டச்சு ஆதிபத்தியம் ஆட்டங் கண்டுவிட்டது. ஹிட்லரிசம் தோற்றுவிட்டது. ஃபாசிசம் பயங்கரக் கனவாகிவிட்டது. ஃப்ராங்கோயிசம் புறமுதுகு காட்டிவிட்டது. ஜனநாயகம் இன்னும் சாகவில்லை—அதை யாராலும் சாகடிக்க முடியவில்லை—அது சாகப் போவதுமில்லை. சீனாவில், புது அரசியல் நிர்ணய சபை வேலை தொடங்கிவிட்டது. ஃபிலிப்பீன் நாடு, பெயரளவிலேனும், சுதந்தரம் பெற்றுவிட்டது. தீர மிக்க இந்தொனீசியா தனது சுதந்தரப் போராட்டத்தில் வெற்றி கண்டுவிட்டது. ஆணைப்பட்ட ஆங்கில ஏகாதிபத்தியத் தாக்குதலை அது சமாளித்துவிட்டது. சயாமிய, அன்னமிய, பர்மிய மக்கள் சுதந்தரப் பாதையில் கால் வைத்துவிட்டார்கள். எகிப்தின் கடும் போராட்டம் கடைசிக் கட்டத்தில் நிற்கிறது. ஐரோப்பா, ஆஃப்ரிக்கா, மலேயா, அஸ்த்ரேலியா முதலிய எங்கணும் உள்ள சுதந்தர உபாசகர்கள் விடுதலைப்போராட்டத்தில் இறங்கிவிட்டார்கள்.

?

இந்தியா, சுதந்தரத் தீபத்தைக் கையிலேந்தி, நிமிர்ந்து நிற்கிறது. நாம் செய்தது, செய்கிறது, செய்யவேண்டியது அனைத்தின் மீதும் ராஷ்டிரபதி கிருபலானியின் மீரத் காங்கிரஸ் தலைமைப் பேருரை ஒளி பரப்பியிருக்கிறது: இன்றைய உலக நிலை, அதன் முரண்டுப்போக்கு, திரை மறைவு நாடகங்கள், நாட்டுப் பெரு மக்களின் அபிலாஷைகள், பதவி வேட்டைக்காரர்கள், சமயவாதிகளின் ஆஷாடபூதித்தனம்—ஒன்றையும் அவர் இருட்டடிப்புச் செய்ய முனையவில்லை. அந்தரங்கச் சுத்தியோடு, துணிந்து பேசியிருக்கிறார். அவர் பேச்சு முழுவதும் இந்த இதழில் இருக்கிறது. படித்துப் பாருங்கள். எண்ணிப் பாருங்கள். செயலில் இறங்குங்கள்—எல்லாம் நன்மையாகவே முடியும்; ஐயமில்லை.

*

காலச்சுழல்

உணவு விஷயம் : அரை வயிற்றுச் சோறு கால் வயிற்றுச் சோருக என்றைக்கு ஆகிவிடுமோ என்று வயிற்றில் நெருப்பை (பிரேஸில் அரிசியை)க் கட்டிக்கொண்டிருந்த சென்னை மாகாண வாசிகள் இனித் தாராளமாகப் பெருமூச்சு விட்டு, நிம்மதி அடையலாம். டிசெம்பர் மாதத்திலிருந்து அரிசிப் பங்கீடு அதிகமாகலாம் என்று ஸ்ரீ பிரகாசம் கூறியிருக்கிருர். அரசாங்கத்துக்கும், விவசாயிக்கும் உள்ள தொடர்பில் இன்னும் அதிக இழைவு ஏற்படலாம்; மிராசுதார் - குடியானவன் உறவும் நெருங்கலாம். சமீபத்தில் நடந்த விவசாயிகள் மாநாட்டில் விவசாய மந்திரி கனம் (பூசப்பாடி சஞ்சீவி) குமாரசாமி ராஜா பேசிய பேச்சு (இந்த இதழில் இருக்கிறது.)—இதற்கு வழி காட்டுகிறது. நீங்கள் அதைப் படித்துப் பார்த்து, நன்ருகச் சிந்தித்து, உணவு நெருக்கடியைச் சமாளிக்க வழிசெய்யலாம்.

ஆண்டவன் தரிசனம் : நவம்பர் மாதம் 14-ம் தேதி, 'திருச்செந்தூர் வேலாண்டி', தன் பக்த கோடிகளுள் வெகு காலமாகத் தூரத்தில் நின்றுகொண்டு 'கோபுர தரிசனம்' மட்டுமே செய்து வந்த ஒரு பகுதியினரைத் தன் சன்னிதானத்துக்கு வரவழைத்துத் தரிசனம் தந்தான். நாட்டு மக்களின் உணர்ச்சி வேகத்துக்கு ஏற்பத் தம் கருத்துக்களை மாற்றிக் கொண்ட கோவில் அதிகாரிகளைப் பாராட்டுகிருேம். சமீபக் காலமாக, ஹரிஜனங்களுக்குக் கோவில்கள் திறந்துவிடப் பெறும் செய்தி பல இடங்களிலிருந்தும் வந்துகொண்டிருக்கிறது. செய்தியைப் படித்துப் பார்த்து ஒரு பக்கம் மகிழ்வும், ஒரு பக்கம் வியப்பும் அடைகிருேம். குருட்டு வைதீகத்தில் ஊறிப்போயிருந்த மக்களின் மனத்தை மாற்றி வைத்த, 'பத்துடை அடியவர்க் கெளியவ'னை அந்தச் சர்வேசுவரனுக்கு நமது வாழ்த்துக்களும், பாராட்டுதல்களும்.

மறைந்த பெரியார்கள் : 12-11-1946-ல், காசியில், தாம் நிறுவிய கலாசாலைக் கட்டடத்துள் காலமாகிய பண்டித மாளவியா, வெகு காலத்திற்கு முன்பாகவே இந்தியாவின் தேசிய வளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டவர்; ஹிந்துக்களிடையே ஐக்கிய பாவம் ஏற்படுத்தத் தம் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தவர்; காசி ஹிந்துச் சர்வ கலாசாலையை நிறுவி, தம் எண்ணத்தை ஓரளவு செயலிலும் காட்டியவர்; தன்னல மற்றுப் பணி செய்த இந்தத் 'தர்மாத்மா' இறைவனின் கழலடியில் சேர்ந்திருப்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சர் பழமார்நேரி சுந்தரம் சிவசாமி ஐயர் சென்னை, மயிலாப்பூரில், தமது வீட்டில், 5-11-1946-ல் காலமாய்விட்டார். எத்தனையோ அனுதைப் பிள்ளைகளுக்கு வித்தியா தானம் செய்த புண்ணியாத்துமா இவர்; அரசியலில், இவருடைய நிதானமான, விவேகம் நிறைந்த கருத்துக்கள் அவ்வப்போது முக்கியத்துவம் பெற்றுள்ளன. தமிழ்ப் பெருமக்களுக்கு இவருடைய மறைவு பெருத்த நஷ்டம்.

வந்தே-ஏ-ஏ-மாதரம்!

●

ராஷ்டிரபதி கிருபலானி

நண்பர்களே! இந்த வருஷம் காங்கிரஸுக்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக எனது நன்றி. தவறான தன்னடக்கம் கூறி, உங்களை அவமதிக்க நான் தயாராயில்லை.

நிரம்ப ஆபத்தாக இருந்த நமது யாத்திரைக் காலத்தில், மௌலானா ஆஜாத் நமது கப்பலை நடத்திச் சென்றார். இன்னும் கஷ்டமான வேலையையே மேற்கொள்ள வேண்டியிருப்பதால், இந்தப் பதவியை ஏற்பதால் உண்டாகும் சிரமத்தை நீக்கி, அவருக்கு அத்தியாவசியமாகிவிட்ட ஓய்வைக் கொடுத்தாக வேண்டியது அவசியமாயிற்று. உங்கள் சேவையில் ஈடுபெற வேறு வேலை இன்றி நான் இருந்தேன். உங்கள் முதல் ஊழியனாக நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். எனக்கு நீங்கள் அளித்திருக்கும் கௌரவத்தை உணருகிறேன். இதிலுள்ள பெரும் பொறுப்பையும் இன்னும் அதிகமாக உணருகிறேன். இந்தக் கிரீடம் முட்கள் நிறைந்தது என்று காந்திஜி சொல்லுகிறார். நமது கப்பல் துறைமுகத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது. வழியிலோ, கடற் கண்ணிகளெல்லாம் நிறையப் போடப்பட்டிருக்கின்றன. ஆகையால்;

★ புது டில்லிக்கு இருபது கல் தொலைவில் இருக்கும் மீரத் நகருக்கு அணித்தே, 'ஆகஸ்ட் புரட்சி'யால் உயிர் துறந்த பண்டித பியாரேலால் சர்மாவின் நினைவுக் குறியாக அமைந்த பியாரேலால் நகரில், ஆறரை ஆண்டுகளுக்குப் பின்னர், நவம்பர் 23-ம் தேதி கூடிய இந்தியத் தேசியக் காங்கிரஸின் 54-வது மாநாட்டில், பல்லாயிரக் கணக்கான மக்களின் திருமுன், ராஷ்டிரபதி ஆச்சாரிய ஜீவத்ராம் பகவன்தாஸ் கிருபலானி தலைமை வகித்து நிகழ்த்திய தலைசிறந்த பேருரை இது.—**தினசரியின் நயமான மொழிபெயர்ப்பு விருந்து:** ★

இந்தக் கிரீடம் முன்பிருந்ததைவிட இப்போது அதிகமாக முட்கள் நிறைந்த கிரீடமே. ஆனால், நமது லட்சியத்தில் நாம் உண்மையுடன் நடந்தால், ஒன்றுபட்டு நிற்போமானால், அதை நாம் அடைந்தே தீருவோம். எந்தச் சக்தியும் நம்மைத் தடுத்துவிடவே முடியாது.

ஆறு வருஷத்துக்குப் பிறகு நாம் இங்கே கூடியிருக்கிறோம். இவை உலகச் சரித்திரத்திலேயே முக்கிய வருஷங்கள். நமது சுதந்தரப் போராட்டத்தின் சரித்திரத்தில் இவை இன்னும் முக்கிய மானவை. இந்தக் காலத்தில், இரண்டு முறை பிரிட்டிஷ் சர்க்காருடன் பகிரங்கப் போராட்டத்தில் இறங்கினோம். இந்தியா, தன் விருப்பத் திற்கு மாறாக யுத்தத்தில் சேர்ந்தது. ஆகையால், அந்த யுத்தத்தைப் பற்றித் தன் அபிப்பிராயத்தைத் தாராளமாகக் கூற ஒவ்வொரு இந்தி யனுக்கும் உரிமை உண்டு என்பதை நிலைநாட்டுவதற்காக, 1941-ல் தனிப்பட்ட சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தோம். குறிப் பிட்ட இந்த நோக்கத்தில் அந்தச் சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றது.

இரண்டாவது போராட்டமோ, "இந்தியாவை விட்டு வெளியே போ" என்ற விரிவான போராட்டம். 1930 ஜனவரி முதல் தேதி, காங் கிரஸ் பூரண சுயராஜ்யத்தை அடைவதே தனது லட்சியம் என்று நிர்ணயித்தது. அன்னியன் வெளியேறிவிட வேண்டும் என்பதற்கு அதுவே 'நோட்டிஸ்'. ஆனால், தேதி குறிப்பிடாத நோட்டிஸ். அவன் அலட்சியமாக இருந்துவிட்டான். நாமும் அதை அமலுக்குக் கொண்டுவரா திருந்துவிட்டோம். ஆனால், 1942-ல் நாம் அறிவித் ததோ, வெளியேறிவிட வேண்டும் என்ற கட்டளை. அப்பொழுது, பிரிட்டன் தன்னுடைய ஏகாதிபத்திய ஆசை வலைக்குள் தானே சிக்கிக்கொண்டு, இரண்டாவது உலக யுத்தத்தில் சிக்குண் டிருந்தது. பெரிய போருக்கு வேண்டிய தயாரிப்புகளுடன் அது இல்லை. இருப் பதா, இறப்பதா என்ற ஒரு சங்கடமான போருக்குள் சிக்கி யிருப் பதைச் சீக்கிரம் பிரிட்டன் தெரிந்துகொண்டது. பல போர் முனை களிலும் பிரிட்டன் கண்ட அனுபவம் மக்கள் ஆட்சியில் அதற்கு ஒரு பாடம்.

மக்கள் சுதந்தரத்துட னிருந்த சொந்த நாட்டில்—அங்கேதான் ஆபத்து நிரம்ப அபாயகரமானதாக இருந்த போதிலும்—அவர் கள் வீறுகொண்டு நின்றார்கள். மக்களுடைய விருப்பத்திற்கு மாறாகத் தனது ஆட்சியை நடத்திவந்த இந்தியாவிலோ, பிரிட்டிஷாருக்குத் தீர மில்லை. திகிலும், தோல்வி மனப்பான்மையும் உண்டாகி விட்டன. ஜப்பானியப் படையெடுப்பு வரும் என்ற பீதியில், நமது மக்களைத் தங்கள் வீடுகளி லிருந்தும், வயல்களி லிருந்தும் விரட்டி விட்டார்கள். விளைச்சல்களை நாசமாக்கினர். ஜீவனத்துக் கிருந்ததை யும் அழித்தனர். இவ்வளவு துன்பங்களுக்கு ஆளாகிய மக்கள் இவற்றைப் பற்றிப் புகார் சொல்லவும் முடியவில்லை. கருத்தைத் தாராளமாகத் தெரிவிக்கவோ, கூட்டம் கூடவோ இருந்த உரிமை களைப் பறித்து, ராணுவச் சட்ட மூலம், பத்திரிகைகளுக்கும் பொதுக்கூட்டங்களுக்கும் வாய்ப் பூட்டுப் போட்டுவிட்டார்கள். அந்தச் சமயத்தில், தேச மக்கள் செய்யக் கூடிய தெல்லாம் இரண்டே இரண்டுதான்: ஒன்று, இந்த அவமானங்களை யெல்லாம் மானமின்றி அனுபவித்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டும்; அல்லது, இந்தச்

ஸிதாரா
லக்ஸ் டாய்லட்
சோப்பினுல்
சுலபமாக
அழகுபடுத்திக்
கொள்ளும்
முறையை விவரிக்கிருர்
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள்
விரும்பும்
அழகையளிக்கும் சோப்
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டிருல் முகத்தை துடைக்கிறேன்
எழில்வாய்ந்த சருமமே ஒரு ஸ்திரீயின் அரிய பொக்கிஷம். லக்ஸ் டாய்லட் சோப்பின் மிருதுவான பாதுகாப்பு முறையைக் கையாளுங்கள், ஸிதாராவின் சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை 30 நாட்கள் ஏன் நீங்களும் பின்பற்றக் கூடாது? மணமுள்ள இவ் வெண்மையான சோப்பின் மிருதுவாக சுத்தம் செய்யும் திறமையைக் கண்டு மகிழ்வீர்கள்
LTS. 140-50-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

புதிய புத்தகங்கள்

அறிஞர் மார்க்ஸ்:	ஆர். ராமனாதன்	1	8
ரத்தக்களரி	நேதாஜி	1	8
சிங்காரி	மஞ்சேரி எஸ். ஈச்வரன்	3	0
காய்கறித் தோட்டம்	மு. அருணாசலம்	5	0
பெண் உள்ளம்	பதினொரு கதைகள்	1	0
முதல் சந்திப்பு	ஏழு கதைகள்	1	0
பாரதியார் சரித்திரம்	செல்லம்மா பாரதி	2	0

(தபால் செலவு தனி)

★

தயாராகின்றன

ரூபாயின் கதை	பிர்லா
செல்வம்	க. சந்தானம்
பொய்யும், மெய்யும்	க. சந்தானம்
குழந்தைமை ரகசியம்	மாண்டிசோரி
காந்தி மகான் கதை (கவிதை)	கொத்தமங்கலம் சுப்பு
மருக்கொழுந்து (கவிதை)	கொத்தமங்கலம் சுப்பு
மகிழம்பூ (கவிதை)	'சுரபி'
ஆஸாத் ஹிந்த்	ஸா. ஸுப்ரமண்யம்
குழந்தை வளர்ப்பு	குகப்ரியை, திரிபுரசுந்தரி
லெனின்	ஆர். ராமனாதன்
சோவியத் குடியரசு நாடுகள்	ஆர். ராமனாதன்

★

சக்தி வெளியீடுகள்

சவாலை ஏற்றுக்கொண்டு எதிர்க்க வேண்டும். இந்தச் சவாலை அலட்சியமாகக் கருதிக் காங்கிரஸ் சும்மா இருந்துவிட முடியாது. அப்படிச் செய்திருந்தால், பாசிஸ்ட், நாஜி ஆக்ரமிப்புப் பயத்தினால் ஐரோப்பாவில் சோஷல் டெமாக்ரட்டிக் கட்சிகள் என்ன செய்தனவோ, அதையே காங்கிரஸும் செய்ததாக ஆகும். தனது லட்சியத்தைப் பாதுகாக்க எதிர்த்து நிற்காமல், மானக்கேடான வகையில், சோஷல் டெமாக்ரஸி அங்கு வீழ்ந்தது. இந்த முக்கியமான நெருக்கடிச் சமயத்தில், சவாலை ஏற்றுக்கொண்டுவிடுவது என்று காந்திஜி முடிவு செய்தார். அவசியமானால், போராடிக்கொண்டே சாகும்படியும் காங்கிரஸுக்குக் கூறினார். அவர் ஆக்ஞையைப் பின்பற்றும் புத்திசாலித்தனம் காங்கிரஸுக்கும், தேசத்திற்கும் இருந்தது.

அறிவிற் சிறந்த அனேக ராஜீயவாதிகள், சந்தேகத்துடன் தலையை அசைத்தார்கள். பிரிட்டன் தன்னுடைய ஆயுதப் பலத்தையெல்லாம் திரட்டி வைத்திருக்கும் சமயத்தில், அமெரிக்காவின் முழுப் பலமும் அதற்கு உதவியாக இருந்துவரும் வேளையில், நிராயுதபாணிகளான இந்திய மக்கள் பிரிட்டனோடு போராடுவது வெறும் பைத்தியக்காரத்தனம் என்றே அவர்களுக்குத் தோன்றியது. எப்பொழுது காங்கிரஸ் காந்திஜியின் தலைமையில் புரட்சிகரமான ராஜீயத்தில் இறங்கிவிட்டதோ, அப்பொழுதே சம்பிரதாயமான ராஜீயப் புத்திசாலித்தனத்தையும் கைவிட்டுவிட்டது என்பதை இந்தப் புத்திசாலிகள் அப்பொழுது மறந்தே போய்விட்டனர். ஆபத்தானாலும், இறங்கி, லட்சியத்தை அடைந்தே தீருவது என்று காங்கிரஸ் துணிந்தது. தான் சரியாகத் தெரிந்துகொள்ளாத கிலாபத் பிரச்னையைத் தன்னுடைய பிரச்னையாகக் காங்கிரஸ் செய்துகொண்டபோது, காங்கிரஸ் வேண்டுமென்று புத்திசாலித்தனமானதாக இருந்ததா? சுதந்தரத்தை அடைய உப்புச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தபோது புத்திசாலித்தனமாக இருந்ததா? உப்புக்கும், சுதந்தரத்துக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. அப்படியிருக்கும்போது, கடற் கரையில் ஒரு சிட்டிகை உப்பு எடுப்பதற்காக, நிராயுதபாணிகளான தொண்டர்கள் கூட்டத்தை அழைத்துக்கொண்டு, 21 நாள் காந்திஜி கால் நடையாகப் போனதில் மாத்திரம் என்ன புத்திசாலித்தன மிருக்கிறது? பண்டித மோதிலால் நேரு, தமது மாளிகையில், ஓர் அறையில், ஒரு பிடி களர் மண்ணை விருந்து 'ஸ்பிரிட்' விளக்கில் கொஞ்சம் உப்புக் காய்ச்சியெடுத்தார் என்றால், அதில்தான் என்ன பெரிய புத்திசாலித்தன மிருக்கிறது? தனிப்பட்ட சத்தியாக்கிரகிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் கைதியாகும் வரையில், ஊர் ஊராக யுத்த எதிர்ப்புக் கோஷங்களை முழக்கிக்கொண்டு போகும்படிச் செய்ததில்தான் என்ன புத்திசாலித்தன மிருக்கிறது? இதற்கெல்லாம் உண்மை ஒன்றுண்டு. மகாத்மா காந்தியின் தலைமையில், காங்கிரஸ் சம்பிரதாயத்திற்கான காரியத்தை மாத்திரம் என்றும் செய்ததேயில்லை. சுதந்தரப் போர் முடிந்து, பூரண சுதந்தரமும் வருவதற்கு முன்னால், வெறும் சம்பிரதாயத்திற்காக மட்டும் காங்கிரஸ் காரியங்களைச் செய்வதாக இருந்தால், தனது புரட்சிகரமான காரியத்தைக் காங்கிரஸ் இழந்துவிடும்.

காங்கிரஸ் பலவீன மடைந்து, தோற்றுவிட்டது என்று அனேக

சமயங்களில் தோன்றிய துண்டு. காங்கிரஸ் அடியோடு நசுக்கப் பட்டது என்றே அன்னியச் சர்க்காரும் எண்ணியது.

போராட்டத்திற்குப் பிறகு பலவீனமாகிவிட்டதாகத் தோன்றும் இந்தக் காங் கிரஸ், சமயம் வரும்போது, முன்னிலும் அதிகப் பலத்துடனேயே விளங்கிவரு கிறது. துயரங்களினாலும் தியாகங்களினாலும், அடைந்த புதுப் பலத்துடன் தனது முழுப் பலத்தையும் உபயோகிக்க அது தயாராகவே நிற்கிறது.

1942 ஆகஸ்ட் போராட்டம் முடிந்தது. ஆனால், பிரிட்டிஷார் மறைந்துவிடவில்லை. அவர்கள் இங்கேதான் இருந்தார்கள். தேசமே சோர்ந்து போய்விட்டதாகத் தோன்றியது. இருளடைந்த அந்த நாட்களில், "நான் அப்பொழுதே சொல்லவில்லையா?" என்று சொல்லிக்கொண்டு, பல போலித் தீர்க்கதரிசிகள் புத்தி சொல்லக் கிளம்பினார்கள். காந்திஜிக்கும் காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர் களுக்கும் ஜெயில் கதவுகள் திறக்கப்பட்டவுடனே, மக்கள் மன முடைந்திருந்ததோ,தேசத்தி லிருந்த சோர்வோ,இருந்த இடமே தெரி யாமல் பறந்தோடிவிட்டன. எங்கும் புதிய உயிரும், உற்சாகமுமே பொங்குவதைக் கண்டோம்.

காங்கிரஸை நசுக்கிவிட்டதாகப் பெருமை யடித்துக்கொண் டிருந்த ஒரு சர்க்காருடன் பேசத் தலைவர்கள் சிம்லாவுக்குப் போனது, ஒரு வெற்றிப் பவனி; தோற்ற, அவமானப்பட்டவர்கள் பவனி அல்ல அது. பிறகு, மத்தியச் சட்டசபை, மாகாணச் சட்ட சபைத் தேர்தல்கள் வந்தன. இவற்றின் முடிவு பற்றி யாருக்குமே சந்தேகம் இருந்ததில்லை. காங்கிரஸின் கொள்கைகளில் புத்திசாலித் தனமே இல்லை என்று சொன்னவர்கள், அசெம்பிளி ஸ்தானங்களும், அதிகாரப் பதவிகளும் சீக்கிரத்தில் வரும் என்று தெரிந்ததும், காங் கிரஸுக்குள் திரும்பவும் வந்து, அந்தப் பதவி தங்களுக்கு வேண்டு மென்று கேட்கத் தலைப்பட்டனர். தங்களைப் பின்னால் விட்டுவிட்டு, மற்றவர்கள் முன்னால் போவதை அவர்கள் விரும்பவில்லை. திரும்ப வும் காங்கிரஸுக்குள் ஓடி வந்தார்கள். அவர்களையும் ஏற்றுக் கொண்டது காங்கிரஸ்.

காங்கிரஸுக்குத் தேசத்தில் ஆதரவு அதிகரித் திருக்கிறது என் பதைத் தேர்தல்கள் நிரூபித்துவிட்டன. போராடிக் கஷ்டப்பட்ட வர்கள் வெற்றி பெற்றார்கள்; உரிய வெகுமதியைப் பெற்றனர். நிரம்பப் பாடுபட்டவர்கள், அதிகத் துயரங்களை அனுபவித்தவர்கள் அனேகர் இப்பொழுது நம்முட னில்லை. தங்கள் ஒப்பற்ற உயிர் களைத் தேசாபிமானத்துக்கு விலையாகக் கொடுத்துவிட்டனர். நடந் திருப்பதை எண்ணிப் பார்த்து, இனிச் செய்ய வேண்டியதை வகுக்க நாம் இங்கே கூடியிருக்கும் இந்தச் சமயத்தில், தேசியப் போரின் வீரச் சிப்பாய்களின் ஞாபகத்திற்கு நமது மரியாதையைச் செலுத்த மறந்துவிடக் கூடாது. அவர்கள் இன்னாரென்பது தெரிந்தாலும், தெரியாதிருந்தாலும், அவர்களுக்கு நமது பணிவையும், மரியாதையை யும் தெரிவித்துக் கொள்ளுவோம். மற்றவர்கள் சுகத்திற்கு அவர்கள் துன்பப்பட்டார்கள். மற்றவர்கள் வாழ அவர்கள் உயிர் விட்டார் கள்.

பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கை மாறியதன் காரணமாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டித் தலைவர்கள் 1945 ஜூன் மாதத்தில் விடுதலை செய்யப்பெற்றார்கள். தலைமை இடத்தில் ஒரு தேசியச்

சர்க்கார் அமைப்பதைப் பற்றி விவாதிப்பதற்காக, வைசராய், சிம்லாவில், முக்கிய ராஜீயக் கட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டினார். அது அமைய அனுமதிக்கப்படாததினால், அந்த மாநாடு முறிந்தது. முஸ்லிம் லீக்கின் கோரிக்கைகள் நியாயமோ, நேர்மையோ அற்றவைகளென்று வைசராயே நினைத்தபோதிலும், அந்த விசித்திரமான கோரிக்கைகளுக்கு உடன்படவே அவர் சம்மதித்தார். "மந்திரி சபையில் லீக்கரல்லாத ஒரு முஸ்லிம், அவர் காங்கிரஸ்காரர் அல்லாதவரா யிருந்தாலும், வைசராயால் நியமிக்கப்பெறுகிறவராக இருந்தாலும், அதை அனுமதிக்க முடியாது" என்று லீக் தலைவர் சொன்னார். அவ்வளவு கஷ்டப்பட்டு, அவ்வளவு செலவில் எதற்காகத்தான் இந்த மாநாடு கூடியது என்பது புரியவே யில்லை. இதனால், தேசத்தில் ஏமாற்றமும், கோபமும் மிகுந்தன. "இந்தியாவைவிட்டு வெளியே போ" என்ற தீர்மானத்தின்படி இருப்பவர்கள், இப்பொழுது அமலி லிருக்கும் மோசமான அரசியலின் அடிப்படையில் கூட்டிய ஒரு மாநாட்டுக்குப் போக எப்படிச் சம்மதிக்கலாம்—என்று பலர் கேட்டனர். சத்தியாக்கிரகி, மெதுவாகத்தான் போரில் இறங்குவான். அமைதியான, கௌரவமான சமரசத்திற்குச் சந்தர்ப்ப மிருக்கிற தெனத் தெரிந்தால், சமரசத்திற்கு வர அவசரமாகவே முன் வருவான். அவனுடைய அடிப்படையான லட்சியத்தை ஒப்புக்கொள்வதா யிருந்தால், எதிரிகளுடனும் உட்கார்ந்து சமரசம் பேசச் சத்தியாகிரகி தயார். மேலும், அந்தச் சமயத்தில், உணவு நிலைமை தேசத்தில் நிரம்ப நெருக்கடியானதாக இருந்தது. அதிகார வர்க்கச் சர்க்கார் இதைச் சமாளிப்பதில் அடியோடு முன்னால் தவறியிருக்கிற தென்பது தெரிந்ததால், தேசியச் சர்க்கார் அமைந்தால் உணவு நிலைமையைச் சரியானபடி சமாளிக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்பெற்றது. அத்துடன், சிறிது காலம் அமைதியுடனிருந்து, தேசத்தின் நிலைமையைக் கவனித்தாக வேண்டிய அவசியமும் நாட்டுக்கு இருந்தது.

சிம்லா மாநாடு வீணாயிற்று. இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதற்குச் சரியான திட்டமொன்றைத் தாங்கள் சீக்கிரத்தில் கண்டுபிடிக்கப் போவதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் கூறியது. பிரிட்டிஷ் அதிகார வர்க்கமோ நிரம்ப மெதுவாக நகரும் யந்திரம். காலம் கடத்துவது என்பதும் பிரிட்டிஷ் வழக்கம். தங்களுக்குச் சங்கடமானதாகத் தோன்றும் காரியத்தைச் செய்யாமலேயே இருந்து விடக்கூடிய உள்நாட்டு நிலைமையோ, அல்லது ஏதாவது சர்வதேச நிலைமையோ மத்தியில் உண்டாகிவிட்டால், சங்கட மில்லாது போய் விடும் என்பதே அவர்கள் காலங் கடத்திக்கொண்டு போனதன் நோக்கம். என்றாலும், சாதகமான நிலைமை உண்டாக வில்லை. இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தல், பிற்போக்காளர்களான 'கன்சர்வேட்டிவ்'களுக்கு எதிராக முடிந்தது. பெரும்பான்மைப் பலத்துடன் தொழிற் கட்சியினர் அதிகாரத்திற்கு வந்தார்கள்.

ஆபத்தான நிலைமையை உண்டாக்கும் வகையில், சர்வதேச நிலைமையிலும் மாறுத லுண்டாயிற்று. சாம்ராஜ்யத்தில், இந்தியா பலவீனமான அம்ச மாகிவிட்டது. பிரச்னையைத் தீர்க்க ஏதாவது செய்தாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நிலைமையை அறிந்து,

விசாரித்துப்போகப் பார்லமென்ட்டரிக் கமிட்டி ஒன்றும் இங்கே வந்தது. அது வந்துவிட்டுப் போனதுமே, இந்தியா மந்திரி லார்டு பெதிக்-லாரன்ஸ் தலைமையில், பிரிட்டிஷ் மந்திரி சபைக் கோஷ்டி ஒன்று வந்தது. முக்கியமான கட்சித் தலைவர்களுடன் ஓயாது நடத்திய விவாதங்களுக்குப் பிறகு, மே 16-ந் தேதி, அறிக்கை மூலம் மந்திரி சபைக் கோஷ்டியினர் தங்கள் திட்டத்தை வெளியிட்டார்கள். சுதந்தர, ஐக்கிய இந்திய அரசியலை அமைக்க, அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவது என்பதும், இடைக்காலச் சர்க்காரை அமைப்பது என்பதுமே அந்தத் திட்டம்.

டில்லியிலும், சிம்லாவிலுமாகச் சுமார் மூன்று மாதக் காலம் நடந்த அந்த நீண்ட சமரசப் பேச்சுகளைப் பற்றிய விவரம் எல்லோருக்கும் தெரிந்ததே யாகையால், நான் இங்கே கூற வேண்டியதில்லை. இதன் பலன், அரசியல் நிர்ணய சபை அமைப்புத் திட்டத்தைக் காங்கிரஸும், லீக்கும் ஒப்புக்கொண் டிருந்தாலும், தலைமையில் இடைக்காலச் சர்க்காரை அமைக்க முடிய வில்லை. காங்கிரஸ் இல்லாமலே இடைக்காலச் சர்க்காரைத் தாங்கள் அமைக்க அனுமதிக்கும்படி லீக்கர்கள் வைசராயைக் கேட்டார்கள். வைசராய் இதற்குச் சம்மதிக்காது போகவே, கோபங்கொண்டு, அரசியல் நிர்ணய சபையிலும் லீக்கலந்து கொள்ளாது என்று பிறகு சொல்லி விட்டார்கள். எனவே, பிரிட்டிஷ் சர்க்காருடன் கலந்தாலோசித்துக் கொண்டு, பெரும்பான்மைக் கட்சியான காங்கிரஸைச் சர்க்காராக அமைக்கும்படி அழைப்ப தென வைசராய் முடிவு செய்தார். முஸ்லிம் லீக்கையும் சர்க்காருக்குள் கொண்டுவரும் வேலை புத்திசாலித்தனமாகக் காங்கிரஸிடமே விடப்பெற்றது. இதைக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டு, பண்டித ஜவாஹர்லால் நேரு, ஸ்ரீ ஜின்னாவைக் கண்டு பேசினர். வழக்கப் பிரகாரம், அந்த இடத்தி லிருந்து எதுவும் சாத்தியமாக வில்லை. ஆகையால், 1946 செப்ட்டெம்பரில், காங்கிரஸ் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டிய தாயிற்று.

உடனே, மந்திரி சபையி லிருக்கும் தமது சகாக்களைக்கூடக் கலந்தாலோசித்துக்கொள்ளாமல், வைசராய், தாமாகவே முஸ்லிம் லீக் தலைவர்களுடன் பேச்சு நடத்தினர். அப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவே யில்லை. காங்கிரஸுக்கு அளித்த அழைப்பு நிபந்தனையற்றது. என்றாலும், காங்கிரஸ் எப்பொழுதுமே ஒற்றுமையில் நாட்டமுடைய தாகையால், வைசராய் செய்த இந்தக் காரியத்தை ஆட்சேபிக்க வில்லை. வைசராய் மூலம், காங்கிரஸுக்கும் லீக்குக்கும் பேச்சுகள் நடந்தன. முறிவுதான் பலன். கடைசியாக, 14 பேர்களடங்கிய மந்திரி சபையில், லீக் ஐந்து பேர்களை நியமிப்பது என்ற வைசராயின் அழைப்பை லீக் ஏற்றுக்கொண்டது. இதனால், இன்று, நமது பிரதிநிதிகளுடன் லீக் பிரதிநிதிகளும் சகாக்களாகத் தேசியச் சர்க்காரில் வேலை செய்துகொண் டிருக்கிறார்கள். ஒரே விதமான கஷ்டங்களைச் சமாளித்து, ஒரே வகையான பிரச்னைகளைத் தீர்த்து, பரீட்சார்த்தமான ஒருவகை ஒற்றுமை உண்டாகி, இந்தக் கஷ்டமான காலத்தைக் கடக்கப் பிரயோசனமா யிருக்கும் என்றே எதிர்பார்க்கிறார்கள்.

1942 ஆகஸ்ட்டில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சவாலைக் காங்கி

ரஸ் ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்குமானால், இன்று காங்கிரஸ் எந்த நிலைமையில் இருக்கிறதோ அந்த நிலைமையில் இருந்திருக்கவே முடியாது என்பதுதான் என் நம்பிக்கை. இந்த உண்மையை அவர்களில் சிலர் ஒப்புக்கொள்ள விரும்பாவிட்டாலும், முஸ்லிம் லீக்கோ, மற்றச் சிறுபான்மையினரோ இன்றிருக்கும் நிலைமையிலும் இருந்திருக்க முடியாது. நாம் நமது லட்சியமான பூரண சுயராஜ்யத்தை இன்னும் அடைந்துவிடவில்லை என்பது உண்மை. நமது பிரதிநிதிகளும், தலைவர்களும் அதிகாரத்தின் கோட்டையை உடைத்துக் கொண்டு உள்ளே போயிருக்கிறார்கள். அன்னிய ஆதிக்கத்திற்கு இதுவே அந்திமம் அல்ல. நமக் கிருக்கும் சந்தர்ப்பத்தை எப்படி உபயோகித்துக்கொள்வ தென்பது நமக்குத் தெரிந்திருந்தால், அந்திமத்திற்கு இது ஓர் ஆரம்பம். மேலும், நமது லட்சியமான பூரண சுதந்தரத்தை அடைந்துவிட்ட பிறகுகூட, நம் வேலை யெல்லாம் முடிந்துவிட்டதாக, நாம் எண்ணி விடுவதற் கில்லை. தேசியச் சுதந்தரம் நிரம்ப அருமையானது. அதுதான், ஒரு தேசத்தின் ஜீவநாடி. அது நிரம்ப முக்கியமானதேயானாலும், அதைப் பெறுவதன் மூலம் நாம் அடைந்த தெல்லாம் வெளியாரின் விலங்கை நீக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதுதான். ஒருவனுடைய விலங்குகள் நீக்கப்பட்டதும், தனக்குப் புதிதாகக் கிடைத்த சுதந்தரத்தை அவன் தனக்குக் கெடுதலானதாக உபயோகித்துக்கொண்டுவிடுவதும் சாத்தியம். நாம் புத்திசாலிகளாக இருந்தால், வெளியாரின் தடைகள் நீங்கியதோடு திருப்தி யடைந்துவிடமாட்டோம். அடைந்த சுதந்தரம் நமது மக்களுக்கு நன்மை யளிப்பதாக அமையும் வகையில் காரியங்களை அமைத்துக்கொள்வோம். நமது புரட்சி உத்வேகம், பழமையை யெல்லாம் நாச மாக்கிவிடுவதாக இருந்தாலும், ஆக்க வேலைகளில் ஆக்க உணர்ச்சியைத் தருவதாகவும் இருக்க வேண்டும்.

ஆக்க வேலையில் நாம் செய்யும் முயற்சி நமக்குப் புதி தல்ல. அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட நம் புரட்சி இயக்கம் சரித்திரத்திற்கே ஒரு புதுமை. பழமையை யெல்லாம் பொதுவாக அழிப்பதே ராஜீயப் புரட்சிகளின் நோக்கம். அதிகாரத்தைக் கைப்பற்றுவதை அடிப்படையாகக் கொண்டதே அந்தப் புரட்சிகளின் போர் முறை. பழமையை யெல்லாம் அடியோடு நாசமாக்கி, அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகே ஒரு தேசத்தின் வாழ்க்கையை மாற்றி யமைக்கும் வேலைக ளெல்லாம் ஆரம்ப மாகின்றன. இந்த முறையில் போவதால், முடிவாக ஆக்க வேலை ஆரம்பமாவதற்கு முன்னால், அனேகப் புரட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடக்க வேண்டிய தாகிறது. இந்த முறையினால், உள்நாட்டு யுத்தங்க ளுண்டாகி, முடிவில், சர்வாதிகார, ஆட்சி ஏற்பட்டுவிடுவதும் உண்டு. உள்நாட்டுச் சண்டையும், சர்வாதிகார ஆட்சியும், எப்பொழுதுமே புரட்சியின் நோக்கத்தை நாசமாக்கிவிடும் போக்குடையவை. பிரஞ்சு, ருஷ்யப் புரட்சிகளின் முடிவில் இதுதான் நடந்தது.

காந்திஜியின் தலைமையில் நாசம்செய்வது என்பதில் மாத்திரமோ, அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதில் மாத்திரமோ காங்கிரஸ் அதிக உற்சாகம் காட்ட வில்லை. ஆக்க வேலைத் திட்டத்தையே காங்கிரஸ் அதிக முக்கியமாகக்கொண் டிருக்கிறது. அதன் அழிப்பு

வேலையும், ஆக்க வேலையும், ஒரே காலத்தில், சென்ற 26 வருஷ காலமாக மேற்கொள்ளப்பெற்றுவருகின்றன. சட்டமறுப்புக்குச் சரியான தயாரிப்பு, ஆக்க வேலைகளைத் தீவிரமாக மேற்கொள்ளு வதே என்பது காந்திஜியின் கருத்து. பல மாகாணங்களில், காங்கிரஸ் இப்பொழுது ஆட்சியில் இருக்கிறது. தலைமை இடத்திலும் ஒரு வகை யான தேசியச் சர்க்கார் இருக்கிறது. ஆகையால், காந்திஜியால் ஆரம்பிக்கப்பெற்று, காங்கிரஸில் ஒப்புக்கொள்ளப்பெற் றிருக்கும் நிர்மாண வேலைத் திட்டத்தைத் தீவிரமாக அமலுக்குக் கொண்டு வந்து, முழுச் சௌகரியங்களையும் அடைவது கஷ்டமே அல்ல.

தேசியப் போராட்டம் அபிவிருத்தி அடைய அடைய, நமது சுயராஜ் யம் என்ன என்பதும் நமக்குத் தெளிவாகி வருகிறது. அழித்து, அதி காரத்தை வகிப்பதையே அனுஷ்டிப்ப தில்லை என்று முன்பே நாம் முடிவு செய்துவிட்டோம். ஆகையால், கைத் துப்பாக்கியையும், வெடி குண்டையும் உபயோகிப்பதைத் தள்ளிவிட்டோம். நமது புரட்சி, பகிரங்கமான ஒரு சதியாக இருக்கவேண்டும், பொதுமக்கள் இதில் ஈடுபட வேண்டும் என்ற முடிவுக்கும் வந்தோம். ஆகையால், ரகசிய மற்றதும் அகிம்சையைக் கொண்டதுமாகவே அது இருக்க முடியும். பொதுமக்களால், அதுவும் அகிம்சையால், ஏற்பட்ட புரட்சி மக்கள் ஆட்சி யாகிறது. ஆகையால், நமது காங்கிரஸ், மக்கள் ஆட்சியை அனுசரித்த அமைப்பை உடையது. மக்கள் ஆட்சி வெறும் சம்பிரதாயமானதாக இல்லாமல், உண்மையானதாகவும், காரியத்தில் பலனளிப்பதாகவும் இருக்க வேண்டுமானுல், அது அகிம்சையை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கவேண்டும். அகிம்சை வெறும் வாய்ப்பேச் சோடு நின்றுவிடாததாக இருந்தால், அது, குடிமக்கள் ஆட்சிக்குப் போய் முடிய வேண்டும். அகிம்சைக்கும் சர்வாதிகாரத்வத்திற்கும் நேர் விரோதம். நாம் காங்கிரஸின் மக்கள் ஆட்சித் தத்துவத்தைத் திடீரென்று மாற்றிவிட முடியாது. மாற்றி விடுவதும் விருப்பத் தக்கதல்ல. ஆகை யால், ராஜீய மக்கள் ஆட்சியே நமது லட்சியம். நமது சுயராஜ்யம் மக்கள் ஆட்சியாகவே இருக்கும் என்பது மிகவும் தெளிவானது. எவ்வளவு பெரியவரா யிருந்தாலும், ஒரு தனிப்பட்டவரின் ஆட்சியாகவோ, எவ் வளவு கீர்த்திவாய்ந்த தானுலும், ஒரு குடும்பத்தின் ஆட்சியாகவோ அது ஒருகாலும் இருக்காது. ஒரு குறிப்பிட்ட மதம், ஜாதியின் கீழ் உள்ள சுயராஜ்யமாகவும் அது இருக்காது. மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும், மக்களின் ஆட்சியாகவே அது இருக்கும்.

ஒரு வகையான பொருளாதார அமைப்பின் அடிப்படையில் மக்கள் ஆட்சி அமைக்கப்படாவிட் டால், ராஜீய மக்கள் ஆட்சி ஒரு வெறும் முறை என்ற அளவுக்குத்தான் உலகத்தில் போய்க்கொண் டிருக்கிறது என்பதைப் பார்த்திருக்கிருேம், செல்வத்தில் தாரதம்யம் ஏராளமாக இருக்கும் சமூகத் தில், மக்கள் ஆட்சி என்பதற்கு அர்த்தமே இல்லை. ஐரோப்பாவி லிருக்கும் சிறிய நாடுகளான நார்வே, ஸ்வீடன், டேன்மார்க் ஆகியவைகளில், பெரிய முதலாளித்துவ நாடுகளைவிட உண்மையான மக்கள் ஆட்சி அதிக மிருக்கிறது. இந்தச் சின்ன நாடுகளின் மக்கள் ஆட்சி, பொருளாதாரச் சமத்து வத்தை அதிகமாகப் பெற்றிருப்பதே இதற்கு முக்கியமான காரணம்,

ஆனுல், பொருளாதாரச் சமத்துவம் என்பது, தலைமை இடத்தின் நிர்வாகத்தின் கீழ் முக்கியத் தொழில்களை யெல்லாம் கொண்டுவரும் முறையைக் கொண்ட கம்யூனிஸ்ட் வகையாக இருக்க லாம், மக்கள் ஆட்சித் தத்துவத்தை அனுசரித்துப் பகுதி பகுதிகளாகப் பிரித்துவிடுவதாகவும் இருக்க லாம். பெரிய தொழிற்சாலைகளையே கொண்ட பொருளாதார முறை, ஒரு சிலருடைய கையிலேயே அதிகாரமெல்லாம் போய்விடுவதில்தான் முடிகிறது, இதில், பொருளாதாரச் சமத்துவம் அப்படித் தான் ஆகும் என்பதே என் நம்பிக்கை. இது, அதிகாரவர்க்க, சர்வாதிகார ஆட்சியாகவும் முடிகிறது, இப்பொழுது, மக்களின் ராஜீய வாழ்வையே யன்றிப் பொருளாதார வாழ்க்கையையும் ஆளுவோர் கட்டுப்படுத்திவிடுகிருர்கள், அதிகாரம் வகிப்பவர்களை ராஜீய அதிகாரம் கெடும்படிச் செய்வதாகி விட்டால், ராஜீய, பொருளாதார அதிகாரம் ஒரே கையில் போய், நிலைமை இன்னும் மோசமாகிவிடு கிறது. நேர்முகமாகவோ, பரைமுகமாகவோ முதலாளிகளே ராஜீய அதிகாரத்தையும் வகிக்க

முடியாததினலேயே, முதலாளித்துவம் மக்கள் ஆட்சித் தத்துவத்தைக் கொன்றுவிட்டது. பொதுவுடைமை ராஜீயச் சர்வாதிகாரியிடமும், அதிகார வர்க்கத்தின் கையிலும், பொருளாதாரச் சக்தியை நிர்வகிக்கும் அதிகாரத்தையும் ஒப்படைத்துவிடுகிறது. முதலாளித்துவத்தி லிருப்பதைப் போலவே பொது வுடைமைத் தத்துவத்திலும் மக்கள் ஆட்சிக்கு இதில்தான் ஆபத்து இருக்கிறது.

ஆகையால், மக்கள் ஆட்சி சாகாம லிருக்க வேண்டுமானல், அதிகாரத்தி லிருப்பவர்கள் நியமிக்கப்பெற்றவர்களாக இருந்தாலும், தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களாக இருந்தாலும், அவர்கள் கையில் பொருளாதார அதிகாரம் போய்ச் சேர்ந்துவிடாதபடி தடுக்க வேண்டியது முக்கியம். தனிப்பட்டவர்கள் சுயேச்சையாகக் காரியம் செய்வதற்கு இடமில்லை யென்ருல், ராஜீய மக்கள் ஆட்சியே சர்வாதிகாரத்துவ மாகிவிடலாம். ஆகையால், பொருளாதாரத் துறையில், கைத்தொழில்க ளெல்லாம் ஆங்காங்குத் தனித்தனியாகவே இருந்து வர வேண்டும் என்ற சரித்திரப் பூர்வமான கொள்கையைக் காங்கிரஸ் மேற்கொண் டிருக்கிறது. வங்காளப் பிரிவினை இயக்கம் ஆரம்பமான காலம் முதற்கொண்டே, நமது ராஜீய அறிஞர்கள் கிராமத் தொழில்களை விருத்தி செய்ய வேண்டு மென்று வற்புறுத்தி வந்திருக்கிருர்கள். காந்திஜி இந்திய ராஜீய அரங்கத்தில் நுழைந்ததும், அந்த முயற்சிக்குப் புதிய உற்சாக மளிக்கப்பெற் றிருப்பதுடன், உருப்படியான தேசியப் புனருத்தாரணத் திட்டமும் அமலுக்குக் கொண்டுவரப்பெற் றிருக்கிறது. நமது ஜனத்தொகையில் பெரும்பான்மையோராக இருக்கும் நமது விவசாயிகள் வேலையற் றிருப்பதற்குப் பரிகாரம் தேட வேண்டிய அவசியமும் நமக்கு இருக்கிறது.

1939-ல், பண்டித ஜவாஹர்லால் நேருவின் தலைமையில், தேசியத் திட்டக் கமிட்டி ஒன்றையும் காங்கிரஸ் அமைத்தது. பல வருஷங்களாக இந்தக் கமிட்டி வேலை செய்து வருகிறது. பல விவரங்களை இவர்கள் சேகரித் திருக்கிருர்கள். இவர்கள் வேலைகளைக் காரியத்தில் உபயோகித்துக்கொள்ள வேண்டிய சமயம் வந்திருக்கிறது. ஆனல்,

எந்தத் தொழில்களை ஒரு தலைமையின் கிழ்க் கொண்டுவருவது, எந்தத் தொழில்களைத் தலைமையிலிருந்தும் தனித் தனியே பிரித்துவிடுவது என்பதில் காங்கிரஸ் ஒரு திட்டமான முடிவுக்கு வந்தாலொழிய, அதைச் சரியானபடி உபயோகித்துக்கொள்ள முடியாது. இதைச் செய்தாலொழிய, ஒவ்வொரு மாகாணமும் அதனதன் போக்கில் நடந்துகொண்டேதான் போகும். பெரிய தொழில்களின் துறையில், இப்பொழுதே மாகாணங்களுக் கிடையே போட்டி பலமா யிருக்கிறது. ஒவ்வொரு மாகாணமும் எத்தனை மில்களையும், கைத் தொழில்களையும் ஆரம்பிப்பது சாத்தியமோ, அத்தனையையும் ஆரம்பித்து விடுவது என்று முயலுகிறது. ஒரு தலைமையின் கீழிருந்து எடுத்துவிடுவதற்கு ஏற்ற தொழில், ஜவுளி உற்பத்தித் தொழிலே என்று நாம் எண்ணி வந்திருக்கிறோம். இதில்கூட ஒவ்வொரு மாகாணச் சர்க்காரும் புதிய மில்களை ஏற்படுத்த மற்றச் சர்க்கார்களுடன் போட்டி போட்டுவருகிறது.

இப்பொழு திருக்கும் துணிப் பஞ்ச நிலைமையில், உற்பத்தியை அதிகரிப்பதற்கான எல்லாச் சாதனங்களையும் உபயோகித்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று சிலர் நினைக்கிருர்கள். ஆனல், இது சுயநல முதலாளிகளுடைய ஸ்தாபனங்களை அதிகரித்து விடுகிறது என்பதை அறிய இவர்கள் தவறிவிடுகிருர்கள். புதிய மில்களை ஆரம்பிப்பதற்குப் பதிலாகச் சர்க்காவுக்கும், கை நெசவுக்கும் ஒழுங்காக ஆதரவளித்து வந்தால், வெகு சீக்கிரத்தில், குறைந்த

செலவில், உற்பத்தியை அதிகமாகப் பெருக்கிவிட முடியும். கதர் ஊழியன் என்ற முறையில், இதுவே என் நம்பிக்கை. துணி உற்பத்தித் தொழிலை நான் உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டேன். ஆனால், எந்தத் தொழில்களை ஒரு தலைமையின் கீழ்க் கொண்டுவருவது, எந்தத் தொழில்களை அப்படிக் கொண்டுவராமல் விருப்பது என்பதில் நாம் நமக்குள் யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஒரு தலைமையின் கீழ்க் கொண்டுவராத கிராமத் தொழில்களைப் பற்றி நான் சொல்லும்போது, கைப் பலத்தை மாத்திரமே தொழில்களில் உபயோகிக்க வேண்டும் என்று சொல்ல வில்லை.

தொழிலாளி, தன் கிராமத்தில், தன் வீட்டில், தொழிலில் திறமையையும், அபிவிருத்தியையும் செய்ய மின்சாரச் சக்தியைத் தாராளமாக உபயோகித்துக்கொள்ளலாம். இப்படிச் செய்வதால், பெரிய தொழிற்சாலைகளில் ஏற்படும் வேலை நிறுத்தம், கதவடைப்புப் போன்ற தகராறுகளால் தேசியச் செல்வம் வியர்த்தமாகி விடுவதைத் தடுப்பதும் சாத்திய மாகிறது. இந்தத் தகராறுகள் தவிர்க்கப்பெறுவதனாலேயே, சமூகமாகச் சகோதரத்துவம் வளரும். இந்தத் தொழில்களைக் கூட்டுறவு முறையில் அமைத்துக்கொள்ளலாம். உற்பத்திக்குக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் உடனே சாத்திய மில்லையானால், பொது ஸ்தாபனங்களும் மாகாணச் சர்க்கார்களும் விநியோகக் கூட்டுறவு ஸ்தாபனங்களைச் சுலபமாய் அமைக்கலாம். விற்பனை செய்வதில்தான் ரகிராமத் தொழிலாளிகளுக்குக் கஷ்ட மிருக்கிறதே யன்றிச் உற்பத்தியில் அவர்களுக்கு அவ்வளவு கஷ்ட மில்லை

நமது விவசாயமும் ஒரு தலைமையின்கீழ்ப் போய்விடாத முறையிலேயே அமைய வேண்டும். நிலம் விவசாயிகளுக்குச் சொந்தம் என்ற வகையில் இருக்க வேண்டும். ஒரு கிராமக் குடும்பத்திற்குப் போதுமானதாக இருப்பதற்குக் குறைந்ததாக—வாரிசு, கடன் அல்லது வேறு காரணங்களுக்காக நிலம், துண்டிக்கப்பெற்றுவிடாதபடியும் இருக்க வேண்டும். கிராமத் தொழில்களும், விவசாயமும் ஒன்றுக் கொன்று உதவியாகவும் இருக்க வேண்டும். சாகுபடி விற்பனைகளில், கூட்டுறவு முறையை அனுஷ்டித்ததாகவே விவசாயம் இருக்க வேண்டும்.

சர்க்காருக்கும், விவசாயிக்கும் மத்தியில் இருப்பவர்களைப் போக்கிவிடுவது என்ற கொள்கையைக் காங்கிரஸ் மேற்கொண்டிருக்கிறது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் சமீபத்தில், கொண்டுவரப்பெற்ற ஒரு தீர்மானத்தை அனுசரித்து, ஜமீன்தாரி முறையை ஒழித்துவிடுவதற்குத் தங்கள் திட்டங்களை அ. இ. கா. கமிட்டிகளுக்கு அனுப்பும்படி மாகாணச் சர்க்கார்களைக் கேட்டுக்கொள்ளுவ தென்றும் காரியக் கமிட்டி முடிவு செய்தது. கிடைத்திருக்கும் தகவல்களை ஒழுங்குபடுத்திக் காரியக் கமிட்டியின் ஆலோசனைக்கு வைப்பார்கள். இந்த விஷயத்தில் காரியக் கமிட்டி கூறும் யோசனை, துரிதமாக நிறைவேற்றிவைக்கப்பெறுவதுடன், மத்தியி லிருக்கும் ஜமீன்தார்களை ஒழிப்பதற்கு நிபுணர்களை நியமித்துச் சரியான திட்ட மொன்றும் அமைக்கப்பெறும் என்று நினைக்கிறேன். இந்த நிபுணர்கள், பல தரப்பட்ட மாகாணங்களின் தேவைக்கு ஏற்றபடி, அதிக வித்தியாச மில்லாத திட்டத்தைக் கூறலாம். ஜமீன்தாரி முறையை ஒழிப்பதற்கு ஐக்கிய மாகாணத்தில் சீக்கிரத்தில் சர்க்காரே ஒரு மசோதா கொண்டுவரப்போகிறது.

அவள் இப்பொழுது தாயாருக்கு உதவி செய்துகொண்டு, தன் வாழ்க்கைக்கு அறிய வேண்டுவனவற்றைப் படிப்படியாக அறிந்து வருகிறாள். நாள்தோறும் லைப்பாய் சோப்பை உபயோகிக்க தாயும் அவளுக்குக் கற்பிக்கிறாள். ஒவ்வொரு குடும்ப ஆரோக்கியத்திற்கும் சந்தோஷத்திற்கும் ஆபத்தான அழுக்கு அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள அவளுக்கு பாதுகாப்பை அளித்திருக்கிறாள்.

லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது. அது ஒரு நல்ல பழக்கம்

L. 79-50TM — LEVER BROTHERS (INDIA) LIMITED

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

'சாரதி'
கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

உலகெங்கிலும்
மிகவும் போற்றப்
பெற்றது!
ஸிரோலின்
'ரோச்'
சுவாஸகோச
உபாதைகளுக்கு சிறந்தது

சட்டசபை நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தை அனுசரித்து ஒரு மசோதா தயாரிக்க ஒரு கமிட்டியும் நியமிக்கப்பெற் றிருக்கிறது. இந்த மசோதா அதிக எதிர்ப்பின்றி நிறைவேறிவிடும் என்றே நம்புகிறேன். ஜமீன்தார்களுக்குப் போதுமான நஷ்ட ஈடு தருவதென்பதும் மசோதாவி லிருப்பதால், ஜமீன்தார்களுக்கு ஆட்சேபணை இருக்க இட மில்லை.

யுத்தக் காலத்தில் ஆபத்தான நிலைமைக்கு வந்துவிட்ட உணவுப் பிரச்னை, நாம் இன்னும் அதிகமாகக் கவலைப்படவேண்டிய நிலைமைக்கே வந்திருக்கிறது. வெளிநாடுகள் தயவுவைத்து என்ன தானங் கொடுக்கின்றனவோ, அவற்றிற்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமையிலேயே நாம் இருக்கிறோம், வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவைகளைப் பொறுத்தவரையில், அன்னிய நாடுகளை எதிர்பார்த்துக்கொண் டிருப்பதென்பது நீக்கப்பெறவேண்டும். தகுந்த விவசாயச் சீர்திருத்தத்தைச் செய்தால், இப்பொழுதிருக்கும் ஜனத்தொகைக்கு மாத்திரமேயன்றி, இன்னும் கொஞ்சம் அதிகரித்தாலும் உணவுப் பஞ்சம் இல்லாதபடிச் செய்வது கஷ்டமல்ல. நமது விவசாய உற்பத்தி மிகவும் குறைவானது. ஜப்பானில் ஓர் ஏக்கருக்கு 1909 ராத்தல் அரிசி உற்பத்தியாகிறது. நமது தேசத்திலோ ஏக்கருக்கு 774 ராத்தலே கிடைக்கிறது. எனவே, விவசாய ஆராய்ச்சியின் மூலம் உற்பத்தியை அதிகரிக்க வழி யிருக்கிறது. கிணறு, கால்வாய்ப் பாசன வசதியும், நல்ல எருவும் இருந்தால், சாகுபடி செய்வதற்குத் தகுதியான தரிசு நிலம் எவ்வளவோ இருக்கிறது. உணவுப் பொருள்கள், விற்பனைக்குப் பயிரிடும் பொருள்களில், விவசாயிக்குச் சம லாபம் கிடைக்கும் வகையில், இந்த இரண்டையும் சட்டப்படி அளவுபடுத்த வேண்டியதும் அவசியம். இதைச் செய்யாவிட்டால், சும்மா விவசாயிகளுக்கு உபதேசிப்பதனால் மாத்திரம் அதிகப்பணம் தரும் பொருள்களைச் சாகுபடி செய்வதை நிறுத்திவிட்டுக் குறைந்த வருமான முள்ளவைகளைச் சாகுபடி செய்ய விவசாயிகள் முற்பட்டுவிட மாட்டார்கள். மனிதரின் போஷாக்குக்கு அத்தியாவசியமான பொருள்களைப் பொறுத்த வரையில், தேசத்தைப் பெரிய அல்லது சிறிய பிராந்தியங்களாகப் பிரித்து, அந்தப் பிராந்தியங்கள் அவற்றுக்கு வேண்டியதை அவையே உற்பத்தி செய்துகொள்ளும்படிச் செய்தால்தான் இப்பொழுதும், இனியும் பஞ்சம் வராதபடி தடுக்க முடியும். சரியான சத்துள்ள ஆகாரங்களைப் போதுமான அளவு இந்தப் பிராந்தியங்களில் உற்பத்தி செய்யும்படியும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நமது தேசத்தின் ஜீவநாடிகளான விவசாயிகளின் தேகநிலை இப்பொழுது மோசமானதாக இருக்கிறது. நல்ல சத்துள்ள ஆகாரம் தினம் இரண்டு வேளை விவசாயிக்குக் கிடைக்கும்படிச் செய்தாலொழிய, விவசாயிகளின் தேக நிலை விருத்தியே அடையாது. கிராமாந்தரங்களில், சுகாதாரத்திற்கும், தேக சுகத்திற்கும் சரியான ஆகாரம் இருப்பது முதல் அவசியம். சரியான சத்துள்ள ஆகாரம் எது என்பதில் இன்னும் அதிக ஆராய்ச்சி அவசியம். காந்திஜியின் முயற்சியால், இதில் பிரயோசனகரமான ஆரம்பம் செய்யப்பட்டிருக்கிறது.

தலைமைச் சர்க்காரில், நமது சிரேஷ்டமான தலைவர் பாபு ராஜேந்திரப் பிரசாத் இருக்கிறார். ஜாக்கிரதையாகவும், சிரத்தையாக வும் காரியங்களைக் கவனிக்கும் அவரே நமது உணவு நிர்வாக இலாக் காவை நிர்வகித்து வருகிறார். நமது இப்போதையக் கஷ்டத்தைத் தவிர்க்க மாத்திரமின்றி, எதிர் காலத்தில் எப்பொழுதுமே உணவுக்கு மற்றொரு நாட்டினிடம் கெஞ்சிக்கொண்டு போக வேண்டிய நிலைமை இல்லாதபடிச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் அவர் செய் வார்: அதில் எனக்கு எந்த விதச் சந்தேகமும் கிடையாது.

மேலிருப்பவர்களையும், கீழிருப்பவர்களையும் சமப்படுத்தும் பொருளாதார முறை இல்லையானால், இந்தக் கால உலகில் மக்கள் ஆட்சித் தத்துவம் சாத்தியமில்லையென்றால், சர்வதேசப் பகைமைகளி ருக்கும் வரையில், அடிக்கடி உலக யுத்தங்களும் இருந்துகொண்டுதா னிருக்கும். யுத்தத்தில் அதிகாரமெல்லாம் ஓர் இடத்தில் போய்க் குவிந்துவிடுகிறது. பொதுஜன உரிமைகளெல்லாம் குறைகின்றன. சங்கமாகச் சேர இருக்கும் உரிமை, அபிப்பிராயத்தைத் தாராளமாக வெளியிட இருக்கும் உரிமை, பிரசங்க மூலம், பத்திரிகை மூலம், ரேடியோ மூலம் தெரிவிக்கும் உரிமையெல்லாம் தடுக்கப்பட்டுவிடு கின்றன. இந்தக் கால யுத்தம் உலக யுத்தமாகவே முடிகிறது. நடு நிலைமையுடன் மிகச் சில நாடுகளே இருக்க முடியும். நடு நிலைமை நாடுகளிலும் யுத்தப் பயம் பொதுஜன உரிமைகளைக் குறைத்துச் சர்க் கார் ஆதிக்கத்தை அதிகப்படுத்திவிடுகிறது. ஆகையால், மக்கள் ஆட்சி சரியாகவும், முற்றிலும் நடைபெற வேண்டுமானால், சர்வ தேசச் சச்சரவும், யுத்தத்திற்குப் பதிலாகப் பரஸ்பர நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் ஏற்பட வேண்டும். ஒரு நாடு யுத்த விஷயத்தில் மேற்கொள்ளும் முறையினால் மாத்திரம் தீர்த்துவிடக்கூடிய பிரச்னை யல்ல இது. பாசிஸ்டாயிருந்தாலும், மக்கள் ஆட்சித் தத்துவ முடையதாயிருந்தாலும், சோஷலிஸ்ட் கொள்கை யுடையதாக இருந்தாலும், ஏகாதிபத்தியங்கள் இருக்கும் வரையில், சர்வ தேசங் களின் தகராறுகளைத் தீர்ப்பதற்கு யுத்தம் உபாயமாகவே இருக்கும்.

சோவியத் ஏகாதிபத்தியங்கள் என்றும் கூறியிருக்கிறேன். சோஷலிசமும் சாம்ராஜ்யமும் ஒன்றுக்கொன்று விரோதமானவை என்று கூறி, நான் சொல்வதை ஆட்சேபிக்கலாம். மக்கள் ஆட்சியும் ஏகாதிபத்தியமும்கூட அப்படித்தான். என்றாலும், ஏகாதிபத்திய மக்கள் ஆட்சிக ளிருக்கின்றன. மக்கள் ஆட்சியைப் போலவே, சோஷலிசத்திலும் பொருளாதார, ராஜீய ஏகாதிபத்திய மிருப்பதும் பொருத்தம். அக்கம் பக்கத்தி லிருப்பவர்களை ஆக்ரமிப்பது என்ற ருஷ்யப் போக்கைச் சோவியத் ருஷ்யா விட்டுவிட்டது என்பது இனியே நிரூபிக்கப்பட வேண்டும். தன் கீழிருக்கும் ஏகாதிபத்திய நாடுகள் மீது தான் கொண்டிருக்கும் பிடிப்பைத் தளர்த்திவிடச் சோஷலிஸ்ட் பிரிட்டிஷ் சர்க்கார் தயாராயிருக்கிறது என்பதற்கான அறிகுறி எதையும் காணோம். இந்தியாவில் அவர்கள் மேற்கொண் டிருக்கும் முறைகள், அரை குறையானவையாகவே இருக்கின்றன. இதனால், இவைகளும் சர்வ தேச நிலைமையினால் ஏற்பட்டனவே யன்றி, ஏகாதிபத்தியத்தை விட்டுவிட வேண்டும் என்ற உண்மை யான எண்ணத்தினால் அல்ல என்ற சந்தேகமே உண்டாகிறது.

நமது சுதந்தர இயக்கம் அகிம்சையையும், பொதுஜன நன்மையையும் லட்சியமாகக் கொண்டிருப்பதால், நமது சுதந்தர இயக்கத்தின் சரித்திரப் பூர்வமான விருத்தி, பிறரைச் சூறையாடுவது இன்றி, மக்கள் ஆட்சி முறையும், சர்வதேச ஒத்துழைப்பும், சமாதானமும் வேண்டும் என்று விரும்புகிறது. அத்தகைய சமுதாயம் ஒன்றே நாம் வசிக்கும் இந்தச் சமயத்திற்கும், உயர்ந்த லட்சியத்திற்கும் ஏற்றது. காந்திஜியின் தலைமையில் காங்கிரஸ் இந்த நோக்கங்களுக்காகவே பாடுபடுகிறது. இவைகளை அடைவதற்காகக் காங்கிரஸ் தனது லட்சியத்தை இன்னும் தெளிவாக விளக்குவதுடன், தான் புதிதாகப் பெற்றிருக்கும் சக்திகளை, அவைகளை அடைவதற்காக உபயோகிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

இன்று, ஒரு விதமான தேசியச் சர்க்கார் இருக்கிறது. மாகாணங்களில், தேர்ந் தெடுக்கப்பட்ட மக்கள் சர்க்கார் இருக்கிறது. வெகு சீக்கிரம், இந்தியாவுக்குப் புதிய அரசிய லமைப்பை வகுப்பதற்காக, நாம் கூடப் போகிறோம். சுதந்தரத்தை இன்னும் நாம் பெறவில்லை. பின்னால், அதோ கண்ணுக்குத் தெரிகிறது. பிரிட்டிஷாரின் உத்தேசம் எப்படி யிருந்தாலும், அவர்களால் சுதந்தரம் நமக்குக் கிடைக்காதபடி செய்துகொண் டிருக்க முடியாது.

இன்றைக்கு நமது லட்சியத்தைத் தவற விட்டுவிட்டால், அந்தக் குற்றம் நம்முடைய தாகும். இந்த நெருக்கடியான கட்டத்தில் செய்யத் தவறியதைப் பொறுத்து இந்தக் குற்றங்கள் ஏற்படும். நோயாளிக்குப் பெரும் ஆபத்து, நோயாகப் படுத்திருக்கும் பொழுது அல்ல. அவர் குணமாகி வரும் பொழுதுதான் அது ஏற்படும். டாக்டர், தமது கவனிப்பைச் சற்றுக் குறைத்துக்கொள்வார். அப்பொழுது நோயாளியே அதிகக் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். நாம் மிகவும் நெருக்கடியான வேளையில் இருக்கிறோம். மிக்க ஆபத்தான விஷயம் என்ன? நமது எதிரிகள் ஜாக்கிரதையாகவும், கெட்டிக்காரர்களாகவும் இருப்பதுதான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு இந்தியாவி லிருக்கும் மிகப் பெரிய பலம், தனது இழிவான சூழ்ச்சி வேலைத் திட்டத்தை, இந்தியர்களை உபயோகித்து, அவர்களைக் கொண்டே நிறைவேற்றிக்கொள்வதுதான்

இந்தியப் பணத்தால், இந்தியாவில் கிடைத்த பலத்தால், இந்தியச் சிப்பாய்களைக்கொண்டு—ஏன், இந்தியர்களின் திறமையை உபயோகித்துக்கொண்டு— இந்தியாவை அவர்கள் ஜயித்திருக்கிறார்கள்.

நமது துர்ப்பாக்கியம் என்ன? நமக்குள் வேற்றுமை, பாகுபாடு, சமூக, ஜாதி, மத, கட்சி நலன் ஆகியவைகளை முக்கியமாகக்கொண்டு, தேசிய நலனைப் புறக்கணிப்பதே யாகும்: பெரிய அம்சத்துக்குக் காட்ட வேண்டிய விசுவாசத்தை அற்ப விஷயத்தில் வைப்பதாகும். இதில்தான் நமது பெரும் பலவீனம் அடங்கி யிருக்கிறது.

எல்லா அரசியல் குணாதிசயத்திலும், ஒற்றுமைதான் மிகவும் விசேஷமானதும், முக்கியமானதும். ஆனால், அந்த ஒற்றுமை பலவந்தமாகத் திணிக்கப்பெற்றதாக இருக்கலாகாது. இயற்கையாக, தானாகத் தோன்றியதாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில்,

இந்தியாவை மாத்திர மல்ல, ஐரோப்பிய நாடுகளையும் பிரிட்டன் மிஞ்சி இருக்கிறது. அவர்கள், சரித்திரத்தின் ஒவ்வொரு நெருக்கடியான கட்டத்திலும், தம் மத, கட்சி, வகுப்பு வித்தியாசங்களை முற்றிலும் மறந்து வேலை செய்திருக்கின்றனர். வகுப்பு வித்தியாசத்தால் மதச் சண்டைகள் ஏற்பட்டு வந்த 16-ம் நூற்றாண்டில், கத்தோலிக்கர், ப்ராட்டெஸ்ட்டென்டுகளைக் கிறிஸ்துவர்க ளல்லாதாரைக் காட்டிலும் மோசமாக வெறுத்து வந்த அந்தக் காலத்தில், கத்தோலிக் மன்னர் ஸ்பானிஷ் கப்பற் படையை அனுப்பி, இங்கிலாந்தைப் பயமுறுத்திய பொழுது, அந்த எதிரிகளை விரட்டும் நோக்கத்துடன், பிரிட்டிஷ் கத்தோலிக்கர்கள் ப்ராட்டெஸ்ட்டென்டுகளுடன் தோளோடு தோளாக நின்று போராடினர். அது, இந்தக் காலம் வரை நீடித்து நடந்து வந்திருக்கிறது. போன மகா யுத்தத்தில், தேசிய நெருக்கடி ஏற்பட்டு, அவசியமான பொழுது, பிற்போக்கு நிறைந்த, உதவாக்கரையான, ஆளும் ஜாதி என்ற திமிர் பிடித்த சர்ச்சிலின் கீழ் சோஷலிஸ்ட்டுகள் வேலை செய்யவில்லையா? இந்தியாவிலோ ஒன்று சேர்க்க முடியாத பிளவைச் சிறு வித்தியாசம்கூட ஏற்படுத்திவிடுகிறது. பொதுவான விஷயங்கள் மறக்கப்பட்டுவிடுகின்றன. அற்ப முரண்பாடுகள் மிகப் பிரமாதப்படுத்தப்படுகின்றன. தேசிய ஜாதி என்ற முறையில் நாம் வாழ்ந்து முன்னேற வேண்டுமென்றால், பிறவியுடன் தோன்றிய பிரிந்து நிற்கும் சுபாவத்தை ஒழிக்க வேண்டிய தவசியம்.

இப்பொழுது நமது சுதந்தரத்துக்கு ஏற்பட்டுள்ள பெரும் ஆபத்து, இரு பெரும் வகுப்புகளான ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமுள்ள வகுப்பு வேற்றுமையே. வெளி நாட்டினர் இதைப் பூரணமாகத் தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொண் டிருக்கின்றனர். இன்றைக்கு அதுதான் கடைசித் துருப்புச் சீட்டாக இருக்கிறது. இந்தக் கடைசித் துருப்புச் சீட்டை வைத்துக்கொண்டு, அவன் சாதுர்யமாகவும், கெட்டிக்காரத்தனமாகவும் உபயோகித்து வருகிறான். ஹிந்துக்களும், முஸ்லிம்களும் இரு சமுதாயத்தினர் என்பது சரித்திர உண்மைக்கு மாறானது. விஞ்ஞான ரீதியில் இல்லை; நமது நாகரிகத்துக்கு விரோதம்; இயற்கைக்கே முற்றிலும் மாறுபாடாக இருக்கிறது. அவர்களின் சமூக, அரசியல், பொருளாதார நலன்கள் ஒன்று போலவே இருக்கின்றன. அவர்களுக் குள்ள பொதுவான விஷயங்கள் எண்ணற்றவை. அவர்களின் வேற்றுமை அற்பமானது. சுலபமாக இன்னது என்று சொல்லிவிடலாம். உடை விஷயத்தைக் கவனித்துக் கண்டுபிடித்தால்தான் அன்னிய நாட்டானால் ஹிந்துவுக்கும், முஸ்லிமுக்குமுள்ள வித்தியாசத்தைப் பார்க்க முடியும். இல்லாவிட்டால் முடியாது. அதுவும், ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள உடை மாறுதலைத் தெரிந்துகொண்டவர்களுக்குத் தான் புரியும்.

இந்தியா ஒரே நாடு என்பதாகவே வெளி நாட்டில்அது கருதப் பெறுகிறது. இந்தியா பூராவும் தனது ஆதிக்கத்தில் வராதவரை பந்தோபஸ்தாக இருக்க முடியும் என்று, அன்னிய நாட்டி லிருந்து இங்கே படையெடுத்து வந்தவர் யாரும் நினைத்த தில்லை. நாடு முழுவதிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டாத நிலைமையில், தனது ராஜ்யம் பூர்ணமாக விஸ்தரிக்கப்பெற்றுவிட்டது என்பதாக எந்த இந்திய மன்ன

ரும் கருதியது கிடையாது. மௌரியர் ஆட்சியிலோ, புத்தர் ஆட்சியிலோ, மொகலாயர் ஆட்சியிலோ, ஒரே சர்க்காரின் கீழ் இந்தியா இல்லாத காலத்தில், தேசம் அபிவிருத்தி அடைந்ததே இல்லை.

இயற்கைக்கு முரணான விதத்தில் ஏற்படுத்தப்பட்ட அன்னியக் கல்வி முறையாலும், சுயமாகக் காரியங்களைச் செய்ய வசதிகளை அளிக்காமல் மறுப்பதன் மூலமும் இந்தியனின் திறமை மழுங்கும் படி அன்னிய ஆட்சி செய்துவிட்ட போதிலும், ஒரே பொதுவான— அது மோசமாக இருந்தாலும்—ஆட்சியில் உட்பட் டிருந்ததால், சிந்தனை, செயல் மிகுந்த பல அம்சங்களிலும் தேசத்தின் திறமை வெளியாகி யிருக்கிறது.

இந்தியாவில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஹிந்து, முஸ்லிம் என்பதாக இந்தியாவை இரண்டுபடுத்தக் கருதுவது பிற்போக்கானது. இயற்கையும், சரித்திரமும் ஒன்றுக்கியதைப் பிரிப்பது போன்ருகும். எனது நெருங்கிய உறவினரே சிந்துவில் முஸ்லிம்களாக இருக்கின்றனர். அவர்கள் என் மீது அன்பு வைத்திருக்கின்றனர். நானும் அவர்கள் மீது நேசம் பாராட்டி வருகிறேன். நான் ஹிந்து. என்னை ஓர் இந்தியனுகவும், ஆகையால் ஒரு முஸ்லிமைவேறு இனத்தவனுகவும் கருதுவதை என்னுல் நினைத்துப் பார்க்கவும் முடியாது. எனது பந்துவான ஓர் அழகிய இளம் மணப் பெண் சமீபத்தில் எனக்கு இவ்வாறு எழுதி யிருந்தாள் :

''எந்த இந்தியனும் ஆசைப்படும்படியான உயர்ந்த கௌரவத்தை நீங்கள் பெற்றிருப்பது குறித்து எங்களது மனப்பூர்வமான பாராட்டுதல் உரித்தாகுக. சேவை மூலம் விசேஷமாகக் காங்கிரசை நீண்ட காலம் அலங்கரிப்பீர்களாக! நாங்கள் தீவிரமான முஸ்லிம் லீக்கர்கள். ஆனாலும், இங்கே காங்கிரஸுக்கும், லீக்குக்கும் உடன்பாடு ஏற்பட வேண்டு மென்று நாங்கள் பிரார்த்திக்கிருேம்.''

இது சம்பந்தமாக, எனக்கு முன்பு ராஷ்டிரபதி பீடத்தில் வீற்றிருந்தவர் இந்திய முஸ்லிம்களுக்குச் சொன்ன வார்த்தைகளையே மீண்டும் சொல்ல விரும்புகிறேன். மௌலானு சாஹிப் தமது தலைமையுரையில் கூறியதாவது:

''எதிர்காலச் சுதந்தர இந்தியாவை, இந்திய முஸ்லிம்களாகிய நாம், சந்தேகத்துடனும் அவநம்பிக்கையுடனும் பார்க்கப்போகிருேமா, தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் நடந்துகொள்ளப் போகிருேமா? நமது சந்தேகத்தையும், பயத்தையும், எதிர்காலத்துக்காக இப்பொழுதே அறிவிப்பது மூலமும், அரசியல் பாதுகாப்பு மூலமும் போக்க முடியாது.

''அப்பொழுது, வேருெரு வல்லரசு இருப்பதைச் சகித்துக்கொண் டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்படுகிறது. இந்த வல்லரசு தனது காலை இங்கு நன்ருக ஊன்றிக்கொண் டிருக்கிறது. வாபசாகிப் போகும் உத்தேசம் அதற்கிருப்பதாகத் தெரிய வில்லை. நாம், பயம், அவநம்பிக்கை என்ற பாதையில் போவோமானுல், அந்த வல்லரசு நீடிக்கும்படியான நிலையையே நாம் பார்த்து நிற்க வேண்டி வரும். எதிர்காலத்தைத் தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் நோக்க வேண்டும். அப்பொழுதுதான் நமது பாதை தெளிவாகத் தெரியும். சந்தேகம், தடுமாற்றம், செயலற்ற நிலை, அலட்சியம் இவையே இல்லாத புதிய உலகத்தில், நம்பிக்கையும், உறுதியும், செயலாக்கமும், உற்சாகமும் குன்ருத அந்த உலகில் நாம் இருப்போம்.''

சரித்திரத்தைப் படித்தவன் என்ற முறையில், ஒன்று சொல்கிறேன்: இஸ்லாம் தர்மத்தை மகத்தான தாக்கியது, உறுதி

யின்மையும், அவநம்பிக்கையும் அல்ல. இன்று, இந்தியாவில் முஸ்லிம் லீக் பயத்திலும், அவநம்பிக்கையிலும் வேலை செய்கிறது. அதுவே முஸ்லிம் வகுப்புப் பூராவையும் பீடித்திருக்கிறது. ஹிமாலய மலைகளுக்கு அப்பாலிருந்து இந்தியாவிற்கு வந்தபொழுது முஸ்லிம்கள் சில ஆயிரம் பேரே இருந்தனர். அப்பொழுது இருந்த கோடிக் கணக்கான ஹிந்துக்களைக் கண்டு அவர்கள் பயந்துவிடவில்லை. நம்பிக்கையுடனும், உற்சாகம் என்ற பலத்துடனுமே அவர்கள் வந்தார்கள். இன்று, ஜனத் தொகையில் அவர்கள் நான்கில் ஒரு பங்கு இருக்கிறார்கள். அவர்களைச் சிறுபான்மையினர் என்று சொல்வது தவறு. இதைத்தான் மௌலானா சாகேப் மிகவும் அழகாகக் கீழ்க்கண்டபடி சொல்லியிருக்கிறார்:

"இந்திய அரசியல் உலகில் இந்திய முஸ்லிம்கள் அரசியல் சிறுபான்மை நிலைமையில் இருக்கிறதாகச் சொல்வதைப் போன்ற பொய், வேறு ஒன்றும் இல்லை. அரசியல் முறையில் பேசினால், சிறுபான்மை என்ற வார்த்தைக்குச் சிறிய எண்ணிக்கையுள்ள கூட்டம் என்பதாகவோ, அந்தக் காரணத்தினால், விசேஷப் பாதுகாப்புப் பெறத் தகுதி உண்டு என்பதோ அர்த்தம் அல்ல. அதன் அர்த்தம் என்ன? அதிக எண்ணிக்கை இல்லாத, வேண்டிய பலத்தைப் பெற முடியும் அம்சங்கள் இல்லாத, சுற்றியிருக்கும் பெரிய கூட்டத்திலிருந்து தன்னைப் பாதுகாக்கச் சொந்தத் திறமையில் நம்பிக்கை இல்லாத ஒரு கூட்டம் என்பதே. இவ்வாறு, இது எண்ணிக்கை பற்றிய விஷயம் மாத்திரம் அல்ல; மற்றவைகளும் இருக்கின்றன. 11 மாகாணங்களில், நான்கில் முஸ்லிம் பெரும்பான்மை இருக்கிறது. பிரிட்டிஷ் பலுச்சிஸ்தானையும் சேர்த்துக் கொண்டால், ஐந்து மாகாணங்களில் முஸ்லிம் பெரும் பான்மை இருக்கும். மத ரீதியில் இந்தப் பிரச்னையை இப்பொழுது பார்த்தாலும்கூட, முஸ்லிமின் நிலைமை சிறுபான்மையின் நிலைமை போன்றதல்ல. அவர்கள் ஏழு மாகாணங்களில் சிறுபான்மையாக இருந்த போதிலும், ஐந்து மாகாணங்களில் பெரும்பான்மையாக இருக்கின்றனர். இது இப்படியிருக்கச் சிறுபான்மை என்ற உணர்ச்சி அவர்களைப் பாதிக்க வேண்டிய அவசியமே இல்லை"

முஸ்லிமை அன்னியன் என்று நினைக்கிற ஹிந்து தனது மதத்துக்குக் கெடுதல் செய்கிறான்: அது மாத்திரமா? இந்தியச் சுதந்தரத்துக்கும், முன்னேற்றத்துக்கும் அவன் விரோதி. அதே போன்று, நம்முடன் கூடப் பிறந்த முஸ்லிம், தன்னை அன்னியனாகப் பாவித்துக்கொண்டு அப்படி நடப்பதன் மூலம், தனது வகுப்புக்கும் தேசத்துக்கும் கெடுதல் செய்கிறான். மத அடிப்படையில் போராடுவது காட்டுமிராண்டித்தனமானது. இப்பொழுது ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் நடைபெறும் போராட்டம் மத சம்பந்தமானதல்ல. முற்றிலும் வகுப்பு வேற்றுமைத் தகராறுகும். இரு வகுப்புக்களையும் பொதுவாகப் பாதிக்கும் அரசியல், பொருளாதார, பிரச்னைகளுக்கும், இந்தத் தகராறுகளுக்கும் சம்பந்தமே இல்லை. சாமர்த்தியம் வாய்ந்த, கல் நெஞ்சு படைத்த அரசியல்வாதிகள் சொன்னபடி மக்கள் ஆடுகின்றனர். என்ன காரணமிருந்த போதிலும், தற்சமய முள்ள நெருக்கடியையும், மனக் கசப்பையும் உணர்ந்து, பெரும் தகராறு வராதபடி நாம் மேற்கொண்டு போக வேண்டும்.

எனது தேர்தலுக்குப் பிறகு நான் வெளியிட்ட அறிக்கைகளில், முஸ்லிம்களாயினும் சரி, யாராயினும் சரி, சிறுபான்மைகளின் கோரிக்கைகளுக்குக் காங்கிரஸ் இணங்க வேண்டுமென்றும், அதற்

காகத் தேசத்தின் நன்மையைப் பலியிடக் கூடாது என்றும் பல தடவை எடுத்துரைத்திருக்கிறேன். இப்படி முன்பெல்லாம் விட்டுக் கொடுத்ததுதான் இத்தனை கஷ்டங்களும் இப்பொழுது ஏற்படுவதற்குக் காரணம். நிலைமை குழப்பமாகவும், முரண்பாடாகவும் இருக்கும் பொழுது, அடிப்படைத் தார்மீகக் கொள்கையையே நாடி இருப்பது தான் சிறந்தது. சந்தேகம் ஏற்படாத காலத்தில்தான் சில கொள்கைகளை விட்டுக்கொடுக்கலாம். வகுப்புக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட அடிப்படைக் கொள்கைகள் தேசியமும், ஜனநாயகமும்தான். இந்தத் தோரணையில் பார்த்தால், தேசிய விரோதமான, ஜனநாயக விரோத மான தனித் தொகுதி முறையைக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டது தவறு என்பதில் சந்தேகம் இல்லை. இந்தத் தனித் தொகுதி முறையை ஒப்புக்கொள்ளத் தைரியமாக மறுத்திருந்தால், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இத்தனை தொல்லைகளும் வந்திருக்கா என்று நான் நம்புகிறேன். வகுப்புத் தகராறு மிக மோசமான நிலையை அடைந்திருக்கிறது. உடனடியான கஷ்டத்தைத் தவிர்ப்பதற்குத் தேசியத்தையும், ஜனநாயகத்தையும் அடிப்படையிலேயே பாதிக்கும் சில கொள்கைகளை நாம் ஏற்றுக்கொண்டிருக்கலாம். அப்படி நாம் செய்தால், அது தேசத் துரோகம் மாத்திரமா? முஸ்லிம்களுக்கும் மற்ற வகுப்புக்களுக்கும் அது துரோகம் செய்ததாகும். எதிர் காலத்தில், தேசிய விரோத, ஜனநாயக விரோதக் காரியங்களைச் செய்யும்படித் தூண்டிவிட முடியாதபடி, நிர்பந்தம் ஏற்பட்டுவிடாதபடி நமது தலைவர்கள் கவனத்துடன் இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

சமீபத்தில், கிழக்கு வங்காளத்துக்கும், பீகாருக்கும் சென்றிருந்தேன். அனுவசியமாகப் பொருத்தமில்லாத விஷயங்களை வளர்ப்பது பெரும் குற்றமாகும். அது, கடமையினின்றும் நழுவுவதாகும். கிழக்கு வங்காள அட்டூழியத்துக்குக் காரணமாக இருந்தவர்கள், பலவந்தமாகப் பாக்கிஸ்தானை ஏற்படுத்த முடியும் என்ற எண்ணம் பொது ஜனங்களின் மனத்தில் பதியும்படிச் செய்துவிட்டனர். பலாத்காரத்தை உபயோகித்து, வகுப்புக் கலவரத்தைத் தீர்த்துவிடலாம் என்ற நினைப்புப் பொது மக்கள் மனத்தில் ஒரு தடவை பதிந்துவிட்டால், இந்தியாவுக்கும், சம்பந்தப்பட்ட வகுப்புக்களுக்கும் அந்த நாளே துர்ப்பாக்கிய நாளாகும். அகிம்சை புதிய கொள்கையாகும். அதன் தலையில் அதிகப் பொறுப்பைச் சுமத்தலாகாது. தகராறில் சம்பந்தப்பட்ட இரு கட்சிகளும் ஒருவிதமான கட்டுப்பாட்டை மேற்கொண்டால்தான் இப்பொழுதுள்ள நிலைமையில் அகிம்சை வெற்றி பெறும். ஒரு கட்சி அசாதாரணமான, விபரீதமான ஆயுதங்களை உபயோகித்தால், மற்றக் கட்சியும் தனது தற்காப்பை முன்னிட்டு அதே ஆயுதங்களைக் கைக்கொள்ள வேண்டி வரும்.

கூட்டம் கூட்டமாக மதமாற்றுதல், பலவந்த விவாகம் முதலியவற்றைப் பிரசாரம் செய்பவர்கள், நெருப்புடன் விளையாடுகின்றனர். ராட்சசத்தனமான இந்தப் பலாத்கார நிர்ப்பந்தக் காரியங்களில் முஸ்லிம் மௌல்விகளும் கூட இருந்து பங்கெடுத்துக்கொண்ட விஷயம் எனக்குத் 'தெரியும். கிழக்கு வங்காளத்திலிருந்து திரும்பிய பிறகு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டதை மீண்டும் கூறுகிறேன்:

“உயிர்ச் சேதம்தான் மனிதனுக்கு நேரிடும் பெரும் துக்கம் என்பதாகச் சிலர் நினைக்கின்றனர். மானமுள்ளவர்களுக்கு ஏற்படும் மிகப் பெரிய துக்கம், துப்பாக்கி முனையில் தங்கள் மதத்தை விட்டு விடும்படிச் செய்வதே. கட்டாயமாக மதம் மாற்றப்பட்ட எல்லோரையும், தூக்கிச் சென்று, பலவந்தமாகக் கல்யாணம் செய்து வைக்கப்பட்ட எல்லாப் பெண்களையும், கொலை செய்திருந்தால், என் அபிப்பிராயத்தில், நிர்ப்பந்தத்துக்கு ஆளான கோரத்தை விட இது எவ்வளவோ தாழ்வில்லை. அகிம்சையில் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. கிழக்கு வங்காளத்தில் செய்த நிர்ப்பந்தம் எனக்கும் ஏற்பட்டிருந்தால், நான் பதிலுக்குப் பதிலாக என்ன செய்திருப்பேன்? அது எனக்கே தெரியாது. மிகவும் ஆத்திர மூட்டும்படியான நிலைமையில், நன்கு படித்தவர்களே விபரீதமான செயல்களில் ஈடுபட்டுவிடலாம். அந்த நிலையில், ஜனத் திரள் இன்னும் மோசமான விதத்தில் நடந்து கொள்ளக்கூடும். கிழக்கு வங்காளத்தில் செய்தது போன்று, யாராவது பலாத்காரத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்து தூண்டிவிட்டால், அது தனி நபரா யிருந்தாலும் சரி, கட்சி அல்லது வகுப்பாக இருந்தாலும் சரி, தேசத்துக்குப் பெரும் தீங்கையே செய்கிறது. அது ஜீவகாருண்யத்துக்கே விரோதமாகும். நாம் ஒருவரை யொருவர் கழுத்தறுத்துக்கொள்வ தென்றால், மனிதத் தன்மையுடன் தீரமாகவும், தீவிரமாகவும், பட்டவர்த்தனமாகவும் கொலை செய்யலாமே! மிருகங்களுக்கும் கேவலமான முறையில், மோசமான பேடித்தனத்தில் இறங்கக் கூடாது.

வேற்றுமையைப் போக்கிக்கொள்ளப் பலாத்காரத்தை உபயோகிக்கலாகாது என்று எல்லா வகுப்புக்களுக்கும் எச்சரிக்கை செய்யும் பொழுது, பீகாரில் நடந்தது போன்று, பழிவாங்கும் முறையில் பலாத்காரத்தை உபயோகிக்கலாகா தென்று எச்சரிக்கை செய்கிறேன். இரண்டு குற்றங்கள் நடப்பனவால், ஒன்றுக் கொன்று சரியாகிவிட்டதாகக் கொள்ளக்கூடாது. பழிக்குப் பழி வாங்குதல், எதிர் நடவடிக்கை ஆகியவை ஒன்று மறியாத அப்பாவிகள் மீது வந்து விடியும். வகுப்புக் கலவரத்தைப் பொறுத்த வரையில், எப்படியும், ஏழைகளும், அனாதைகளும் தான் கஷ்டப்படுகின்றனர். உள்நாட்டுக் கலகத்தில் கட்டுத் திட்டமில்லாதபடி, காட்டுமிராண்டித்தனமாகப் பலாத்காரத்தை உபயோகிப்பதானது, அணுக்குண்டு மாதிரி ஹிந்துக்களையும், முஸ்லிம்களையும் ஏக காலத்தில் நாசம் செய்துவிடும்.

மத்தியச் சர்க்கார் மாகாண விஷயங்களில் தலையிடத் தவறி விட்டது. மாகாணங்கள் கிட்டத்தட்டச் சுதந்தரமாக இருக்கின்றன. இந்த நிலைமையில், அண்டை மாகாணமான பீகார், கல்கத்தாவில் பீகாரிகளுக்கு ஏற்பட்ட துன்பத்தை ஆட்சேபித் திருக்கலாம். சர்க்காருக்குத் தெரிந்த நிலைமையில், கிழக்கு வங்காளத்தில் ஹிந்துக்களுக்குக் கொடுமை செய்ததால், பீகாரில் ஏற்படும் விளைவுகளைப் பற்றிப் பீகார்ச் சர்க்கார் வங்கச் சர்க்காரை எச்சரிக்கை செய்ய அதற்கு உரிமை உண்டு. வங்காளத்தி லுள்ள ஹிந்துக்களின் நிலைமை குறித்துப் பீகார் ஹிந்துக்கள் மிகவும் கவலைப் படுகின்றனர்.

ஆஸ்தமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோகித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின், (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள்:— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனாபஜார்.
2. அமிருத் ரத்னாகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ, கெமிஸ்ட்ஸ் &, ட்ரக்கிஸ்ட்ஸ், கோஷாஞ்சேரி.

புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

வாழையடி வாழையாக வந்த நம் கூந்தல் வளர்ப்புக் கலையின் பொக்கிஷம்

ஜாப்கோ
ஹேர் குரோயர்

இளவயதில் ஏற்படும் நரையைப் போக்கி, உதிரும் கேசத்தை நிறுத்தி கூந்தலை நீண்டு வளரச் — செய்யும் —

ஜயபாரதம் கம்பெனி
மல்லேஸ்வரம் ● பெங்களூர்

மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி: "HARANTALKY"

181, கீழ வாசல்
மதுரை.

போன் நெ. 219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள்:

மோஹன் ராம் கம்பெனியாரின் சேலைகள், வேஷ்டிகள்

★

M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸிலிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ் சின்டஸ் வகையரா

★

சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவ நாகரிக டிஸைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

★

மொத்த & சில்லரை ஆடர்களுக்கு எழுதவும்.

கும்பகோணம்

டி. எஸ். ஆர். & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை
கூந்தல் வளர்ச்சிக்கும்
சிரசின் குளிர்ச்சிக்கும்
சந்தனாதி, அரைக்கீரைவிதைத் தைலங்களையும்
உபயோகியுங்கள்

சென்னை நகர் ஏஜண்ட்:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி
சென்னை

கோயமுத்தூருக்கு சோல் ஏஜண்ட்:
B. பால பட்டாபி செட்டியார்
246, வைஸ்யாள் தெரு
கோயமுத்தூர்

என்றும், ஓரளவுக்கு மேல் அவர்களைக் கட்டுப்படுத்தி வைக்க முடியாதென்றும் வங்கச் சர்க்காருக்குப் பீகார்ச் சர்க்கார் தெளிவாக்கியிருக்கலாம். அந்த நிலைமையை மேற்கொள்ளும்படிப் பீகார் ஹிந்துக்கள் கிளர்ச்சி செய்து வற்புறுத்தியிருக்கலாம். அதுதான் முறையான, சட்டப் பூர்வமான வழி. மாகாணங்களின் உள்நாட்டுப் பாதுகாப்புக்குப் பொறுப்பாக மத்தியச் சர்க்கார் இருக்கத் தவறிவிட்டால், மற்ற மாகாணங்களிலுள்ள பொதுஜனச் சர்க்கார்கள் எதிர்காலத்தில் இந்த விஷயத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதே என் அபிப்பிராயம். அப்படி அவர்கள் மேற்கொண்டால், ஜனங்களே கலாட்டாச் செய்து எதிர் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுவதைவிட ஒரு நல்ல உடன்பாட்டுக்கு வரமுடியும் என்று நினைக்கிறேன்.

எந்த நிலைமையிலும் பலாத்காரம் ஆபாசமானது. அதனால் பிரயோசனமே ஏற்படாது. ஒழுங்கு முறையின்றி, பொதுஜன வெறியால் ஏற்படும் பலாத்காரம் இன்னும் கேவலமாக இருக்கும். எதற்காக அந்தப் பலாத்காரச் செயல் நடைபெறுகிறதோ, அந்த லட்சியத்துக்கே இது ஆபத்து. இப்பொழுது நடக்கும் ஆத்திர மூட்டும் செயல்கள், எதிர் நடவடிக்கைகள் இப்படியே நீடிக்குமானால், முஸ்லிம் லீக் தலைவர்கள் தங்களைப் பின்பற்றுபவர்களைக்கூட அடக்க முடியாது போகும். பலாத்கார வெறியிலிருந்து ஜனங்களைக் காங்கிரஸ் தலைவர்கள் காப்பாற்றிய போதிலும், அந்த நிலைமை காங்கிரஸுக்குக்கூட ஏற்பட்டுவிடலாம். அப்படி ஏற்பட்டால், அப்பொழுது, வகுப்புவாத வெறியர்களைக் கொண்ட இரு கோஷ்டிகளாக அது பிரிந்துவிடும். பிரிட்டிஷ்காரர்கள், தங்களது துப்பாக்கிச் சனியனைக் காட்டிக்கொண்டு, இருவர் மீதும் ஆதிக்கம் செலுத்த முடியும். இந்தியாவின் விடுதலைத் தினம் அப்படியே எல்லையின்றி ஒத்திவைக்கப்பட்டுவிடும்.

சுதந்தரம் பெற நமக்குத் தகுதி இருந்தால், ஒன்றாக வாழவும், பிறர் உணர்ச்சியைக் கௌரவிக்கவும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஹிந்து, முஸ்லிம் சிறுபான்மையினர் தேசம் பூராவிலும் பரவியிருக்கின்றனர். பெரும்பான்மை வகுப்பினர் நிதானத்தை இழந்து, கடமையை மறந்து, கோபம் கொண்டால், அவர்களிடமிருந்து சிறுபான்மையினரைப் பாதுகாக்க எவ்வளவு போலிஸ் படை, ராணுவம் இருந்தாலும் போதா. முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசத்தில் ஹிந்துக்கள் மானபங்கமின்றியும், உயிர்ச் சேதம், பொருட் சேதம் இல்லாமலும் வாழ முடியாவிட்டால், இதே மாதிரி ஹிந்துப் பெரும்பான்மை மாகாணத்தில் முஸ்லிம் வாழ முடியாவிட்டால், நாகரிக வாழ்க்கை அசாத்தியமாகிவிடும். ஜின்னாவின் கனவான பாக்கிஸ்தான்கூட— என்னவென்று தெரிந்து கொள்ள முடியாத பிரச்னையாக அது இருந்த போதிலும்—சிறுபான்மைகளை அப்படி அப்படியே வைக்க வேண்டி ஏற்படுகிறதேயொழியப் பிரச்னை தீர வழி வகுக்கவில்லை. ஜனங்களை மாற்றி, இந்தியாவில் முஸ்லிம்களை ஒரு குறிப்பிட்ட பகுதியிலே சேர்ப்பது, அதே மாதிரி முஸ்லிம் ராஜ்யத்தில் ஹிந்துக்கள், சீக்கியர், கிறிஸ்துவர் இல்லாமல் செய்வது, இந்தியாவில் வேறெங்கும் முஸ்லிம் இருக்

கக் கூடாது என்பது நோக்க மென்ருல், அது தர்க்க ரீதியான வழியாகவே இருக்காது; மேலும், அதை நிறைவேற்றுவதற்குப் பிடிக்கும் செலவும் பெருவாரியாக இருக்கும். ஜீவகாருண்ய மற்ற கொடுமை செய்வதாக இருக்கும். இப்படிச் செய்தாலும்கூட, அது தர்க்க ரீதியான வழி அல்ல. மிகவும் படுமோசமான வழி. பின்னுல், இரு வகுப்புக்களுக்கும் கெடுதலாக முடியும். லீக் தன்னைப் பின்பற்றுபவர்களிடம் செய்யும் துவேஷப் பிரசாரத்தில் இந்த நிலைமை ஏற்பட்டே தீரும். இதனுல், பொதுவான நாகரிக வாழ்க்கை ஏற்படுவதே கஷ்டமாகிவிடும். வகுப்புக் கலவரம் என்ற விஷம் நமது தேசிய வாழ்வில் புகுந்து விடாதபடி நாம் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். மற்றவர்களின் நியாயமான உரிமைகள் பலியாகும்படி, ஜனசமூகத்தின் ஒரு பகுதி செய்யும் பயமுறுத்தலுக்கு நாம் உட்பட்டுவிடக் கூடாது.

இரு சமூகத்திலு முள்ள வெறியர்களின் தலைவர்களுக்கு நல்ல புத்தியும், ஜீவகாருண்யமும் ஏற்படும் என்று நம்புகிறேன். இந்தியாவில் இரு வகுப்புக்கள் இருக்கின்றனவாக ஒப்புக்கொண்டால், அவர்கள், சுரண்டுகிறவர்களும், சுரண்டப்படுபவர்களுமாகவோ, இருவருமாகவோதான் இருக்க வேண்டும். இதை நாம் உணர்ந்தால், இந்தப் பிரச்னையைத் தீர்ப்பது சுலபம் என்பது தெரியும். உண்மையில் நாம் யார் என்று தெரிந்துகொண்டால், நமக்குள் சண்டை சச்சரவு ஏற்படுவதற்குக் காரணமே இல்லை.

நமது சுதந்தர முன்னேற்றப் பாதையில், இது பெரும் இடைஞ்சலாக இருப்பதாலேயே இந்த விஷயத்தைப் பற்றி மிகவும் விரிவாகக் குறிப்பிட் டிருக்கிறேன். இப்பொழுது, முஸ்லிம் லீக் மத்தியச் சர்க்காரில், காங்கிரஸுடன் அதிகாரப்பொறுப்பை வகிக்கிறது. கல்கத்தா, கிழக்கு வங்காளம், பீகார், மற்றும் பல இடங்களில் நடந்த சம்பவங்கள் பழைய சம்பவங்கள் போன்ருகிவிடும் என்று இப்பொழுது கூட நம்புகிறேன். தாய் நாட்டின் மக்கள் என்ற முறையில், நாம் இனிப்புதிதாகச் சகோதர வாஞ்சையுடன் ஒத்துழைத்துப்போகலாம்.

ஹிந்து-முஸ்லிம் பிரச்னை நமக்குத் தலை வலியை உண்டுபண்ணுகிற தென்ருல், சமஸ்தானங்களின் பிரச்னையோ அதைவிடக் கவலையளிக்கக் கூடியதாக இருக்கிறது. பிரிவுகளையும், வகுப்புக்களையும் பற்றி நினைக்காமல், இந்தியா என்ற முறையில் நாம் சிந்தித்தால், வகுப்புப் பிரச்னையைப் போலவே, சமஸ்தானப் பிரச்னையும் சுலபமாகத் தீர்க்கக் கூடியதுதான். இந்தியா, பாதி சுயேச்சையாகவும், பாதி அடிமையாகவும் இருக்க முடியாது. சுதந்தர இந்தியாவில் அவர்கள் இருந்துகொண்டு, இப்பொழுது நடந்து வருவதுபோல் காரியங்களைச் செய்துவர முடியாது. இதை மன்னர்கள் உணர வேண்டும். தன் காரியங்களுக்காக அவர்களைத் தவருக உபயோகித்து வரும் அன்னியன் இன்று அவர்களுடைய அதிகாரத்தை ஆதரித்து வருகிருன். தன் காரியம் ஆகாதபோது, அவன் அவர்களை மரியாதைக் குறைவாக நடத்துகிருன். ராஜீய இலாக்காவின் உத்தரவுக்கிணங்க, இந்திய மன்னர்கள் தங்கள் மனச்சாட்சியைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். மக்களின் க்ஷேமத்திற்குத் தர்மகர்த்தாக்களாக இருக்கக் கூடியவர்கள்

அன்னிய ஆதிக்கத்தின் கைப்பாவைக ளாகிவிட்டனர். இம் மாதிரி நிலைமையில், அவர்களுடைய படாடோபமான பட்டங்களும், புராதனமான ஆடம்பரங்களும் ஆபாசமானவையாகவும், பய னற்றவையாகவும், கேலிக் கூத்தாகவும் காணப்படுகின்றன. தங் களுக்காகவும், குடும்பத்திற்காகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய தேவை களுக்கு அவர்கள் கண்டபடி செய்யும் செலவு, சாதாரணப் பிரஜா உரிமைகூட மறுக்கப்பட்ட, ஏற்கெனவே பட்டினியால் வாடிக் கொண் டிருக்கும் மக்களை மேலும் வறண்டுபோகச் செய்கிறது.

வடிகட்டின அடிமைத்தனத்தைச் சமஸ்தான மக்கள் சகித்துக் கொண் டிருக்கவேண்டி யிருக்கிறது. அவர்களைத் துன்புறுத்தும் எஜமானர்களே அடிமைகளாக இருக்கின்றனர். தங்களைப் பிணைத் திருக்கும் அடிமைத் தளைகள் இந்த எஜமானர்களுக்குப் பிடித்திருக் கின்றன போலும்! ஏனெனில், கேவலமான சுகபோக வாழ்க்கை நடத்த அவர்களுக்குச் சாத்தியமாகும்படி அது செய்கிறது. தங்களுடைய உண்மையான சுயநலத்தை மட்டும் அவர்கள் அறிவார்களேயானால், வெகு துரிதமாக மறைந்துகொண் டிருக் கும் ஏகாதிபத்தியத்தின் உதவியை நம்பிக்கொண் டிருப்பதற் குப் பதிலாக, சுயேச்சையாகவும், சந்தோஷமாகவும், செழிப்பாக வும் உள்ள மக்களின் அன்பில் அவர்கள் நம்பிக்கை வைப்பார்கள். சமஸ்தான மக்களுக்குத் தங்கள் மன்னர்கள்மீது இன்னும் சிறிது அன்பு இருக்கிறது. ஜனநாயகக் கொள்கையுடன் அமைக்கப் பெறும் அரசியலுக்குத் தலைவர்களாக மட்டும் இந்த மன்னர்கள் வாழ்க்கை நடத்துவார்களேயானல், அரசியல் இந்தியாவுக்கு அவர்கள் இருந்து வருவதில் ஆட்சேபம் இல்லை. இந்த விஷயத்தில், பெயரளவில் தங்களுக்குத் தலைவராக இருக்கும் இங்கிலாந்து மன்ன ரிட மிருந்து அவர்கள் பாடம் கற்றுக்கொள்ளலாம். ஆட்சி புரிவதை அவர் நிறுத்திக்கொண்டுவிட்டதால், அவரிடம் அன்பும், மரியாதையும் காட்டப்பெறுகின்றன. பிரஜைகளின் இஷ்டத்திற் கிணங்க அவர் நடந்து வருவதால், மன்னர் என்ற முறையில் அவர் தவறே செய்ய முடியாது. இப்பொழுது விண்ட்சர் கோமக ஞக இருப்பவரும், இதற்கு முன்னர் மன்னராக இருந்தவருமான எட்டாவது எட்வர்ட், விவாகம் போன்ற தன்னுடைய சொந்த விஷ யத்தில்கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளின் இஷ்டத்திற்கு விரோதமாகச் செல்ல முற்பட வில்லை. இதே மனோ பாவத்தில் இந்திய மன்னர்களும் நடந்து கொள்ளட்டும். மன்னர் களுக்கு நீண்ட காலத்திற்கு அமைதியும், தேசபக்தியும் நிறைந்த சேவை செய்ய இடமிருக்கும்.

நடைபெற்றவை யெல்லாம் வாஸ்தவமாக இருந்தால், இவை வாஸ்தவம்தான் : காஷ்மீர் தர்பாரின் சமீபத்திய செய்கைகள் புத்தி சாலித்தனமானவை யல்ல. சுதேச மன்னர்கள் எல்லோருக்குமே இது இழுக்குத் தேடிவிட்டது. தேச பக்தர்களிலேயே தலை சிறந்து விளங்கும் பண்டித நேருவை அகௌரவப்படுத்தியதன் மூலம், இந்தியத் தேசம் பூராவையுமே காஷ்மீரத் திவான் அகௌரவப்படுத்தி விட்டார். இந்தியாவிலேயே முதன்மையான சமஸ்தானமென்று கூறிக்கொள்ளும் ஹைதராபாத், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே அளிக்

கும்படி நேரிட்ட, சாதாரணப் பிரஜா உரிமையைக்கூடத் தனது பிரஜைகளுக்கு அளிக்க மறுத்திருப்பது பெரிதும் வருந்தத் தக்கது. சமஸ்தானங்களிடம் அடங்கியுள்ள இந்திய மக்கள் சுதேச மன்னர் களிட மிருந்து வேண்டுவதெல்லாம் தர்பார்களிலோ அல்லது மன்னர்கள் சபையிலோ அவர்கள் கூடும்பொழுது புகழ் மாலைகள் சூட்டிக்கொள்வதை அல்ல; தங்களை அழுத்திக்கொண் டிருக்கும் எதேச்சாதிகார ஆட்சியின் சுமையி லிருந்து அவர்கள் விடுதலை வேண்டுகின்றனர். செழிப்புடனும், சுயேச்சையாகவும் இருக்கும் மக்களின் சந்தோஷத்தின் மூலம் அவர்களுக்கு அதிகாரமும் கீர்த்தியும் ஏற்படட்டும். இந்த விஷயத்தில், தன் மக்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்கி, அவர்களுடைய அபிமானத்தைப் பெற்றுள்ள அவுண்டு சமஸ்தானாதிபதியின் வழியை இவர்கள் பின்பற்றட்டும்.

நம்நாட்டின் சுதந்தரத்திற்கும், முன்னேற்றத்திற்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியது தீண்டாமை நோய்தான். முக்கியமாக இது ஹிந்துச் சமூகத்தைத்தான் பாதிக்கிறது. மிகவும் தவறானதாகவும், மிருகத்தனமானதாகவும் இருப்பதால், இனியும் இது இருந்து வருவது நமது தேசிய வாழ்க்கையை நிச்சயமாகக் கெடுத்துவிடும். நமது சமூகத்திற் குள்ளாகவே மிகவும் இழிவானதும், மிகவும் சிறுமைப்படுத்துவதுமான ஏற்றத் தாழ்வை நாம் அனுமதிக்கும் பொழுது, சுதந்தரமும் சமத்துவமும் அளிக்கப்பெற வேண்டுமென்ற நமது கோரிக்கை தன் சக்தியைப் பெரிதும் இழந்துவிடுகிறது. ஐரோப்பிய நாடுகளிலும், வெள்ளையர் காலனிகளிலும் தாழ்த்தப் பட்டவர்களைப் போல, நாம் கருதப்பெற்று நடத்தப்பெறுவது, இயற்கை வாங்கும் பழி யென்றும், மனித சமத்துவம் என்ற இயற்கையின் அடிப்படைச் சட்டங்களில் ஒன்றை மீறியதற்குக் கிடைத்துள்ள கர்மப் பலன் என்றுமே நான் கருதுகிறேன். இதை அகற்றுவதற்கான சட்டத்தைக் கொண்டுவருவதற்கு உரித்தாகும்படி, இந்தத் தீமையை எதிர்த்து ஹிந்துச் சமூகத்தினரின் மன உணர்ச்சியை எழுப்பிச் சீர்திருத்தக்காரர்கள் வேண்டியன செய்துவிட்டனர் என்று கருதுகிறேன். தீண்டாமையைப் பகிரங்கமாக அனுஷ்டிப்பதைக் குற்றமாகச் செய்யும் சட்டங்களை மாகாணச் சர்க்கார்கள் கொண்டுவர வேண்டும். குறிப்பிட்ட கோவில் சேவார்த்திகளில் பெரும்பான்மையாக உள்ளவர்கள், கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்று விரும்பினால், அந்தக் கோவில்களைத் திறந்துவிட மகாணச் சர்க்கார்கள் சட்ட மியற்ற வேண்டுமென்று கருதுகிறேன். என்னைப் பொறுத்த வரையில், ஜாதி, மத மற்ற சமூகம் அகிம்சா பூர்வமான முறைகளால் ஏற்படுத்தப்பெற வேண்டுமென்றே நான் நம்புகிறேன்.

நாம் தடுத்துக் காத்துக்கொள்ள வேண்டிய இடையூறுகள் இன்னும் பல இருக்கின்றன. நமது போராட்டத்தில், சேவை, கஷ்டங்களை அனுபவிப்பது, தியாகம் ஆகிய துறைகளில்தான் இதுவரை போட்டி போட்டு வந்தோம். இப்பொழுது, அதிகாரங்கள் உள்ள ஸ்தானங்களும், பதவிகளும் நமக்குக் கிடைக்கின்றன என்பதற்காக, இந்தப் பதவிகளை அடைவதற்காக ஏறிவந்த ஏணியை உதைத்துத் தள்ளிவிட வேண்டாம். நெடு நாட்களுக்கு முன்னரே

சுதந்தரம் ஏற்பட்டுள்ள நாட்டில், அரசியல் ஆதிக்க வேட்டையானது அந்த நாட்டை அழிவுப் பாதைக்கு வெகு சீக்கிரத்தில் கொண்டு போய் விட்டுவிடாது. ஆனல், அரசியல் சுயேச்சையை முற்றிலும் அடையாத, அந்தரத்தில் தொங்கிக்கொண் டிருக்கும் ஒரு நாட்டில், தவறான எந்த நடவடிக்கையும் பெரும் ஆபத்தாக முடியும்.

நம் தேசிய வாழ்வில் இப்போதுள்ள கட்டத்தில், ராஜீயச் சூழ்ச்சி முறைகளை அனுஷ்டித்தால், அது நம் அழிவுக்கு அடிகோலுவதாகவே முடியும். மேலும், நான் ஏற்கெனவே சொல்லியிருப்பது போல், இனிச் செய்யவேண்டிய நிர்மாண வேலையும் அதிகமாயிருக்கிறது. இந்தியாவில் அவதிப்பட்டுக்கொண் டிருக்கும் கோடிக் கணக்கான மக்களின் உண்மையான ஊழியர்கள் தான் என்று நாமே உணர்ந்து, அதன்படி நடந்தால், தக்க பலனளிக்கும் வகையில் இவ் வேலை நடக்கும்.

நம்பிக்கை, அதிகாரம், பொறுப்பு ஆகிய வகையில் நாம் வகிக்கும் ஒவ்வொரு ஸ்தானமும், சேவைக்காகப் பயன்படட்டும். பணத்துக்கோ பெருமைக்கோ, கௌரவத்துக்கோ, அதிகார வேட்டைக்கோ அல்லாமல் இருக்கட்டும். நாம் உயர்ந்த பதவிகளிலே இருக்கும்போது, கொள்கை, ஜாதி, குடும்பம் ஆகியவை சம்பந்தப்பட்ட ரீதியில் நாம் சிந்திக்காதபடி, வேலையையும், திறமையையுமே சீர்தூக்கிப் பார்ப்போமாக.

பொது ஜன ஊழியர்கள் என்ற முறையில், நமக்கு நண்பர்களென்றோ விரோதிகளென்றோ கிடையாது. தேசத்துக்கு உண்மையாகவும், திறமையாகவும் சேவை செய்து, கடமையை உணர்ந்து, விசுவாசமுடன் நடந்துகொள்ளும் பட்சத்தில், பழைய குரோதங்களையும், விரோதங்களையும் பாராட்டக்கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக, பொதுஜன சேவை சம்பந்தமாய் வகிக்கும் ஒவ்வொரு பதவியிலும் நாம் நிரம்பவும் யோக்கியமாகவும், புகாருக்கு இடமில்லாமலும் நடந்துகொள்ள வேண்டும்.

சுதந்தர இந்தியாவின் அரசியல் அமைப்பு ஒன்றை வகுப்பதற்காக, சீக்கிரத்தில் அரசியல் நிர்ணய சபையில் நாம் கூடப்போகிறோம். அது ஒரு ஜன நாயக அரசியல் அமைப்பாகவும் 'பெடரல்' ரீதியிலும் இருக்கும். இருந்தபோதிலும், பொருளாதாரத் துறையில் உள்ளது போலவே, நிர்வாகத்திலும், முற்றிலும் அத்தியாவசியமாயுள்ளதற்கும் அதிகமாய் மத்தியச் சர்க்காரின் அதிகாரத்தின்கீழ்க் கொண்டு வருவது சுயேச்சைக்கு விரோதம். ஆகையால், சுதந்தர இந்தியாவிலுள்ள மாகாணங்கள், உள்நாட்டுப் பாதுகாப்பிற்கும் வெளிநாட்டுப் பாதுகாப்பிற்கும் ஏற்ற வகையில், அதிகப் பட்சச் சுயேச்சை பெற்றிருப்பது நல்லதாகும். ஆனல், நம்முடைய மாகாணங்கள் சிலவற்றில் ஒவ்வொன்றும் ஐரோப்பாவில் உள்ள ஒரு தேசத்தைப் போன்ற அளவில் பெரியதாக இருக்கிறது.

மாகாணங்களை நிர்வகிப்பதில், அளவுக்கு மீறிய வகையில் மத்தியச் சர்க்காரிடம் அதிகாரம் ஏற்பட்டுவிடக்கூடும். இதையும் நாம் தவிர்க்க வேண்டும். வெகு காலத்துக்கு முன், சரித்திரம் ஏற்படுவதற்குமுன், இந்தியாவில் இருந்த புத்திசாலிகள் கிராமப் பஞ்சாயத்து முறையையும், ஸ்தல பஞ்சாயத்து முறையையும் ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள். எத்தனையோ அலைமோதல் போன்ற குழப்பங்களுக்கெல்லாம் அசையாதபடி இந்த முறை நமக்கு ஒரு கோட்டையாய்

விளங்கிக்கொண் டிருந்தது. பல மன்னர்களும், பரம்பரைகளும் போராடித் தோற்றுப் போயின.

பல சாம்ராஜ்யங்கள் தோன்றி, ஆட்சி நடத்தியும், ஆட்சி முறை தவறியும், அழிந்து, ஒழிந்து மறைந்தன. இருந்தபோதிலும், கிராமவாசியின் வாழ்க்கைத்தரம் தனது நிதானப் போக்கை விட்டுத் தவறிவிடவில்லை. போர்க்களச் சத்தத்திற்கும், பல சாம்ராஜ்யங்கள் தழைத் தோங்குவதற்கும், வீழ்ந்துவிடுவதற்கும் பின்னரும் கிராமவாசியின் வாழ்க்கை பாதிக்கப்படாமல் நடந்துகொண் டிருந்தது. கிராமவாசிகளுக் கென்று கிராம சர்க்கார் ஒன்றிருந்தது. அது அவர்களுடைய வாழ்க்கையையும், சொத்தையும் பாதுகாத்து, நாகரிக வாழ்க்கை நடத்துவதற்கான சாத்தியத்தை அளித்து வந்தது. சிறிது சிறிதாய் முன்னேறி, கிராமப் பஞ்சாயத்துகளிடம், சில்லறையான 'கிரிமினல்', 'சிவில்' வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரங்களை நாம் ஒப்புவிக்க வேண்டும். ஸ்தல போலிசையும்கூட, பஞ்சாயத்துப் பொறுப்பில் விட்டுவிடலாம். சுயாட்சிச் சர்க்காரின் கிராம 'யூனிட்'டைப் பலமுள்ளதாக நாம் ஆக்கி, இன்றுள்ள நிலைமைகளுக்குத் தக்கபடி அதைப் புனருத்தாரணம் செய்வோமானல், நம்முடைய ஜனங்களின் சிறந்த புத்திசாலித்தனத்துக்கு எற்றபடி நாம் வேலை செய்தவர்களாவோம். இதுதான் இயற்கையான, சுலபமான வழி. மேற்கு நாடுகளை அப்படியே 'காப்பி'யடிப்ப தென்பது நம் நோக்கமா யிருக்கக் கூடாது. முக்கியமாய்ப் பெரிய தேசங்களிலே, ஜனநாயக முறையைச் சிக்கலானதாகவும், அதிகச் செலவுடையதாகவும் மேற்கு நாடுகள் செய்துவிட்டன என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. அதிகாரிகள் நடக்கவேண்டிய ஒரு சம்பிரதாயமான முறையை மேற்கு நாடுகள் வகுத்திருக்கின்றன. இதனல், ஜனநாயக யந்திரம் அதிகச் சிக்கலானதாகவும், மிகவும் மெதுவாக ஊர்ந்து செல்லுவதாகவும் ஆய்விட்டது. இந்தக் குறைகளெல்லாம், நாம் வகுக்கக் கூடிய புது அரசியல் அமைப்பில் இல்லாதபடி தவிர்க்க நாம் முயல வேண்டும்.

நமது நீதிஸ்தல முறை சுலபமானதாகவும், பலனளிக்கத்தக்கதாகவும் இருக்க வேண்டும். சட்டத்தின் தாமதமும், செலவும், சிக்கலும் தவிர்க்கப்பட வேண்டும். மேலும், பிரஜா உரிமைகளை அனுபவிப்பதற்குப் போதுமான அளவு வசதியளிக்கப்பட வேண்டும். ஒரு ஜனநாயக, பிரதிநிதித்துவச் சர்க்கார்கூட யதேச்சாதிகார நடவடிக்கை எடுக்க முடியாதபடி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட் டிருக்க வேண்டும். சர்க்காரில் பதவி வகிக்கும் ஒரு தேசாபிமானியைக்கூட அதிகாரம் கெடுத்து விடுகிறது என்பதை நாம் மறந்துவிட லாகாது. தேசத்தின் முக்கியமான பெரிய நலன்களையும் பொது ஜன நன்மைகளையும் உத்தேசித்து, அவைகளுக் கேற்றபடி சிறுபான்மையினரின் பாதுகாப்புக்குப் போதுமான அளவு வசதி அளிக்க வேண்டும். அவர்களுடைய பாஷையும், கலாசாரமும் சுயேச்சையுடன் வளருவதற்கான வசதி இருக்க வேண்டும். மத நம்பிக்கை விஷயங்களில் பூரணச் சகிப்பு இருக்க வேண்டும். ஒவ்வொருவரும், ஒவ்வொரு கோஷ்டியும், சமாதானத்துக்கும் பொது ஜன ஒழுங்கிற்கும் பொருந்திய வகையில், தன்னுடைய கொள்கைகளைப் பரப்பப் பூரண உரிமை இருக்க வேண்டும்.

சர்வ தேச நிகழ்ச்சிகளில் சென்ற பல வருஷங்களாய்க் காங்கிரஸ் அதிகச் சிரத்தை எடுத்துக்கொண்டு வருகிறது. இந்த நிகழ்ச்சிகள் நம்மைப் பாதிக்கின்றன. உலகத்தின் மற்றப் பாகங்களிலே

என்ன நடக்கிற தென்பதை நீண்ட காலத்துக்குப் பொருட்படுத்த மல் எந்தத் தேசமும் இருக்க முடியாது. அகிம்சையை அடிப்படை யாய்க் கொண்டது நம்முடைய தேசியப் போராட்டம். எனவே, சர்வதேச ஆயுதப் பரிகரணம், சமாதானம், ஒத்துழைப்பு, திறந்த மனத்துடன் வெளிப்படையாகவே ராஜீய விஷயங்களைப் பேசுவது என்பவற்றை நாம் எப்போதும் ஆதரித்து வந்திருக்கிறோம். நாம் பட்ட துன்பங்களின் காரணமாய், அடிமை ஜனங்களை ஆக்கிரமிப்ப தென்பது அவர்களுக்கு எப்படி இருக்கு மென்பதை நாம் அறி வோம். சர்வதேசச் சமாதானம், சர்வதேச நல்லெண்ணம் ஆகியவை எவ்வளவு நன்மை பயக்கு மென்ற பாடத்தை, அன்னிய ஆதிக்கம் நம் மீது கொடுத்திருக்கிற பலத்த, கொடூரமான அடிகள் நமக்குப் போதித்திருக்கின்றன. துன்பப்பட்ட காலத்திலே நாம் கற்றுக் கொண்ட இந்தப் பாடங்களை, நாம் பூரணச் சுதந்தர மடைந்து, சந் தோஷமாகவும், சுபிட்சமாகவும் வாழ்கிற காலங்களிலே மறந்து விடமாட்டோ மென்றே நினைக்கிறோம்.

நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் அடிப்படையாய்க் கொண்டுள்ள ஒரு புதிய உலக அமைப்பு ஏற்பட வேண்டு மென்று நாம் விரும்புகிறோம். சுதந்தரமான, சமத்துவ நிலையில் உள்ள தேசங் களைக் கொண்ட ஒரு சர்வதேச ஸ்தாபனத்தின் மூலம் இந்த நோக் கங்கள் கைகூடி வரும் என்று நம்புகிறோம். ஏகாதிபத்தியம் இருக் கிற பரியந்தம், சமாதானத்துக்காக எப்பேர்ப்பட்ட சர்வதேச ஸ்தாபனத்தை ஏற்படுத்தினாலும்கூட, செல்வாக்குடைய, நேர்மை யற்ற தேசங்கள், அதைத் தம் அபிலாஷைகளுக்கு ஒரு கருவியாகத் தான் ஆக்கிவிடும்; இதைத் தவிர்க்க முடியாது. சமத்துவம், நியா யம், நேர்மை ஆகியவற்றை அடிப்படையாய்க் கொண்டிராமல், சிற் சில ஆதிக்க நாடுகளின் கூட்டுப் பலத்தைத்தான் அடிப்படையாய்க் கொண்டிருக்கும்.

இந்த முப்பெரும் வல்லரசுகள்—அல்லது நான்கு, ஐந்து பெரும் வல்லரசுகள்—எப்போதுமே இருந்து வரும். இவ்விதம் சென்றால் ஆபத்துத்தான்.

சாதாரணத் திருடர்களையும் கொள்ளைக்காரர்களையும் போலவே சர்வதேசத் திருடர்களும், கொள்ளைக்காரர்களும். சீக்கிரத்திலோ அல்லது நாளடைவிலோ—அனேகமாகச் சீக்கிரத்திலேயே—தங்க ளுக்குள்ளே சச்சரவிட்டு அடித்துக்கொள்வார்கள். இவர்கள் இந்த மாதிரி அடித்துக்கொள்ளும்போது, உலகின் அஸ்திவாரங் களையே ஆட்டி அலைக்கழித்து விடுகிறார்கள். சென்ற முப்பது வருஷ காலத்தில் இந்த மாதிரி இரண்டு தடவை செய்து விட்டார்கள். அடிமை நிலையில் தேசங்களும் ஜனங்களும் இருந்து வருகிற வரையில், சச்சரவும் சண்டையும் இருந்துகொண்டுதான் இருக்கும்.

மேலும், ஜனநாயக முறையிலேயே, ஒரு சர்வ தேச ஸ்தாபனம் சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் வேலை செய்ய வேண்டு மானால், ஸ்தாபன ஏற்பாடுகளையும், வெளி ஏற்பாடுகளையும் செய்துவிட்டால் மட்டும் போதாது; சட்டமும், அமைப்பும், சர்வ தேசக்கோர்ட்டுகளும், ராணுவங்களும் ஏற்படுத்துவ தெல்லாம் அந்த அந்த அளவில் சரிதான். ஆனால், ஒரு மனிதனுக்கு ஏற்படும் ஆத்

திரக் குணங்கள் அடங்க வேண்டுமானால், அவற்றை அடக்குவதற்கான சொந்த மனோ பலமும், பிறகு, அவைக்கான சூழ்நிலை முறைகளும் எப்படி அவசியமா யிருக்கின்றனவோ, அதேபோல், தேசங்களின் அபிலாஷைகளையும், ஆத்திரங்களையும் அடக்கிக்கொண்டு போவதற்கு, முதலில் மன மாற்றம் அவசியமாகும். அப்புறந்தான் சூழ்நிலை ஏற்பாடுகள் பலனளிக்கும். ஜனங்களிடம், அதிகாரத்தையும், செல்வத்தையும், ஏகாதிபத்தியத்தையும், ஆதிக்கத்தையும் பற்றி ஆசை வார்த்தைகளை யெல்லாம் சொல்லி, அவர்களுடைய ஆத்திரங்களையும், அபிலாஷைகளையும் கிளப்பிவிடக்கூடிய தலைவர்களிடம் அல்லாமல், ஜனங்களை அமைதியான முறையிலும், நன்மை யளிக்கக் கூடிய 'போட்டி' வகையிலும் நடத்தக்கூடிய தலைவர்களையே கௌரவிக்கும் ஒரு நல்ல பாடத்தை ஜன சமுதாயம் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்த பின்பு, ஒருவரோ டொருவர் யோக்கியமாகவும், நியாயமாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்வதென்ற உறுதியைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டால், சூழ்நிலை சம்பந்தமான அரசியல் அமைப்பு வேலையும் சட்டம் ஏற்படுத்துகிற வேலையும் சிரமமா யிருக்காது.

ஒவ்வொரு தேசமும், அது பெரிதா யிருந்தாலும் சரி, சின்னதா யிருந்தாலும் சரி, முக்கியமானதாயிருந்தாலும் சரி, முக்கியமா யில்லாவிட்டாலும் சரி, சுதந்தர தேசமா யிருந்தாலும் சரி, சர்வதேச தரும கர்த்தாப் பொறுப்பின் கீழ் இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட தேசங்களைக் கொண்ட ஒரு சங்கம் ஏற்பட வேண்டும் என்பதே இந்தியாவின் லட்சியம். ஜனநாயக முறையில் உள்ளதைப்போல், ஒவ்வொருவரும் ஒரு சொல்லுரிமை பெற்றிருக்க வேண்டும்.

உள்நாட்டு அரசியல் விஷயங்களில், தனிப்பட்ட ஒருவர் அல்லது சிலருடைய சர்வாதிகார முறை நிலவுவதை நாம் எதிர்க்கிறோம். இதுபோலவே, செல்வாக்குடைய ஒரு தனித் தேசமா யிருந்தாலும் சரி, அல்லது சில தேசங்கள் கூட்டு முறையில் நடத்தினாலும் சரி, அந்தச் சர்வாதிகார முறையையும் நாம் கண்டிக்கிறோம். சர்வ தேச அந்தஸ்தில் சமத்துவமற்ற நிலைமை இருக்குமானால், பல தேசங்களைக் கொண்ட உலகில், ஜனநாயக ஸ்தாபனங்களைப் பாதுகாப்பது சிரமம்.

யுத்தம் நடந்துகொண் டிருந்த காலத்திலுங்கூட, எந்த அடிப்படையான சுதந்தரங்களுக்காகப் போராடுவதாய்ப் பறை சாற்றினார்களோ, அவைகளை, நடை முறையில் நேச நாடுகள் மீறிவிட்டன. நியதி முறைகளை மீறிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், யுத்தக் காலமாயிற்றே என்ற பேச்சை எடுத்துக் காட்டித் தாங்கள் மீறியதெல்லாம் நியாயம் என்று வாதாடினார்கள். ஆனால், யுத்தம் முடிந்துவிட்ட பிற்பாடுகூட, அடிப்படைச் சுதந்தரங்க ளெல்லாம் எப்போதும் போலவே இன்னமும் உருப்பட்ட பாட்டைக் காணோம்.

சமாதான மாநாட்டில், சமாதானத்தைத் தவிர மற்றவை யெல்லாம் நடக்கின்றன. நேச தேச ஸ்தாபனத்தில், நேசத்தைத் தவிர மற்றவை யெல்லாம் நிலவுகின்றன. எல்லாத் தேசங்களும் பீதியால் கலவரப்பட்டுக்கொண் டிருக்கின்றன. மூன்றாவது உலக யுத்தம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் ஏற்கெனவே உதித்துவிட்டது.

யுத்தம் ஆரம்பமாவதற்கான காரணங்களை ஒழிக்க வேண்டு

தற்கால கட்டிட நிர்மாணம்

குடியிருப்பு வசதி

உணவுக்கும் உடைக்கும் அடுத்த படியாக மனிதனுக்கு அவசியமானது குடியிருப்பு வசதி. தற்சமயம் விடுகளுக்கு மிகுந்த அவசியம் ஏற்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும். இந் நெருக்கடியை சீக்கிரத்தில் ஓரளவுக்காவது தீர்த்து வைக்க வேண்டியது அவசியம்.

கான்கிரீட்—நாள்பட உழைக்கும் தன்மை, சிக்கனம், சுத்தம், தீ விபத்துக்குள்ளாகாமை முதலிய குணங்க ளுடையதால்—பணக்காரர்களுக்கு மட்டு மல்லாமல் எல்லோருக்கும் ஏற்ற கட்டிட சாதனமாகிறது.

கான்கிரீட்டை நன்கு பயன் படுத்திக் கொள்ள கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் (199, மவுன்ட் ரோடு, மதருஸ்) உதவி எப்பொழுதும் கிடைக்கும்.

> உங்கள் விடு கம்பீர மான மாளிகை போல் இருக்க வேண்டு மானாலும் சரி, அல்லது சதாரண சிறிய விடாக இருக்க வேண்டுமானாலும் சரி, சுலபமாகவும், அதி கப்பணச் செலவில்லாமலும் கான்கிரீட்டினல் கட்டலாம்.

தி ஸிமென்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

CM 101 A—Tamil

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

333.A.E..

கேசரி குடீரம் லிட் மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை.

1872-ல் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 73-ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மக்களால் உபயோகிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருவதுமான

மதுரை

M. காதர் சாஹிப் & ஸன்ஸ்

—"யானை மார்க்"—

- சந்தனாதித் தைலம்
- அரைக்கீரைத் தைலம்
- மிளகாய்த் தைலம்

குளிர்ச்சி, கூந்தலழகு, ஆரோக்கியம் தருபவை

- நாஷனல் பிளவர் டஸ்ட்

(உடுப்பு, ரிக்கார்டு பெட்டிகளில் அந்து, பாச்சை முதலியவைகளை அணுகவொட்டாமல் பரிமள வாசனை தரக்கூடியது)

மற்றும் வாசனைப் பாக்கு, தசாங்கம், ஸ்னான பவுடர், ஊதுவத்திகள், சந்தன பில்லைகள், சந்தன பவுடர், பன்னீர் வகையராக்களும் கிடைக்கும்

சரக்குகள் வாங்கும்பொழுது எமது 'யானை' டிரேட் மார்க்கை கவனிக்க கோருகிறோம்

M. KHADER SAHIB & SONS.,

Manufacturing Perfumers

MADURA

மென்பதில் உலக வல்லரசுகள் சிந்தித்துக்கொண் டிருக்க வில்லை. இன்னும் பெரிய, நல்ல அணுக் குண்டுகளை எப்படிச் செய்யலாம் என்பதில்தான் கவனம் செலுத்திக்கொண் டிருக்கின்றன. நாச வேலைகளுக்கான காரியங்களுக்காக அல்லாமல், அணுச் சக்தியைச் சமாதானக் காரியங்களுக்கு மட்டும் உபயோகிக்க முடியா தென்பது ஆதியிலேயே தெரிந்திருக்க வேண்டும். இதே வகையில்தான், நிபுணர்களும் தீர யோசித்துத் தங்கள் முடிவை இன்று தெரிவித் திருக்கிறார்கள்.

எந்த விதத்திலாவது இந்தச் சக்தியை உபயோகிக்கக் கூடா தென்று தடுக்காவிட்டால், ஒவ்வொரு தேசத்துக்கும் உள்ள போட்டாபோட்டி உணர்ச்சி, அபிலாஷைகள், பழி தீர்க்கும் எண்ணங்கள் ஆகியவற்றின் விளைவாக உலகச் சமாதானத்துக்கு மட்டுமின்றி, இந்தப் பூலோகத்தில் மனித வர்க்கம் இருப்பதற்கே ஆபத்து நேரும்.

தோல்வியுற்ற தேசங்களை நடத்தும் முறையின் விளைவாகப் பயம், அருவருப்பு, பழி தீர்க்கும் குணம் போன்ற தீய கர்ம பலன்கள் தொடர்ந்துகொண்டே வருகின்றன. சமுதாயத்துக்கு விரோத மாக ஒருவன் ஒழுங்கு தவறி நடந்துகொண்டால், அவனை ஒழுங் குள்ளவ னாக்குவதற்குத் தண்டனை விதிப்பதும், பழி தீர்ப்பதும், ஒழிப்பதும்தான் சிறந்தவை அல்லது மிகவும் உசிதமான நாகரிக முறைகள் என்பு தல்ல. தனிப்பட்ட ஒருவர் விஷயத்தில், தந்தை செய்த குற்றங்களை மகன்மீது காண்ப தென்பது எப்படி நியாய மற்ற தும் மனித நேர்மைக்கு விரோதமானதுமாய் இருக்கிறதோ, அதை விட இன்னும் மோசமானதுதான், ஒரு தலை முறையினர் செய்த குற்றங்களை இன்னொரு தலை முறையினர் மீது சில கோஷ்டிகள் காண்ப தென்பதும். தோல்வியுற்ற தேசங்களை அப்படியே மூட்டை களாய்க் கட்டிப் போடக் கூடாது. சர்வதேச ராஜ தந்திரச் சூழ்ச்சி களில், இவைகளைக் கருவிகளாய் உபயோகிக்கவும் கூடாது. தம் மைத் தாமே காப்பாற்றிக்கொள்ளக் கூடிய வகையில் இந்தத் தேசங் களை நிலைநிறுத்தி வைக்கச் சகல பிரயாசைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். சாதாரணமான, நல்ல அரசியல் பொருளாதார, வாழ்வில் ஈடுபடுவதற்கான எல்லா வசதிகளையும் அளிக்க வேண்டும்.

சர்வதேச உறவு விஷயங்களில், அன்னிய ஆதிக்கத்தின் கீழ் இருந்ததைவிட, சுதந்தர இந்தியாவின் சர்வதேச உறவுகள் அதனுடைய பூகோள அமைப்புக் கேற்றபடி இன்னும் பொருத்த மாகவும், நியாயமான முறையிலும் இருக்கும்.

வாஸ்தவத்தில், இன்றுவரை நமக்குச் சுதந்தரமான தொடர்பு கள் என்பதே இருக்க வில்லை. பிரிட்டிஷ் சர்வதேச உறவுச் சக்கரத் தோடு நாமும் மாட்டி வைக்கப்பட் டிருந்தோம். ஏகாதிபத்தியப் பிரிட்டனுக்கு யாரெல்லாம் சிநேகிதமோ, அவர்களெல்லாம் இந்தி யாவுக்கும் சிநேகிதர்கள்தான். பிரிட்டனுக்கு யார் யாரெல்லாம் விரோதிகளோ, அவர்கள் அதே சமயத்தில் இந்தியாவுக்கும் விரோதி கள்தான்.

பிரிட்டிஷாரின் சிநேகங்களுக்காகவும், விரோதங்களுக்காகவும் இந்தியா இரண்டு தடவை யுத்தத்தில் மாட்டிவிடப்பட்டு, சொல்ல முடியாத அளவு துன்பங்களுக்கும் உயிர் நஷ்டத்துக்கும் உள்ளா

யிற்று. இந்தப் பெரிய சுமையைச் சுதந்தர இந்தியா உதறித் தள்ள வேண்டும்.

நமக்கென்று சொந்த வெளிநாட்டுக் கொள்கை ஒன்று இருக்க வேண்டும்.

நமக்குப் பழைய கட்டுப்பாடுகளோ, வருங்கால ஏகாதிபத்திய அபிலாஷைகளோ கிடையா. தேசத்தின் சுதந்தரத்தைப் பெற்று, அதைக் காப்பாற்றி வரவேண்டும் என்பதுதான் நம்முடைய விருப்பம். இந்தச் சுதந்தரத்தின் பலனாக உள்நாட்டில் இருப்பவர்களும், வெளிநாட்டில் உள்ளவர்களும், தத்தம் வசதிகளுக்கும் விவேகத்துக்கும் தக்கபடி, தாராளமாய் அபிவிருத்தியடைவதற்கான சந்தர்ப்ப உரிமை இருக்க வேண்டும். நமக்குப் பகைவர்கள் இல்லை. பிரிட்டன் தான் செய்த தவறுக்குப் பரிகாரம் செய்துகொண்டு, நம் தலைமீது சுமத்தியிருக்கிற பளுவுகளை நீக்கிக்கொண்டுவிட்டால், நமக்கு அது செய்த தவறுகளைக்கூட நாம் மறந்துவிடுவோம். தாய் நாட்டிலிருந்து தென்னாப்பிரிக்காவுக்கு ஆசை வார்த்தை காட்டி இழுத்துக் கொண்ட பின்பு, அங்கே சாசுவதமாகிவிட்ட இந்தியர்களின் அடிப்படையான பிரஜா உரிமைகளைப் பறித்துவிடத் தென்னாப்பிரிக்கா முயற்சி செய்யாவிடில், அதனுடனும் நமக்கு எந்தத் தகராறும் கிடையாது. அதிலுள்ள வெள்ளைக்காரச் சிறுபான்மைப் பேர்வழிகள் நிற வெறி பிடித்து இந்தியர்களின் உரிமையைப் பறிக்க முயலாவிட்டால், இந்தத் தகராறு ஏற்பட்டிராது.

ஒவ்வொரு தேசத்தாருக்கும் தங்களுக்கேற்ற சிறந்த ஆட்சி முறையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள உரிமை யுண்டு என்பதை நாம் அங்கீகரித்து மதிப்போம். இதே உரிமையை மற்றவர்களிட மிருந்து பறிக்காத வகையிலும் இருக்க வேண்டுமென நாம் கருதுகிறோம்.

கம்யூனிஸ வழியில் ருஷ்யா சென்றுகொண் டிருக்கும் முயற்சியையும், ஜனநாயகச் சோஷலிஸ முறையில் பிரிட்டிஷார் செய்துகொண் டிருக்கும் பரீட்சார்த்த முறையையும், தனிப்பட்ட முதலாளித்துவ முறையில் அமெரிக்கா வைத்திருக்கிற நம்பிக்கையையும் நாம் சமநோக்குடன் கவனித்து வருகிறோம். ஒவ்வொன்றி லிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருந்த போதிலும், இந்த முறையில் எதையும் நாம் காப்பியடிக்கப் போவ தில்லை.

இந்தச் சிறந்த ஜனங்கள் சகலருடனும் சினேக உறவுடன் நடந்துகொள்ளவே நாங்கள் விரும்புவோம். சமத்துவ அடிப்படை மீதும், மற்றவர் உரிமைகளைப் பரஸ்பரம் கௌரவிப்பதென்ற அடிப்படை மீதும் நாம் நடந்துகொள்வோம்.

உலகில் ருஷ்யாவுக்கு விரோதமாய்ச் சில பத்திரிகைகளும், ஜனநாயக முறைகளுக்கு விரோதமாய் வேறு சில பத்திரிகைகளும் செய்து வருகிற பிரசாரத்தைக் கேட்டு ஏமாந்துவிடாதபடி, நாம் உஷாரா யிருக்க வேண்டும்.

கொள்கைச் சண்டையில் சிக்கி, சர்வ தேசப் போட்டிகளில் ஏற்படும் கட்சிகளில் ஏதாவதொரு பக்கம் சேர்ந்து ஏமாந்து போய், உலகத்துக்காகச் சேவை செய்கிறோ மென்கிற தவறான எண்ணத்தில் மூன்றாவது உலக யுத்தத்தில் நாம் மாட்டிக்கொள்ளக் கூடாது. மற்றத் தேசங்களைச் சீர்படுத்த முயலாமலே இதற்கு

முன்னதாக இப்படிப்பட்ட ஆர்வத்தை நிறைவேற்ற உள்நாட்டில் நமக்கு எவ்வளவோ காரியங்கள் இருக்கும்.

சகல நாடுகளோடும் சமத்துவ முறையில் சினேக உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டியிருந்தாலும், ஆசியாவி லுள்ள அண்டை நாடுகளோடும் ஆஸ்திரேலியாவோடும் நமக்குள்ள உறவு கள் அதிக நெருக்க முடையனவாகவே இருக்கும்.

சீனவோடும் ஜப்பானேடும் நமக்கு நீண்ட காலமாகவே சரித்திர, கலாசாரத் தொடர்புகள் உண்டு. இன்றைக்குங்கூடச் சீன வுடன் நமக்குச் சௌஜன்யமான உறவுகள் இருக்கின்றன. நம் வெளிநாட்டு மந்திரியா யிருக்கும் பண்டித நேருவுக்கு இவ் விஷயத் தில் நன்றி. அவர் இந்தப் பதவி வகிப்பது நிரம்பவும் பொருத்தம். ஆனல், சீனவி லிருந்து நேரடியாக எந்தத் தந்தியும் வரமுடியாதபடி, அண்டையி லுள்ள ஒரு தேசத்திட மிருந்து பிரிக்கப்பட் டிருக் கிறோம். அது லண்டன் வழியாக வரவேண்டியதாகிறது. அனேக மாக 24 மணி நேரத்துக்கு மேல் ஆகிறது. இவை களெல்லாம் மாற வேண்டும்.

ஏகாதிபத்திய ஆசை யில்லாத ஜனநாயக முள்ள ஒரு ஜப்பான் ஏற்பட்டதும், இந்தியா அதனுடன் சினேகத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கீழ்த்திசை நாடுகளைச் சேர்ந்தவர்களா யிருந் தாலும் சரி, மேற்குத் திசை நாடுகளைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும் சரி, மற்றவர்களின் குரோதங்களில் நம்மைப் பந்தப்படுத்திக்கொள் ளக்கூடாது.

இந்தோனேசியா, கீழ்த்திசைத் தீவுகள் ஆகியவற்றோடும் நமக் குக் கலாசாரத் தொடர்புகள் உண்டு. இவைகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். பரஸ்பர அனுகூலமான வகையில், இந்தத் தேசங்களோடு லாபமான முறையில் நாம் வர்த்தகம் செய்யலாம். இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் இன்னும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தால், அதனல் நஷ்டம் எதுவும் ஏற்படாது. லாபந் தான் அதிகமாய் இருக்கும். நம்முடன் கலாசாரத் தொடர்புகளு டைய இதர நாடுகள் மத்திய ஆசியாவும் மத்தியக்கிழக்குமாகும். நம் ஜனத்தொகையில் கால்வாசிப் பேர், இந்தத் தேச மக்களின் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்களென்று பெருமை பாராட்டி வருகிறார்கள். இந்தத் தொடர்புகளை மறுபடியும் ஏற்படுத்திக்கொண்டு, புதிய சினேக உறவுகளை நாம் ஸ்தாபிக்க வேண்டும்.

சோவியத் ருஷ்யாவுடனும், நம் உறவுகள் இன்னும் அதிக நெருக்கமுடையனவாக இருக்க வேண்டும். இவை எல்லாவற்றுடன், மேற்கு ஜனநாயக நாடுகளுடன் நமக்கு ஏற்கெனவே உள்ள தொடர்புகளைப் பாதுகாத்துக்கொள்ளவும் வேண்டும்.

நமது ஸ்தாபனம், முன்பு, சந்தர்ப்பம் ஏற்படும்போதெல்லாம், அவ்வப்போதுள்ள சர்வதேச விஷயங்களைப் பற்றித் தன் அபிப் பிராயங்களைத் தாராளமாக வெளியிட்டு வந்தது. இப்போது, நமது பிரதிநிதிகள் அதிகாரப் பதவிகளில் இருப்பதால், நாம் முன்னிலும் அதிகமான தன்னடக்கத்தை அனுஷ்டிக்க வேண்டும். இதர நாடு களில் உள்ள மனப்போக்குகளையும் நடவடிக்கை விவரங்களையும்

பற்றித் தகவல்கள் சேகரிக்க, சுதந்தரச் சர்க்கார்களுக்கு எண்ணற்ற வழிகள் உண்டு. இதை நாம் உணர வேண்டும். மற்ற நாடுகளில், இவர்களுக்கு ராஜீய இலாக்காக்களும் ரகசியமாய்த் துப்பறியும் ஏஜண்டுகளும் உண்டு. இவர்களுக்கு வெளி நாட்டுச் சர்வ கலாசாலைகளில் படித்துக்கொண் டிருக்கிற மாணவர்கள் உண்டு. வியாபாரிகளும், வர்த்தக ஏஜென்ட்டுகளும் இருக்கிறார்கள். இந்தத் தகவல்கள் கிடைப்பதற்கான வழிகளைக் காப்பாற்றி வரும்பொருட்டுப் பல லட்சக் கணக்கான பவுனைச் செலவிட்டு வருகிறார்கள்.

சர்வதேசப் பத்திரிகை ஏஜென்ஸிகள் ஒருபுற மிருக்க, மற்றத் தேசங்களைப் பற்றிய தகவல்கள் வந்து குவிவதற்கு இப்படிப் பல வழிகள் இவர்களுக்கு உண்டு. இப்படியெல்லாம் இருந்தபோதிலும்கூட, பகிரங்கமாயும் ரகசியமாயும், உத்தியோக முறையிலும் உத்தியோகப் பற்றற்ற முறையிலும் திரட்டப்படுகிற இத் தகவல்கள் தவறானவையாக இல்லாவிட்டாலும், அனேகமாய் ஏமாற்றிவிடக் கூடியவையாகவே இருக்கின்றன. தகவல் கிடைப்பதற்கான இப்படிப்பட்ட வழிகளில் பெரும்பாலானவை இன்று கிடையாது என்பதை உணரவேண்டும். இந்தச் சர்வதேச ஏஜென்ஸிகள் முறையை இனிமேல்தான் நாம் ஸ்தாபிக்க வேண்டும். தற்போது, நமக்குக் கிடைத்துவரும் சர்வதேச விஷயங்களைப் பற்றிய தகவல்களில் பெரும்பாலானவை, இரண்டொரு பத்திரிகை ஏஜென்ஸிகள் மூலமாக, மூலாம் பூசிய வகையில் நமக்குக் கிடைத்துக்கொண் டிருக்கின்றன. ஆகவே, மற்றத் தேசங்களைப் பற்றிய நம்முடைய அபிப்பிராயங்களில் நாம் உஷாரா யிருக்க வேண்டும். பொறுப்பற்ற வகையில் அபிப்பிராயத்தை வெளியிட்டுவிட்டால், நம்மால் இப்போது ஏற்க முடியாத அளவில் நமக்குப் பெரும் பொறுப்புகள் ஏற்பட்டுவிடும் என்பதை, முன்பு இருந்ததைவிட இன்று அதிகமாக உணர வேண்டும். ஆகையால், இந்த விஷயத்தில் மிகத் தன்னடக்கத்தோடும் நிதானத்தோடும் இருக்கவேண்டியது அவசியம்.

நம் லட்சியம் அப்படியேதான் இருக்கிறது: அதாவது, சுதந்தரத் தேசம் என்ற ரீதியில், ஜனநாயகத்துக்கும், அடிமைப்பட்டவர்களின் விடுதலைக்கும், சர்வதேசச் சமாதானத்துக்கும், ஒத்துழைப்புக்கும் நாம் நம்மாலான சகல அளவு உதவி செய்வோம். மற்ற ஜனங்களுக்கு நியாயம் கூறப் புறப்படுவதற்கு முன், நம் சொந்த ஸ்தாபனங்களிலும் வாழ்க்கை முறைகளிலும் இந்த லட்சியங்களை நிறைவேற்ற முயலுவதே சிலாக்கியம்.

நம்முடைய சர்வதேச உறவில் ஓர் அம்சத்தைப் பற்றி நாம் தெளிவுபடக் கூறி விடுவது, சமாதான விஷயத்திற்கு அத்தியாவசியமாகும். அதாவது, தேசிய ஆதிபத்தியத்தை அனுவசியமாய் பிரமாதப்படுத்த விரும்பாவிட்டாலும், உலக சமாதானத்திற்கும், ஒத்துழைப்புக்கும் உட்பட்ட வகையில், சகல ஜனங்களுக்கும் சமத்துவம் என்ற அடிப்படை மீது, இதன் உரிமைகள் அடங்க விரும்பிய போதிலும், நம் இந்திய மக்கள் தங்களுடைய சொந்தச் சர்க்கார் அமைப்பைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கான உரிமையிலோ, இந்தியாவின் பிரதேச ஆதிபத்தியத்திலோ தலையிடுவதை நாம் சகித்துக்கொண் டிருக்க முடியாது.

நமது தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளின் விருப்பத்துக்கு விரோதமாய் இந்தியாவில் பிரிட்டிஷ் துருப்புகள் இருந்துவருகிற விஷயமா யிருந்தாலும் சரி, நம்மிடையே பிளவுகளை உண்டாக்க வெளிநாட்டாரின் பண உதவி பெற்று, இங்கே பிரசாரம் நடக்கும் விஷயமா யிருந்தாலும் சரி, எந்தச் சாக்குப் போக்குகளையாவது சொல்லிக்கொண்டு, நமது பூமியிலுள்ள பகுதிகளில் போர்ச்சுகீஸியர்களும், பிரெஞ்சுக்காரர்களும் இன்னமும் ஆக்கிரமித்துக் கொண் டிருக்கிற விஷயமா யிருந்தாலும் சரி, இவையெல்லாம் அந்த அடிப்படைச் சுதந்தரங்களை மீறுவனதான். இந்தச் சுதந்தரங்களை எந்தத் தேசமும் பறிக்க முடியாது.

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறி விடுவதாய் நம்மிடம் தெளிவாக உறுதி கூறியிருக்கிறார்கள். இப்படி யிருக்கையில், ஆயிரக்கணக்கான மைல் தூரத்துக்கு அப்பாலிருக்கும் போர்ச்சுகீஸுக்குத்தான் கோவா சொந்தம் என்று அந்த அதிகாரிகள் உரிமை கொண்டாடுவது பரிகசிக்கத்தக்கதாகும். கோவாவில் நம் தோழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் அநீதியையும், அகௌரவத்தையும் அம்பலப்படுத்தியதற்காக நான் டாக்டர் ராம் மனோஹர் லோஹியாவைப் பாராட்டுகிறேன். தங்களுடைய நியாயமான உரிமைகளை நிரூபிப்பதற்காக அங்குள்ள நம் ஜனங்கள் நடத்திவரும் போராட்டத்திற்கு நமது பரிபூரணமான ஆதரவு உண்டு என்று நான் உறுதியளிக்கிறேன். அன்னியரின் கொடிய ஆட்சி முறைக்கு அவர்கள் உட்பட் டிருப்பதைச் சுதந்தர இந்தியா ஒருபோதும் சகித்துக்கொண் டிராது. நியாயமான முறையில் தங்களுக்கு உரிமையில்லாத ஒன்றைத் தங்களுக்குச் சொந்தமானதென்று உரிமை கொண்டாடுவதின் மூலம், ஏற்கெனவே சிக்கலாயுள்ள சர்வதேச நிலைமையை இன்னும் சிக்கலாக்கிவிட வேண்டாமென்று நான் டச்சு அதிகாரிகளுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். செய்த தவறுக்குப் பரிகாரம் செய்வதின் மூலம், நம் இரு தேசங்களுக்கும் இடையே நிரந்தரமான சினேகத்துக்கான அடிப்படையை ஏற்படுத்தும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏகாதிபத்தியங்களின் வாழ்வுக் காலம் மலை யேறிவிட்டது. இன்று, பெரிய பெரிய செல்வாக்கு மிக்க தேசங்களெல்லாம் தம் ஏகாதிபத்தியங்களைக் கைவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு வரும்போது, சிறு நாடுகள் தம் சொந்த நலனை முன்னிட்டு, தங்கள் ஏகாதிபத்திய பிரதேசங்களி லிருந்து தாமாகவே கண்ணியத்தோடு வாபஸாகி, நாடுகளிடையே யுத்தம் ஏற்படுவதற்கான மூல காரணத்தை நீக்க இதன் மூலம் உதவி செய்யவேண்டிய தருணம் வந்துவிட்டது.

தென் ஆப்பிரிக்க இந்தியர் பிரச்னை உலக முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிவிட்டது. ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்துக்குச் சென்றுள்ள இந்தியக் கோஷ்டி, அதை மிக நன்றாக எடுத்துரைத்திருக்கிறது. அது சாதாரண உள்நாட்டுப் பிரச்னைதான் என்று கூறி, ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின்முன் அது வரவிடாதபடி செய்வதற்கு ஸ்மட்ஸ் வீண் முயற்சி செய்தார். இந்த ஆட்சேபணை தள்ளுபடியாகி விட்டது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தங்கமும்,

வைரமும் கொழிக்கும் ஆப்பிரிக்காவில், நமது இந்திய மக்கள் தளராப் போராட்டம் நடத்த முடிந்ததற்கு முக்கியக் காரணம், சத்தியாக் கிரகம் என்னும் அற்புத ஆயுதத்தை அவர்கள் உபயோகித்ததுதான். இந்தப் போராட்டத்தின் முடிவு இன்னும் நமக்குத் தெரியவில்லை. அது தெரிவதற்குக் கொஞ்சக் காலம் ஆகும்.

தென் ஆப்பிரிக்க இந்திய மக்கள் அகிம்சை முறையில் போராடு கிறார்கள் என்பதும், இந்தியாவின் பல பகுதிகளையும் சேர்ந்த, பல் வேறு வகுப்பினர் ஒன்றுகூடி இந்தப் போராட்டத்தை நடத்து கிறார்கள் என்பதுமே நமக்கு மகிழ்ச்சியூட்டுகின்றன. கூலியோ, உணவோ வேண்டுமென்பதற்காக அந்தப் போராட்டம் நடைபெற வில்லை. அதைவிட உயர்ந்த விஷயங்களுக்காகவே போராட்டம் நடக்கிறது. இந்தியாவின் மானத்தையும் சுயமரியாதையையும் காப்பாற்றுவதற்காக அவர்கள் போராடுகிறார்கள். இந்தியா முழுவதுமே அவர்களுடைய போராட்டத்தை ஒருமுகமாக ஆதரிக் கிறது என்று, உங்களுடைய சார்பில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உலகத்திலுள்ள பல்வேறு நிறத்தினரும், நசுக்கப் பட்ட அடிமை மக்களும் தென் ஆப்பிரிக்க இந்தியரின் போராட்டத் தைக் கூர்ந்து கவனித்து வருகிறார்கள். அந்தப் போராட்டத்திற்கான காரணங்களும், அவற்றை ஒழிப்பதற்குக் கையாளப்படும் முறை களும், அவர்களை மிகவும் கவர்ந்திருக்கின்றன.

கென்யாவிலும், தங்கனியாகாவிலும் நடக்கும் போராட்டங்க ளும், தென் ஆப்பிரிக்கப் போராட்டத்துடன் சம்பந்தபட்டவைதான். தென் ஆப்பிரிக்க வெள்ளையர் கூறுவதைவிட, கென்யா, தங்கனியாகா வெள்ளையர் கூறும் கட்சி மிகவும் மோசமானது. நமது மக்கள் ஆப்பி ரிக்காவுக்குப் போய்ச் சேர்ந்த அற்புதக் கதையைச் சொல்ல வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். ஆனால், இந்த அறிக்கை யில் போதுமான இடமில்லாததால், அவற்றைப் பற்றிக் குறிப்பிட முடியவில்லை. கிழக்கு ஆப்பிரிக்க இந்தியத் தூதுக் கோஷ்டியினர் நம் மிடம் கொடுத்த சில தஸ்தாவேஜுகளைப் படிக்கும்படி கூறுவதுடன் நான் இந்த விஷயத்தை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

இலங்கையும், பர்மாவும் நமக்கு மிகவும் நெருங்கியவை. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சிறிய நீர்ப் பரப்பு இருக் கிறது. பர்மாவைப் போலவே, இலங்கையும் இந்தியாவிலிருந்துதான் புத்த மதத்தை ஏற்றது. பூகோளம், கலாசாரம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டாலும், அது இந்தியாவுடன் இணைந்ததுதான். இந்தியாவை அது தாய் நாடு என்றுகூடச் சொல் லிக்கொள்ளலாம். இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணத்துக் கும், இந்தியாவுக்கும் வித்தியாசங்கள் எதையும் காண முடியாது. இலங்கையிலிருந்து இந்தியத் தொழிலாளிகளை வெளியேற்றிவிட வேண்டுமென்று சமீபக் காலத்தில் ஓர் இயக்கம் தோன்றியிருக் கிறது. இது மிகவும் துரதிருஷ்டகரமானது. இந்தியாவிலிருந்து போகிறவர்கள் இலங்கையில் பிரஜா உரிமை கோர முடியாதென் றும் அவர்களை இந்தியப் பிரஜைகளாகவே கருத வேண்டியிருக்கிற தென்றும் சொல்லுகிறார்கள். தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றதைப் போலவேதான், இலங்கைக்கும் நமது தொழிலாளர் சென்றனர்.

அதாவது, இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை உத்தேசித்துத்தான் இந்தியத் தொழிலாளர் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இலங்கையும், இந்தியாவும் அண்டை வீட்டுக்காரர்களைப் போன்ற முறையில், சௌஜன்யமாக வாழ்ந்து வந்தன. அந்த நல்லுறவை நிலைநிறுத்தவும், அதை அபிவிருத்தி செய்யவும் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. இலங்கைச் சர்க்கார் மந்திரிகளைக் கண்டு இந்தியத் தொழிலாளர் பிரச்னை பற்றி விவாதிப்பதற்காக, 1946 மார்ச் மாதத்தில் ஸ்ரீ அரியநாயகம், ஸ்ரீ ராமச்சந்திரன் ஆகிய இருவரையும் காங்கிரஸ் கமிட்டி நியமித்தது. ஆரம்ப வேலைகளை அவர்கள் வெற்றிகரமாகச் செய்து முடித்தார்கள். இந்தப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதற்குப் பண்டித நேருவையும், ஸ்ரீ ச. ராஜகோபாலாச்சாரியாரையும் இலங்கைக்கு அனுப்புவதென்று நினைத்தோம். ஆனால், இங்குள்ள வேலை மிகுதியால், அவர்கள் போக முடியவில்லை. இலங்கை இந்தியர் பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியாது என்று நான் கருதவில்லை. இந்தியாவின் லட்சியமும், இலங்கையின் லட்சியமும் ஒன்றாகவே இருக்கின்றன. இந்தியாவை விட்டுப் பிரிந்து நின்றால் இலங்கைக்கு ஆபத்துத்தான். உலகத்தை விழுங்கி ஏப்பம் விடுவதற்குக் காத்துக்கொண்டிருக்கும் ஏகாதிபத்திய நாடுகள் இலங்கையை ஒரு நொடியில் கபளீகரம் செய்துவிடலாம்.

இன ஆராய்ச்சி முறைப்படி பார்த்தாலும் சரி, சரித்திரப் பூர்வமாகப் பார்த்தாலும் சரி, பர்மாவானது இந்தியாவின் ஒரு பகுதி அல்ல என்பது உண்மைதான். ஆனால், இந்த இரண்டு நாடுகளையும் பொதுவான அடிமைத்தளைகளும், அவற்றை உடைத்தெறிவதற்காக நடைபெறும் பொதுப்படையான போராட்டமும், பர்மாவையும் இந்தியாவையும் தார்மீக முறையில் பிணைத்திருக்கின்றன. இந்த இரு நாடுகளுக்குள்ளும் நெருங்கிய தொடர்பு இருந்தால்தான் அவை இரண்டுமே சுதந்தரமாக இருக்க முடியும் என்பது சென்ற மகா யுத்தத்தின்போது தெளிவாயிற்று. பர்மாவின் பொருளாதார முன்னேற்றத்துக்கு இந்தியர் மிகவும் பாடுபட்டிருக்கின்றனர். பர்மாவுக்குச் சென்று அவர்கள் ஏராளமாகச் சம்பாதித்திருக்கின்றனர். பர்மியருக்குத் தீமை விளைவிக்கும் முறையில் தாங்கள் நடந்து கொள்ளப் போவதில்லை என்று தெளிவாக்குவது அங்குள்ள இந்தியரின் கடமை. பர்மியருக்குத் தீமை விளைவிக்கும் வகையில் தாங்கள் நடந்துகொள்ளப் போவதில்லை என்று அவர்கள் அறிவுறுத்த வேண்டும். நாம் மற்றவர்களால் சுரண்டப்படுகிறோம். எனவே, நாம் மற்றவர்களைப் போய் சுரண்டுகிறோம் என்ற அபக்கியாதி நமக்கு வரக்கூடாது. பர்மாவிலுள்ள இந்தியர் எல்லாரும், தாங்களும் பர்மியர் என்றே நினைத்துக்கொள்ள வேண்டும். பாலுடன் சர்க்கரை கலப்பதுபோல், அவர்கள் ஒன்றுபட வேண்டும். இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய மூன்றும் ஒற்றுமைப்பட்டு, நல்லுறவுகொண்டு நின்றால், சுதந்தர ஆசிய நாடுகள் 'பெடரேஷன்' ஏற்படுத்தும் பொறுப்பை அவை அதியற்புத முறையில் நிறைவேற்றி வைக்கலாம். அப்படிப்பட்ட 'பெடரேஷன்' மூலமாக ஏகாதிபத்தியம், சுரண்டல் முதலியவற்றை அவை எதிர்த்து நிற்க முடியும்.

காங்கிரஸ் என்றால் என்ன என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். காங்கிரஸ் சர்க்கார் என்று சிலர் அடிக்கடி கூறுவதைக் கேட்டிருக்கிறோம். இது அவ்வளவு சரியானதல்ல. பொது ஜன ஜனநாயக சர்க்கார்களையே காங்கிரஸ் சர்க்கார் என்று கூறுகிறார்கள். இந்தச் சர்க்கார்களை ஏற்படுத்துவதற்கும், அவற்றைத் திறமையுடன் நடத்துவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைக் காங்கிரஸ் செய்திருக்கிறது. பொறுப்பை ஏற்று, சர்க்கார் நடத்தக்கூடிய முறையில், இந்திய மக்களைக் காங்கிரஸ் நிறுவியிருக்கிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் சர்க்கார் நடத்தும் யதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்காக, காங்கிரஸின் தலைமையில் அவர்கள் ஒன்றுகூடி நின்றனர். மக்கள் சர்க்கார் அமைப்பதை விட்டுவிட்டு, காங்கிரஸ், மீண்டும் சுதந்தரப் போராட்டத்தில் இறங்கலாம். அப்படி நடக்காதென்று நாம் நம்புவோமாக. ஆனால், நான் அறிவுறுத்த வந்த விஷயம் அதுவல்ல. தேச சேவையை நன்றாகச் செய்வதற்கு மக்கள் நிறுவியுள்ள ஸ்தாபனம் காங்கிரஸ் என்பதையே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். மேற்கூறிய சேவை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு விதமாக இருக்கும்.

எனவே, காங்கிரஸ் என்பது இந்திய மக்களின் பிரதிநிதி ஸ்தாபனம், இந்திய மக்களின் சார்பில் வேலை செய்வதற்காக ஏற்பட்ட நிலயம். மக்களின் சேவை, தியாகம் ஆகியவற்றின் மூலமாகக் காங்கிரஸ் இந்த அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. கஷ்டங்களை அனுபவிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஏனெனில், தேசத்தை நசுக்கிப் பிழியும் வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்துக்கட்டும் வேலையை காங்கிரஸ் மேற்கொண்டிருக்கிறது.

காங்கிரஸ் என்பது சர்க்காரைக் குறிப்பதல்ல. அது ஒரு தொண்டர் படை. இதை எல்லாரும் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். காங்கிரஸின் சக்தி, அதன் பலவீனம் ஆகிய இரண்டும் மேற் கூறியதனால்தான் ஏற்படுகின்றன. சர்க்காருக்கு உள்ள அதிகாரம் தொண்டர் படைக்குக் கிடையாது. சர்க்கார் உத்தரவையோ கட்டுப்பாடுகளையோ மீறினால், அப்படி மீறுகிறவர்களைத் தண்டிப்பதற்கு மாஜிஸ்ட்ரேட்டும், போலீஸும், ராணுவத்தினரும் இருக்கிறார்கள். ஆனால், தொண்டர் படை ஒன்றின் கட்டுப்பாட்டை நிலை நிறுத்துவதற்குப் போலீஸ், ராணுவம் ஆகியவற்றின் உதவி ஒன்றும் கிடையாது. ஸ்தாபனத்தின் அங்கத்தினர்கள் மனப் பூர்வமாக அளிக்கும் ஒத்துழைப்பினாலேயே அதன் கட்டுப்பாடு நிலைத்து நிற்கிறது. அதற்கு இருப்பது தார்மீகச் சக்தியே. கட்டுப்பாட்டை மீறி நடந்தால், ஒருவரைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றலாம். காங்கிரஸ் விதிக்கக்கூடிய தண்டனை எல்லாம் அவ்வளவுதான்.

எனவே, இதைப்போன்ற ஸ்தாபனம் நிலைத்து, நன்றாக வேலை செய்ய வேண்டுமானால், ஒற்றுமை மிகவும் அவசியம்.

இந்த ஒற்றுமை மற்றவர்கள் சொல்லிவிடுவது அல்ல. பெரிய லட்சியத்துக்காகப் பாடுபடும்போது சிறிய விஷயங்களையும், சொந்த விவகாரங்களையும் அடிப்படுத்திக்கொள்ள வேண்டும். இதை நன்குணர்வதன் மூலமாகவே ஒற்றுமை ஏற்பட முடியும். சிறிய விஷயங்கள் எல்லாம் பெரியவற்றில் அடங்கிவிடுகின்றன என்பதை

அழகின் சிறப்பு—

சருமசுகத்தின் மகிமையே

ரெக்ஸோனு

சருமசுகத்திற்கு

உங்கள் வசீகரம் பெரும்பாலும் மேனியழகை பொறுத்திருக்கிறது. மேனியழகு சரும சுகத்தினுல் மட்டுமே ஏற்படுகிறது. சருமத்தைப் போஷிக்கும் குணமுடையதும் ஆன்டிஸெப்டிக்குமர்ன தைலங்கள் சேர்ந்துள்ள 'கேடில' ரெக்ஸோனுவில் அடங்கியிருப்பதால் அதி சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதுமல்லாமல் சரும அழகு ஏற்படவும் உதவுகிறதி. அதிசீக்கிரத்தில் தாராளமாயுண்டாகும் ரெக்ஸோனுவின் நுரை சருமத்திற்குள் சுகமளிக்கும் கேடிலே சேர்த்து ஆற்றலுடன் அழகையும் கொடுக்கின்றது. கேடில் கலந்துள்ள விசேஷமான சோப் இது ஒன்றே. அதனுலேயே இச்சோப் சருமத்தை மச்ச மறுக்களிலிருந்து பாதுகாக்கிறது.

ஆரோக்கியமிகுதியால் சோபையடையும் சருமத்தை முக்கியமாகக் கருதும் ஆடவர்கள், ரெக்ஸோனுவின் சுறுசுறுப் பளித்து சக்தியை ஊட்டும் திறமையைமெச்சுவார்கள். சுகமான சருமமேற்பட விரும்பும் ஆடவர்களுக்கு, ரெக்ஸோனு இன்றியமையாதது என்று உண்மையாக சொல்லலாம்.

குழந்தைக்கு ரெக்ஸோனு: குழந்தையின் மெல்லிய சருமத்தில் புண்கள், சினப்புகள் ஏற்பட வழியுண்டு. ரெக்ஸோனுவின் மருந்து சேர்ந்த நுரை சிறு கைகால்களே சாதாரண சரும வியாதிகளிலிருந்து காப்பாற்றுகிறது.

★ ரெக்ஸோனுவிலுள்ள கேடில், ஆன்டிஸெப்டிக்கும் சுகமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்தஒருவிசேஷ மருந்து. இம்மருந்து சருமப் பாதுகாப்பிற்கு ரொம்பவும் உத்தமமானது.

BP. 31-50-40 TM REXONA PROPRIETARY LIMITED

ELA
எலா
சிகரெட்டுகள்
CIGARETTES
ELA
10 Cigarettes
10 CIGARET
இந்தியாவிற்கு
சொந்தமானது
உங்களுக்கும் சொந்தமே
GOLDEN TOBACCO CO.
GREENS ADVTG
(GT 102.)

எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். முக்கியமாக, இந்தியாவில் உள்ளவர்கள் இதை அறிந்துகொள்ள வேண்டும். நான் இப்படிச் சொல்லுவதி லிருந்து, காங்கிரஸில் அபிப்பிராய பேதங்களுக்கு இட மில்லை என்றோ, வேறு கட்சியினருக்கு இட மில்லை என்றோ எண்ணிவிடக் கூடாது.

லட்சியத்தில் ஒரு பாகத்தை மட்டும் ஒப்புக்கொண்டு, அதற் காகப் பாடுபட முடியாது என்பதை எல்லோரும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் நாம் ஆங்கிலேயரிடமிருந்து ஒரு பாடம் கற்றுக்கொள்ளலாம். தேச நன்மைக்காகப் பாடுபடும் போது, அவர்கள் தங்களுடைய குடும்பம், கட்சிச் சச்சரவு ஆகிய எல்லாவற்றையும் மறந்துவிடுகிறார்கள்.

நமக்குள் அனேக விஷயங்களில் அபிப்பிராயப் பேதங்கள் இருக்க லாம். அவற்றைப் பிரமாதப்படுத்தாமல், நமக்குள் ஒற்றுமை இருக் கும் விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலமாக, நாமும் மேற்கூறியபடி லட்சியத்தின் மேல் கண்ணுங் கருத்துமாக இருக்கலாம். அப்படி யிருப்பதில் கஷ்டமும் இல்லை. ஏனெனில், காங்கிரஸிலுள்ள கோஷ்டிகளை எடுத்துக்கொண்டால், அவைகளுக் கிடையில் அபிப்பி ராயப் பேதம் நிறைந்த விஷயங்கள் மிகவும் குறைவு. பல விஷயங்களில் அவை ஒரே கருத்து உடையவையாக இருக்கின்றன. அப்படி ஒற்றுமை நிறைந்த விஷயங்கள்தான் முக்கியமானவை. சிறிய அபிப்பி ராயப் பேதங்களைப் பிரமாதமாக்கி, அவற்றினால் ஏதோ கொள்கைகளே பறிபோகிற மாதிரி செய்துவிடக் கூடாது. எல்லாருடனும் நேரடியான பரிசயம் வைத்துகொள்ள வேண்டும். சிலருடைய கொள்கைகளோ, கோட்பாடுகளோ மிகவும் மோசமானவையாக இருக்கலாம். ஆனால், அந்தக் கொள்கைகளை யுடையவர்கள் நிரம்பவும் நல்லவர்களாக இருக்கக் கூடும். அப்படிப் பட்டவர்களுடன் நேரடியாகப் பழகினால் தான் அவை எல்லாம் தெரியும். காங்கிரசிலுள்ள பல்வேறு கோஷ்டி களுக்கும் நான் ஒரு விஷயத்தை மிகவும் முக்கியமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸில் ஒரு கோஷ்டியி லிருந்துவிட்டு, அதில் ஏற்படும் அதிருப்தியினாலோ, ஏமாற்றத்தினாலோ, நிர்ணயமற்ற மனோபாவத்தினாலோ மற்றக் கோஷ்டிக்கு வர விரும்புகிறவர்களுக்கு, ஒருவரும் இடம் கொடுக்கக் கூடாது. அப்படி இடம் கொடுத்தால் கோவிலுக்கு அருகில் வந்து கள்ளுக் கடை வைத்த மாதிரி ஆகி விடும்.

காங்கிரஸ் நன்றாகவும், திடமாகவும் வேலை செய்ய வேண்டு மென்றால், நமக்குள் கட்டுப்பாடு இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்தக் கட்டுப்பாட்டை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கட்டுப்பாட்டுக் குறைவு ஏற்பட முடியாத படி செய்யும் பழக்க வழக்கங்களை நாம் அமலுக்குக் கொண்டுவர வேண்டும். சில விஷயங்களைக் காங்கிரஸ்காரர் செய்ய முடியாது என்ற உறுதி தேசத்தில் ஏற்பட்டுவிட வேண்டும். ''காங்கிரஸ் காரர் அந்த விஷயங்கள் செய்வ தில்லை. எனவே, அவற்றை அவர் கள் செய்திருக்க முடியாது'' என்று கூறும்படியான பழக்க வழக் கங்கள் நம்மிடையில் ஏற்பட வேண்டும். அதிகாரத்துக்காக நமக் குள் ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டு நிற்கக் கூடாது. ஸ்தாபனத்தைத் தம்முடைய ஆதிக்கத்தில் கொண்டு வந்துவிட வேண்டு மென்ற பேராசையும் இருக்கக் கூடாது. சேவையினால்

சக்தியைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். மேன்மேலும் சேவை செய்வதற்காகவே அந்தச் சக்தியை உபயோகித்துக்கொள்ள வேண்டும். காங்கிரஸ் ஸ்தாபனம் என்பது சர்க்கார் அல்ல. ஜனங்களுக்குச் சேவை செய்வதன் மூலமாக நாம் எவ்வளவு தூரம் அதைப் பலப்படுத்துகிறோமோ, அவ்வளவு தூரம்தான் நாம் அதிலிருந்து பலனும் அடைய முடியும். ஜனங்களுடைய பிரியம்தான் நம்மைச் சாபல்ய மடையச் செய்கிறது. காந்திஜி நினைப்பதைப் போல், அதையே நம்முடைய சேவைக்குக் கிடைக்கும் சிறந்த பரிசாகக் கருதவேண்டும்.

வெளி நாட்டு ஏகாதிபத்தியத்தை] எதிர்த்து நடத்திய போராட்டங்களில், நாம் சில முறைகளைக் கையாண்டு, கிளர்ச்சி செய்தோம். சுதந்தரத்தை அடைவதற்காக நாம் அப்படிப்பட்ட முறைகளைக் கடைப்பிடித்தோம். அவை நமக்குப் பயனளித் திருக்கின்றன என்பதற்காக, அவற்றை எல்லா இடங்களிலும் அனுஷ்டிக்கத் தோன்றலாம். இப்போது நாம் அதிகாரத்தில் வைத்திருக்கும் ஜன நாயகச் சர்க்கார்களை எதிர்த்துக்கூட மேற்படி முறைகளை அனுஷ்டிக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். சுதந்தரத்துக்குப் பாடு படுவதற்காகவே நாம் நமது ஜனநாயகச் சர்க்கார்களை அதிகாரத்திலிருக்கும்படிக் கூறியிருக்கிறோம். எனவே, வெளி நாட்டுச் சர்க்காருக்கு எதிராக நாம் கையாண்ட அதே முறைகளை உபயோகித்து, நம்மையே எதிர்க்கப் பார்ப்பது அவ்வளவு பொருத்தமான விஷயம் அல்ல. வெளி நாட்டுச் சர்க்கார் ஆட்சி செலுத்தியபோது, அதன் கொள்கைகளை நாம் எந்த விதத்திலும் திருத்தி அமைக்க முடியாமலிருந்தது. அவை நம்முடைய அபிப்பிராயங்களை மதித்து நடக்கவில்லை. நாம் உருப்படியான விஷயங்களைச் சொன்னால், அவற்றை ஒருவரும் லட்சியம் செய்வதில்லை. அப்படிப்பட்ட நிர்வாகத்தை அகற்றிவிட்டு, வேறு நிர்வாகத்தை ஏற்படுத்தலா மென்றால், அதற்கு ஏற்ற ஜனநாயக வழி எதுவும் இல்லை. சர்ச்சிலிடம் பிரிட்டிஷ் மக்கள் மிகவும் மதிப்பு வைத்திருந்தார்கள். யுத்தக் காலத்தில் அவர் செய்த சேவைகளுக்காக அவரை மிகவும் பாராட்டினார்கள். ஆனால், தேர்தல் வந்ததும் அவர்கள் சர்ச்சிலுக்குச் சீட்டுக் கொடுத்துவிட்டார்கள். ஏனெனில், சமாதானக் காலப் பிரச்னைகளைச் சரியான படி கையாளுவதற்குத் தகுந்த தலைவரை அவர்கள் தேர்ந்தெடுக்க விரும்பினார்கள். ஆனால், இந்தியாவில் நிலைமை எப்படி இருக்கிறது?

கிராமத்திலுள்ள போலீஸ்காரன் ஒருவன் வீண் கலாட்டாச் செய்துகொண் டிருந்தால், அவனை மாற்றுவதற்கு வேண்டிய அதிகாரம்கூட நம்மிடம் கிடையாது.

இந்த நிலைமையில், கண்டனம், கிளர்ச்சி ஆகியவை மூலமாகத்தான் நாம் நம்முடைய கஷ்டங்களைப் போக்கடித்துக்கொள்ள முடியும். இது நாச வேலை செய்வதைப் போன்றதுதான். அவர்கள் உருப்படியான யோசனைகளை அனுமதிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ இல்லாததால் நாம் அப்படிச் செய்யவேண்டி யிருந்தது. நம்முடைய சுதந்தரத்தை அடைவதற்காக நாம் நேரடி நடவடிக்கைகளும் நடத்தியிருக்கிறோம்.

இன்று நம்முடைய மந்திரிகளையும் சட்ட சபை அங்கத்தினர்

களையும் மாற்ற வேண்டுமானல், அதற்கு நேரடி நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர்களை நாம் கண்டிக்கும் போது, ஜாக்கிரத்தையுடனும், பெருந்தன்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

மத்தியச் சர்க்காரிலும், மாகாணங்களிலும் பதவி வகிக்கும் நமது மந்திரிகள் பலவிதமான கஷ்டங்களுக் கிடையில் வேலை செய்து வருகிறார்கள். பல விதமான அரசியல், நிர்வாகக் கஷ்டங்களை அவர்கள் சமாளிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய சிரமத்தையறிந்து, நாம் அனுதாபத்துடன் நடந்துகொள்ள வேண்டும். பல விஷயங்களை வெகு சீக்கிரத்தில் செய்து முடித்துவிட வேண்டுமென்று தேச மக்கள் கருதுகின்றனர். சுதந்தரத்துக்காக நாம் வெகு நாட்கள் காத்துக்கொண் டிருந்துவிட்டோம். அதில் நம்முடைய ஆர்வம் அளவு கடந்து இருக்கிறது. சுதந்தரம் வந்ததும் நம்முடைய கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்து போகும் என்ற எண்ணம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே நாம் இப்போது சற்றுப் பொறுமை இழக்கக் கூடும். ஜனங்களுக்குச் சேவை என்பதையே செய்து அறியாத சர்க்கார்கள் அமல் நடத்திய இடத்தில், ஜனங்களுக்குத் தாங்கள் எஜமானர்கள் என்று நினைத்தவர்கள் வேலை செய்த இடத்தில், நமது பிரதிநிதிகள் இருந்துகொண்டு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடும்.

சுயநல வாதிகளின் சூழ்ச்சிகள் தேசியச் சர்க்காரின் வேலைகளுக்கு எவ்வளவோ விதங்களில் இடையூறு செய்கின்றன. இந்தச் சுயநலமிகளில் உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்த ரல்லாதவர்கள், நம் தேசத்தவர், வெளி நாட்டினர் ஆகிய பலவகையினர் உண்டு. இவர்களுக் கிடையில் நம்முடைய கண்டனம் உருப்படியான முறையிலும், அனுதாபத்துடன் கூடியதாகவும் இருக்க வேண்டுமே தவிர, நாச வேலை செய்வதாக இருக்கக் கூடாது. பரம்பரையாக வந்துள்ள குறைகளை எல்லாம் நீக்கிச் சரியானபடி வேலை செய்வதற்கு வேண்டிய அவகாசத்தை நாம் நமது பிரதிநிதிகளுக்கு அளிக்க வேண்டும்.

வெளி நாட்டினரை எதிர்த்துப் போராடும்போது, தேச பக்தியினல்தான் நாம் அப்படிப் போராடுவதாகச் சொல்லிக்கொள்ளலாம். ஆனல், நம்மைப் போலவே தியாகங்கள் செய்து கஷ்டங்களை அனுபவித்த தலைவர்களை எதிர்த்துப் போராடும்போது, தேச பக்தியைக் காரணமாகக் கூறினல், அது அவ்வளவு சரியாகத் தோன்ருது. தேச பக்தர்களையும், மக்களுக்குச் சேவை செய்பவர்களையும் சில சமயங்களில் அதிகார ஆசை கெடுத்து விடுகிறது என்பது எனக்குத் தெரியும். அதிகாரத்தினல் ஏற்படும் கெடுதலை நாம் தடுக்க முடியாது. இன்றுள்ள சிக்கலான சமூகத்தில், தன்னுடைய கஷ்டமான கடமையைச் செய்வதற்கு வேண்டிய சக்தி, நிர்வாகத்தி லுள்ளவர்களுக்கு வேண்டும். எந்தச் சர்க்கார் மிகவும் குறைவாக அமல் நடத்துகிறதோ, அதுவே சிறந்த சர்க்கார் என்ற மலையேறிப்போன பல்லவியை, கிளியைப் போலத் திருப்பித் திருப்பிப் பாடுவதில் பிரயோஜன மில்லை. நுணுக்கமான சட்டப் பிரயோகங்களின் மூலமாகச்

சமூகத்தி லுள்ளவர்களைச் சுரண்டப் பார்க்கும் ஆட்கள், ஸ்தாபனக்கள் ஆகியவற்றிட மிருந்து சமூகத்தைப் பாதுகாக்க வேண்டியது இன்றைக்கு அவசியமாக இருக்கிறது. இதைப்போன்ற ஸ்தாபனங்களிட மிருந்தும், ஆட்களிட மிருந்தும், பொது மக்களின் உரிமைகளைச் சர்க்காரே பாதுகாக்க வேண்டும். பழைய கால மன்னர்கள் மேற்கொள்ள வேண்டு மென்று நினைத்திருக்காத கடமைகளை எல்லாம் இன்று சர்க்கார் மேற்கொள்ளவேண்டி யிருக்கிறது. எனவே, நிர்வாகத்தி லுள்ள தேசிய மந்திரி சபைகள் தங்களுடைய வேலையை நன்ருகச் செய்ய வேண்டுமானல், அவர்களுக்குப் போதிய அதிகாரம் வேண்டும். சில ஜனநாயக நாடுகளில் இன்றைக்குச் சர்க்காருக்கு உள்ள அதிகாரம், முதலாவது சார்ல்ஸ் அரசனுக்குக்கூட இருந்திருக்க முடியாது. அதிகாரத்தைச் சர்க்கார் சரியாக உபயோகித்து வருகிறதா என்று எப்பொழுதும் பார்த்துக்கொண் டிருந்தால்தான், அதிகாரத்தை எவரும் துஷ்பிரயோகம் செய்ய முடியாது. பொது அறிவு, அரசியல் ஞானம் ஆகியவை பெருகப் பெருக, இந்த விழிப்பும் நிச்சயம் ஏற்படும். இதற்கிடையில், நாம் சிருஷ்டித்துள்ள ஸ்தாபனங்கள் மூலமாகவே மந்திரி சபைகளுக்கு நம்முடைய கருத்துக்களைத் தெரிவித்து வரவேண்டும். சர்க்கார் நடத்தும் நமது பிரதிநிதிகளைப் பற்றி நாம் கூறுவதையும், செய்வதையும் நமது எதிரிகள் உபயோகித்துக்கொண்டு, நமது மந்திரிகளை அவமதிக்கத் தொடங்குவார்கள். இதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது.

எதிர்கால விமர்சகர்களைப்பற்றி இவ்வளவு தூரம் கூறியது போதும். சர்க்காரில் உள்ளவர்களைப் பற்றியும் சிறிது கூற வேண்டும். தாங்கள் பொது மக்களின் சேவகர்கள் என்பதையும், அவர்களுடைய எஜமானர்கள் அல்ல என்பதையும் அதிகாரத்தி லுள்ளவர்கள் மறந்துவிடக் கூடாது. உயர்ந்த ஸ்தானத்துக்கு வர உதவிய பொது மக்களைத் தாங்கள் அலட்சியம் செய்ய முடியாது என்பதை அவர்கள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் காங்கிரஸுக்கும், அதன் மூலமாக இந்திய மக்களுக்கும் உண்மையான விசுவாசத்துடன் நடந்துகொள்ள வேண்டும். இந்திய மக்களிட மிருந்துதான் தங்களுக்கு வேண்டிய சக்தியை அவர்கள் பெறுகிருர்கள். பொது மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய முக்கியமான பொறுப்பு அவர்களைச் சேர்ந்தது. அதிகார வர்க்கத்தினருடன் அவர்களும் ஒன்றுபட்டுவிடக் கூடாது. அதிகார வர்க்கத்தி லுள்ள குறைபாடுகளை அவர்கள் நீக்க முயலவேண்டும். எதையும், சுற்றி வளைத்துச் செய்யாமல், சீக்கிரத்தில் செய்யக்கூடிய முறையை ஏற்படுத்த வேண்டும். கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக வெளிநாட்டுச் சர்க்கார் வைத்துக்கொண் டிருந்த படாடோபங்களையும் நீக்கிவிட வேண்டும். சேவையினுல்தான் கௌரவம் ஏற்பட வேண்டும். பதவி ஏற்பதற்கு முன்னுல் அவர்கள் மேற்கொண்ட எளிய வாழ்க்கையையே, அப்புறமும் தொடர்ந்து நடத்த வேண்டும்.

காங்கிரஸின் சட்ட திட்டங்கள் இப்போது சரியாக வேலை செய்ய வில்லை என்று கூறப்படுகிறது. காங்கிரஸ் மிகப் பெரிய ஸ்தாபனமாக வளர்ச்சி பெற்றுவிட்டது. அதனுல், காங்கிரஸின்

சட்ட திட்டங்களையும் அடியோடு மாற்றி யமைக்க வேண்டுமென்று பலர் சொல்லுகிறார்கள். எனவே, செய்ய வேண்டிய மாறுதல்களைப் பற்றி ஆலோசனை கூறுவதற்காக ஒரு கமிட்டியை அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி நியமித்திருக்கிறது. அந்த ஆலோசனைக் கமிட்டி பல தடவைகள் கூடி, தனது ஆலோசனைகளைத் தெரிவித்திருக்கிறது. இவற்றைக் காரியக் கமிட்டியும், விஷயாலோசனைக் கமிட்டியும் ஒப்புக்கொண்டால், உங்களுடைய சம்மதத்துக்காக இவை உங்களிடம் வரும்.

எந்தக் காரணத்தை முன்னிட்டாவது, இந்த மாறுதல்களை உடனே அமலுக்குக் கொண்டுவர முடியாவிட்டால், இடைக்கால மாறுதல்கள் சிலவற்றைச் செய்ய வேண்டுமென்று சட்ட திட்டக் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. தேர்தல் முறைகளைச் சீர்திருத்தி, கூடியவரையில் லஞ்சம், பதவி மோகம், பலாத்காரம் ஆகியவற்றை ஒழிப்பதற்காக இந்த இடைக்கால மாறுதல்கள் சிபார்சு செய்யப் பட்டிருக்கின்றன. ஆனால், எவ்வளவுதான் தடைகள் போட்டாலும், அவரவர்களுக்கு நற்குணங்கள் இருந்தாலொழிய, அவை சரியாக வேலை செய்ய முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். போன யுத்தமானது மனிதனுடைய உயர்ந்த லட்சியங்களை எல்லாம் கொன்று விட்டது. சாதாரணமாகப் பொது ஜனங்கள் எல்லாரும், எதிலும் நம்பிக்கை யற்றவர்களாக இருக்கிறார்கள். எங்கே கண்டாலும் அது கள்ளச் சந்தை முறைகளை ஏற்படுத்தியிருக்கிறது. காங்கிரஸ் தேர்தல்களிலும் இந்த முறைகள் உபயோகிக்கப்பெற்று வருகின்றன. லஞ்சம், புரட்சி, ஒருவருக்குப் பதிலாக வேறொருவர் சொல்லுரிமை அளிப்பது ஆகியவை தேர்தல்களின் போது உபயோகிக்கப்பெற்று வருகின்றன. சில சமயங்களில், பலாத்காரம்கூட உபயோகிக்கப்பெற்று வருகிறது. சொல்லுரிமை இடும் பெட்டிகளையே திருடிச் சென்று அழித்து விடுகிறார்கள். இவை எல்லாம் மிகவும் கேவலமானவை. பொது ஜனச் சேவை புரியும் முறை மிகவும் கேவலமாக இருக்கிறது என்பதுடன், தார்மீகக் கோட்பாடுகளை நாம் சரிவர அனுஷ்டிப்பதில்லை என்பதையும் அவை எடுத்துக் காட்டுகின்றன.

வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அகிம்சையையும், நமக்குள் நடக்கும் விஷயங்களைத் தீர்த்துக்கொள்வதற்குப் பலாத்காரத்தையும் உபயோகிப்பது நிரம்ப வேடிக்கையாக இருக்கிறது. இதிலிருந்து, நம்முடைய அகிம்சை எல்லாம் பலவீனர்கள் அனுஷ்டிக்கும் அகிம்சையே ஒழிய, பலம் நிறைந்தவர்கள் அனுஷ்டிக்கும் அகிம்சை அல்ல என்பது நன்றாகத் தெரிகிறது. பலவீனமானவர்களாக இருந்து அகிம்சை முறையை அனுஷ்டிப்பதைவிட, பலம் வாய்ந்தவர்களாக இருந்து, பலாத்காரத்தைப் பின்பற்றுவதே மேல்.

ஓர் உன்னத லட்சியத்துக்காகப் பாடுபடும் பாக்கியம் நம்முடைய தலைமுறையினருக்குக் கிட்டி யிருப்பது நமது அதிர்ஷ்டம் தான். வெளிநாட்டினரின் தளைகளிலிருந்து நமது மக்கள் விடுதலை பெறுவதற்காக மட்டும் நாம் சேவை செய்வது போதாது. அந்தச் சந்தர்ப்பம் பலருக்கு வந்திருக்கிறது என்பதை உலகச் சரித்திரத்திலிருந்து அறிகிறோம். ஆனால், நம்முடைய சந்தர்ப்பம் மிகவும் அதி

சயமானது. சத்தியம், அகிம்சை ஆகியவை மூலமாகச் சுதந்தரம் பெறுவதே நமது லட்சியம். தர்ம நியாயமான முறைகளில், உயர்ந்த லட்சியங்களை அடைய நாம் பாடுபட்டு வருகிறோம். பல்வேறு ஜாதி மதத்தினர், நிறத்தினர், வகுப்பினர் ஆகியவர்க ளிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு நமக்கு அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. எதிரிடையாகத் தோன்றும் வெவ்வேறு கலாசாரங்க ளிடையில் ஒற்றுமை ஏற்படுத்தும் அரிய சந்தர்ப்பம் நமக்கு வாய்த்திருக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் மகத்தான தொண்டை நாம் மேற்கொண் டிருக்கிறோம்.

சமூக, பொருளாதார, கலாசார, நிற, அரசியல் வேறுபாடுகளைச் சமாதான முறையில் தீர்த்து வைப்பதற்கு ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும் என்பதையும், இல்லாவிட்டால், மனித வர்க்கமே அழிந்துவிடும் என்பதையும் நாம் மறக்கக் கூடாது. பலாத்காரத்தினால் அவற்றைத் தீர்க்க முடியாது. இப்போது பலாத்காரம் அளவுகடந்து பெருகிவிட்டது. அந்த மருந்தை உட்கொண்டால் நோய், நோயாளி ஆகிய இருவருமே அழிய வேண்டியதுதான். வேறு ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டும். அந்த வழியை இப்போது இந்தியா கண்டுபிடித் திருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு ஒரு தடவையே கிடைக்கும் தலைவர் நமக்கு இப்போது கிடைத்திருக்கிறார். அவருடைய தலைமையில் நாம் கண்ட புது வழியைப் பின்பற்றி வருகிறோம். சிற்சில இடங்களில் தவறுகள் நேர்ந்திருக்கின்றன. ஆனால், ஆள் நஷ்டம், பொருள் நஷ்டம், கலவரங்கள் ஆகியவை எந்தப் புரட்சியின் போதும் இவ்வளவு குறைவாக இருந்ததில்லை. இந்தியப் புரட்சி ஒன்றில்தான் மேற் கூறிய நஷ்டங்கள் மிகக் குறைவு. இந்தப் புரட்சி வெற்றி அடையும் தறுவாயி லிருக்கிறது. நாம் ஜாக்கிரதையாக இருந்தால், வெற்றி பெற்றுவிடுவோம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நமக்கு உடனடியான வெற்றி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், நாம் மகத்தான லட்சியத்துக்காகப் போராடி வருகிறோம் என்பதை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட லட்சியப் போராட்டத்தில் தோல்வி என்பதே கிடையாது. ஆனால், அந்த லட்சியம் நிறைவேற வேண்டுமானால், அதில் ஈடுபட்டுள்ளவர்கள் நல்லவர்களாகவும், மகா புருஷர்களாகவும் இருக்க வேண்டும். உன்னத லட்சியங்களுக்கும் அடிமைத்தனத்துக்கும் வெகு தூரம். ஆனால், நூற்றுக் கணக்கான வருஷங்களாகப் பரவிக் கிடக்கும் இருள், ஒரு தீபத்தைக் கொண்டு வந்தவுடன் மறைந்துவிடுகிறது. இந்தியாவில் இந்தத் தீபம் ஏற்றப்பட்டுவிட்டது. அதை அணையா விளக்காகச் செய்து, அதன் தலைமையில் நாம் முன்னேறுவோம்; எல்லாரும் நம்மைப் பின்பற்றுவார்கள். வந்தே மாதரம்!

✲

அச்ச மில்லை!

தன்னம்பிக்கை வைத்து, நேர்மையாய் நடந்துகொண்டவர்களுக்கு எத்தகைய அச்சமு மில்லை. அவர்கள் எதற்கும் கவலைப்படமாட்டார்கள்.

—தாருல் இஸ்லாம் (அன் ஆம் 6:48)

எனது பிரார்த்தனை

மகாத்மா காந்தி

பிரார்த்தனையானது ஆத்ம விமோசனத்தின் சாதனமாக இருப்பதோடு, இக லோகத்தில் விடுதலை பெறுவதற்கான ஆயுதமாகவும் இருக்கிறது. பெரியது கிடைக்கும் பொழுது சிறியதும் கிடைத்துவிடும். ஜனங்கள் தம்முடைய அகிம்சா பலத்தைக் கொண்டே சுதந்தரத்தைப் பெற வேண்டுமானால், அவர்கள் ஞானியின் குணங்களை ஓரளவேனும் தங்களிடம் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அந்த லட்சியம், ஞானிகளுக்கு மட்டுமேயன்றி, எல்லோருக்கும் —சாதாரணமாகப் பாமர மக்களுக்குங்கூட— அவசியமானதே. மகாபாரதத்தில் கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குக் கீதையை உபதேசித்ததாகச் சொல்லுங் கதையில், கிருஷ்ணனைச் சாரதியாகவும், அர்ஜுனனைச் சாதாரண அறிவுள்ள குடியானவன் ஒருவனாகவுமே வியாசர் வர்ணித்திருக்கிறார்.

அப்படியானால், ஞானியின் லட்சணங்கள் யாவை? ஆமையானது தன்னுடைய உறுப்புக்களைத் தன்னுடைய ஓட்டுக்குள் அடக்கிக்கொள்வதுபோல், தன்னுடைய ஐம்புலன்களையும் பொருள்கள் மீது செல்லவொட்டாமல் தடுத்துக்கொள்ளுகிறவனே ஞானியாவான்.

எவனுடைய அறிவு நிலையாக இல்லையோ, அவன் எளிதில் கோபத்துக்கும், தீய எண்ணங்களுக்கும், இன்னாச் சொற்களுக்கும் இடம் கொடுத்துவிடுவான். ஆனால், அதற்கு மாறாக, எவனுடைய அறிவு அசையாமல் நிற்கிறதோ, அவன் புகழையும் இகழையும் ஒன்றாகவே மதிப்பான். எச்சு மொழிகள் எசும் நாவை இழிவுபடுத்துமேயன்றி, எசப்பட்டவனை இழிவுபடுத்தாதென்பதை உணர்ந்துகொள்வான். ஆதலால், ஞானியானவன் யாருக்கும் தீமை எண்ண மாட்டான். பகைவனுக்காகக் கூடக் கடைசிவரை கடவுளிடம் பிரார்த்தித்துக்கொள்வான்.

அனுஷ்டிக்க முடியாத அளவுக்கு இந்த லட்சியம் கஷ்டமானதா? இல்லை. அதற்கு மாறாக, இந்த லட்சியம் கூறும் ஒழுக்க முறைதான் மனித ஜாதியின் பெருமைக்குத் தகுந்த ஒழுக்க முறையாகும்.

இன்று, நம்முடைய மனம் விஷயம் அறியாதபடியால், குழம்பிப்போயிருக்கிறது. நாம், அறியாமையின் காரணமாகச் சண்டையிடவும், அக்கிரமங்கள் செய்யவும் ஆரம்பித்திருக்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு விமோசனமும் கிடையாது, சுயராஜ்யமும் கிடையாது. தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வதாகிய சுய ஆட்சி சுயராஜ்யத்துக்கு அஸ்திவாரமாகும்.

கீதையிலுள்ள சம்ஸ்கிருத ஸ்லோகங்களை எல்லோராலும் சரியாகப் பாராயணம் செய்ய முடியாமல் இருக்கலாம். ஆனால், ராம்துன் பாடுவதில் கலந்து

பிரார்த்தனை, வெறும் மதச் சம்பிரதாயமல்ல: ஆத்மப் பயிற்சி, இன்றைய அவசரத் தேவை. காந்தீ வழி 3-வது வரிசையாகிய "சுயராஜ்யம் வேண்டாமா?"விலிருந்து எடுத்தது.

கொள்வது எல்லோராலும் சாத்தியமான காரியம். எல்லோரும் சேர்ந்து, தாளம் பிசகாமல், ராம் துன் பாடுவது பரம எளிய முறையில் பிரார்த்தனை செய்வதாகும்.

ஹிந்துக்கள் அல்லாதார் அதில் கலந்துகொள்வது எப்படி என்று கேட்கலாம். ராம நாம பஜனை ஹிந்துக்களுக்கு மட்டுமே உரியது என்று கூறுவதைக் கேட்க எனக்கு வியப்பாக இருக்கிறது. முஸ்லிம்களுக்கும், ஹிந்துக்களுக்கும், பார்சிகளுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் வேறு வேறு கடவுளா? இல்லை. எங்கும் வியாபியும், எல்லாம் அறிந்தவருமான ஒரே ஒரு கடவுள்தான் இருக்கிறார். அவரைத்தான் நாம் பல்வேறு நாமங்களால் துதிக்கிறோம். எந்த நாமம் நமக்குப் பழக்கமானதா யிருக்கிறதோ, அந்த நாமமே நம்முடைய நினைவில் இருந்துவருகிறது.

என்னுடைய ராமன்—நாம் பிரார்த்தனை செய்யும் ராமன்—அயோத்தி அரசனாயிருந்த தசரதனுடைய புத்திரனான ராமன் அல்லன். என்னுடைய ராமன் இறப்பும் பிறப்புமில்லாதவன்—இணையற்றவன். அவனையேதான் வணங்குகிறேன், அவனுடைய உதவியையேதான் நாடுகிறேன்; அப்படியேதான் நீங்களும் செய்யவேண்டும். அவன், எல்லோர்க்கும் உரியவன். ஆதலால், யாரும் அவனுடைய நாமத்தை உச்சரிக்க ஆட்சேபிக்கக் காரணம் கிடையாது. பிரார்த்தனையின் இசைக்கு இடையூறாக இல்லாதபடி, தம்முடைய மனத்துக்குள்ளேயே "அல்லா" வென்றோ "ஃகுதா" வென்றோ உச்சரித்துக்கொள்ளலாம்.

✲

'ஏன் சொல்லலே?'

"அய்யாவு, பாக்கிஸ்தானபாத் எவ்வளவு தூரம் இருக்கும்?"

"எல்லாம் இரண்டரைக் கல் இருக்கும்."

"அய்யாவு, நானும் வண்டியில் ஏறிக் குந்திக்கட்டுமா?"

"வாயேன், ஏறிக்க சாயபு!"

கொஞ்சத் தூரம் வண்டி போனபின்—

"அய்யாவு, பாக்கிஸ்தானபாத் இப்போ என்ன தூரம் இருக்கும்?"

"ஏன், அஞ்சு கல் இருக்கும்."

"அய்யோடா! அய்யாவு, பாக்கிஸ்தானபாத்தி லிருந்து வர்ர வண்டியா இது? நீ ஏன் சொல்லலே?"

"சாயபு! நீயும் சும்மா ஏறிக் குந்திக்கிட்டே. அந்த ஊருக்குப் போகணும்னு ஏன் சொல்லலே?"

—தமிழ் உலகம்

இரண்டுக்கும் மருந்து

தாமஸ் ஹிட்ச்காக் என்பவர், விளையாட்டு நிபுணனான தன் மகனுக்கு இப்படி உபதேசம் செய்தாராம்:

"தோல்வி வந்தால், அது உனக்கு மிகப் பிரியமானதுபோல் காட்டிக்கொள்;

"வெற்றி யடைந்தால், அது உனக்கு மிகப் பழக்கப்பட்டது போல் காட்டிக்கொள்."

—நியூஸ் வீக்



படங்கள் : ப. வெ. வேங்கடசுப்பிரமணியன், காசி

பண்டித மதன் மோகன் மாளவியா—

—12-11-46ல் காசியில் இறந்து, தமது வீட்டிலிருந்து ஊர்வலமாய்க் கிளம்பி, ஹிந்துக் கலாசாலையைக் கடந்து,

படங்களை

ஓ

வடிவத்தில் வரிசைப் படுத்திப் பார்க்க

மண்பதை மனம் பதைக்க, மணி கர்ணிகாக் கட்டத்தில் சிதை ஏறி, கங்கைக் கரையில் நின்றவர்களுக்குத் தரிசனம் தந்தார்



படம் : ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

"அக்கா ஏங் இப்பிடி ஒரே
யோசனையாக் குந்திக்கிட்டா ?"

படம்: ஜே. எம். கல்யாணம்

"அண்டாத் தண்ணி அவ்வளவையும்
தம்பி சரியாக்கிட்டா, என்ன பண்ரது?"

படம்: எஸ். ஜி. சின்னு, சத்தியமங்கலம்

பார்வை

"ஊரும் துஞ்சிற்று, உலகமும் துயின்றது;
ஒளியவன் விசும்பியங்கும்
தேரும் போயிற்றுத் திசைகளும் மறைந்தன:
செய்வதொன்று அறியேனே!"

—நாலாயிரம்

படம்: எஸ். கந்தசாமி, சேலம்

நோக்கு

"கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும், வரவும், புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்குமெம் காவலனே! காண்பரிய பேரொளியே!" —திருவாசகம்



படம்: ஜே. எம். கல்யாணம்

"அட, நான் வரத்துக்குள்ளே
என்ன அவசரமாம்?"



படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

"நானு எடுத்துக்கிட்டேம் மா!"

நாணுகிருன் தமிழன் !

“ வாய் அகல் அம்பு, இரத்தமொடு நிணம்கொண்டு ஓட,
மற்று, அதனை வள்உகிரின் பருந்து, கோணல்
வாய், அகல் அம் பரத்திடைக் கெளவி, வல் வாய்
வகிர்ப் பட்டு, நிலம் பட்ட வண்ணம் காண்மின் !”

—கலிங்கத்துப்பரணி

அன்பர்களே !

பூ. ச. குமாரசாமி ராஜா

இந்த மாகாணத்து விவசாயிகள் தற்சமயம் இரண்டு பெரிய பிரச்னைகளைச் சமாளித்தாக வேண்டியிருக்கிறது. ஒன்று, உணவுப்பிரச்னை; இரண்டாவது, நிலப் பாத்தியதை முறைச் சீர் திருத்தம்.

வங்கப் பஞ்சம் தலை விரித்தாடிய நாள்முதல் இன்று வரை, உணவுப் பஞ்சம் என்பது நம் நாட்டை விட்டு முழுவதும் அகலாமலேயே இருக்கிறது. இந்த வருஷம், அதிலும் முக்கியமாக நம் மாகாணத்தில், முன்னைப் போதையும்விட இப்போது உணவு நெருக்கடி அதிகமாக இருக்கிறது. இந்தியாவின் 25 கோடி 90 லட்சம் ஏக்கர்ச் சாகுபடிப் பூமியில், நம் மாகாணத்தில் மட்டும் 3 கோடி 30 லட்சம் ஏக்கர் (12 சத விகிதம்) இருக்கிறது. இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில்(38 கோடி 9 லட்சம்) 11½ சத விகிதம் (4கோடி 67லட்சம்) பேர் நம் மாகாணத்தில் இருக்கின்றனர். இவ்வளவு பேர்களுக்கும், இப்போது இருக்கும் சாகுபடி நிலத்தைக் கொண்டே உணவு அளிக்க வேண்டியது நம் கடமையாகிறது. முயன்று வேலை செய்தால்,இது அசாத்தியமானதல்ல; பிறரைக் கெஞ்ச வேண்டிய நிலைமையும் ஏற்படாது. சற்றுச் சிரமம் இருக்கத்தான் செய்யும்; ஆனால், இது ஒரு புனிதமான கடமை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உணவு நெருக்கடியைச் சமாளிக்கத் தங்களால் முடிந்ததையெல்லாம் செய்து உதவும்படி இந்த மாகாணத்தின் விவசாயிகள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது பெரிய பிரச்னை, நிலப் பாத்தியதை முறைச் சீர் திருத்தம். வங்காள ஃப்லௌட் கமிட்டி, ஜமீன்தாரி முறையைப் பற்றிய யாதாஸ்தை வெளியிட்டது முதல், பொது மக்களிடையே இந்தப் பிரச்னை மிக முக்கியமானதாக ஆகிக்கொண்டு வருகிறது. பிரகாசம் கமிட்டி, மொத்த பூஸ்திதி நிலச் சட்டச் சீர்திருத்தத்தைப் பற்றிய யாதாஸ்தை வெளியிட்டபின், சென்னைச் சர்க்கார் இந்தப் பிரச்னையில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார்கள். தானே உழுது பயிரிடாமல், பாத்தியதை மட்டும் கொண்டாடி வரும் நிலச் சுவான்தாரி முறையும், கவனம் செலுத்த வேண்டிய விஷயமே.

நமது விவசாய மந்திரி கனம் உயர்திரு வாளர் பூ. ச. குமாரசாமி ராஜா அவர்கள் பி. ஏ., எம். எல். ஏ., 27— 0—1946-ல் கூடிய சென்னை மாகாண விவசாயிகள் மகா மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசியதன் தமிழ்ச் சாரம்.

இதிலும் பெரிய தீமை இருக்கவே செய்கிறது.

ஆகவே, விவசாய முறைகளில் எத்தனையோ சீர்திருத்தம் செய்யப்பட இருக்கிறது. இதற்கு, முதலில், இந்தக் காலத்து உணர்ச்சிகளையும், வேகத்தையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். நிச்சயமாக எதிர்க்க முடியாது என்று உள்ள சக்திகளை எதிர்ப்பது அறிவுடைமை அல்ல. மாறிக்கொண்டிருக்கும் காலத்துக்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப நம்முடைய மனோ பாவத்தை மாற்றிக்கொள்வது அவசியம்.

இந்தப் பிரச்னைகளைத் தவிர, விவசாயத்தில் இன்னும் பல தீமைகள் நிறைந்துள்ளன. பெருகி வரும் ஜனத்தொகைக்குச் சரியாகப் பொருளாதார நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட வேண்டியது இன்றியமையாத முதல் விஷயம். விவசாயிகளின் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நான், நம் நாட்டு விவசாயிக்கு இருக்கும் எல்லாவிதத் துன்பங்களையும் அறிவேன். ஆகையால், மந்திரி என்ற ஹோதாவை விட்டு, சாதாரண விவசாயி என்ற முறையில் சில யோசனைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன் :

விவசாயிக்கு இருக்கும் முதல் பெரிய துன்பம், அவனுடைய அதீத வறுமை. ஒரு பிரபலப் பொருளாதார சாஸ்திரி சமீபத்தில் அளித்த தகவல்படி, இந்த மாகாணத்துச் சராசரி விவசாயியின் வருமானம் ரூ. 144. முந்திய காலத்தைக் காட்டிலும் இது அதிகமாகத் தோன்றினாலும், இப்போது இருக்கும் வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும்போது, இது ரூ. 50-க்குச் சமமானதாகிறது. இந்த நிலை ஒழிய வேண்டும்; நாள் முழுக்கப் பாடுபட்டு உழைக்கும் விவசாயி, அதன் பலனைப் பூரணமாக அடைய வேண்டும்; பல வகைகளில் அவனுடைய வருமானம் பெருக வேண்டும்.

ஆனால், இதை உத்தேசித்துச் செய்யப்பெறும் எந்தத் திட்டமும் உருப்படாமலேயே போய் விடுகிறது. அர்த்தமற்ற சம்பிரதாயங்களும், புராதனக்காலத்திய சட்ட முறையும், உளுத்துப் போன சமூகத் திட்டங்களும், பிற்போக்கான பொருளாதார நிலையுமே இதற்குக் காரணம். இந்த முறைகள் அடியோடு மாற வேண்டும். ஒவ்வொருவனுக்கும் உரிமை, சொந்தப் பாத்தியதை ஆகிய லட்சியங்கள் எங்குப் பார்த்தாலும் கிளம்பிக்கொண்டு, சமூகத் திட்டத்தையே உடைத்தெறிய இருக்கும் இந்த நேரத்திலும்கூட, நியாயத்துக்கும், சமத்துவத்துக்கும் எதிரான சமூகச் சம்பிரதாயங்கள் இருக்கவே இருக்கின்றன என்பது பிரத்தியட்சம். இவைகளை, இன்றைய மனித குலத்தின் முன்னேற்றத்துக்குத் தகுந்தபடி மாற்றியமைக்க வேண்டும். பொருளாதாரப் பிற்போக்கைப் பற்றி அதிகக் கவனம் செலுத்த வேண்டும். சின்ன நிலம், ஜீவனற்ற பண்ணை, ஹைதர் காலத்துக்கருவிகள், அதிருப்திகரமான விலைவாசி, உள்ளூர்க் கடன், போக்குவரத்து, தபால் சாதனக் குறைவு முதலிய அனைத்தும் விவசாயிகளை மிகக் கடுமையாகப் பாதிக்கின்றன. ஆறு, குளம் தாராளமாக இருந்தும், இன்னும் 'வானத்தைப் பார்க்கும்' நிலைமை மாறவில்லை. கடைசியாக வந்த கேடு, கூலி, விலைவாசி இவைகளில் உள்ள நிலையாமை. ஒரேயடியாக

ஏறி, ஒரேயடியாக இறங்கி விடும் இந்த நிலைமை விவசாயியின் ஏற்பாடுகளிலும் திட்டங்களிலும் மண்ணைப்போட்டுவிடுகிறது. விலைவாசி ஒரேமாதிரி நிலைத்துநின்றாலும், மோசடியான அளவைகள் விவசாயிகளை அமுக்கக் காத்து நிற்கின்றன. வெவ்வேறு விதமாகப் பரவிக்கிடக்கும் இந்த நிறுத்தல், அளத்தல் அளவைகள் தேச முழுவதுக்கும் ஒரே மாதிரியாக ஏற்பட்டால்தான் ஆரம்ப விவசாயி ஏமாறாமல் இருக்கமுடியும்.

உப பிரிவுகள் போன்ற சின்னா பின்னம், பொருளாதாரம் என்பதே இல்லாத தொடர்ந்த பிடிப்பு, குறைந்த வருமானம், முதலிய தீமைகளுக்கெல்லாம் சட்ட முறைதான் மறைமுகமான காரணம். ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவ மதங்களில், வாரிசு முறைப்படி, எல்லா ஆண் பிள்ளைகளுக்கும் சொத்துச் சமபாகமாகப் பிரிக்கப்பெறுகிறது. இதனால், பரந்துகிடந்தபெரிய நிலங்களெல்லாம் சின்னச் சின்னப் பாகங்களாகப் பிரிக்கப்பெற்று, விவசாய முன்னேற்றத்துக்குப் பெருத்த தடையாக ஆகின்றன. 'ஒரு சாண்' பூமியைக் கொண்டு, ஒரு தனி மனிதன் பெருமிதம் அடையலாம். ஆனால், அதனால் சமூகத்துக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும். இதற்குச் சிறந்த மாற்று, சமூகச் சட்ட முறையில் மாறுதல் ஏற்படுத்துவதே.

சரியான நீர்ப்பாசன வசதி விவசாயத்துக்கு மிக முக்கியம். சென்னைச் சர்க்கார் பெரிய பெரிய அணைக்கட்டுகளைக் கட்டத் திட்டம் செய்து வருகிறது. இவை முடிந்ததும், சென்னை மாகாணம் இந்தியாவிலேயே சிறந்த நீர்ப் பாசன வசதியைக் கொண்ட மாகாணமாக ஆகிவிடும். பழைய குளங்களைப் புதுப்பிப்பதும், தூர்ந்து போன குட்டைகளைச் செப்பனிடுவதும் கூடவே நடந்து வர வேண்டும்.

விவசாயத்துக்கு முதல்தேவை நீர்ப்பாசன வசதி என்பது வாஸ்தவம். ஆனால், அதற்காக, அனாவசியமான நீர்த்தேக்கத்திற்கான திட்டங்களையும், யோசனைகளையும் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. பொது மக்களின் அருமையான பணத்தை இது வீணடிக்கலாம். வெவ்வேறு பிரதேசங்களில் வசிக்கும் மக்கள், தங்கள் தங்கள் இடங்களைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டிருப்பார்கள். அந்தந்தப் பிரதேசங்களில் செய்யக் கூடிய மாறுதல்களை, அவர்களே கூடி யோசித்து, சர்க்காருக்குத் தெரிவித்தால், சர்க்கார் வேண்டிய உதவிகளை அளிக்கும்.

அடுத்தபடியாக விவசாயிக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவது பணம். இதில், கூட்டுறவுப் பண்ணைகள் மிகவும் உதவியிருக்கின்றன. குறைந்த வட்டியின் மூலம் தன்னாலியன்ற அளவு உதவியளித்திருக்கிறது. ஆனால், இது ஒன்றே விவசாயியின் அமோகத் தேவையைப் பூர்த்தி செய்யாது. குறைந்த பட்சம் ஒரு தாலுக்காவிற்கு ஒன்று என்று, மாகாணம் முழுவதும் விவசாயி 'பாங்கி'கள் ஏற்பட வேண்டும். இவை மூலமாக நீண்ட கால, குறுகிய காலக் கடன் வசதிகளை அளிக்கலாம். இவைகளுக்குச் சொந்தத்தில் தனிப் பண்டகசாலைகள் இருக்க வேண்டும். சேகரிக்கும் தானியத்துக்கு 'ரசீது' கொடுக்க வேண்டும்; அந்தத் தானியங்களின் பலத்

-தைக் கொண்டு விவசாயி பிழைக்க வழி செய்ய வேண்டும். இந்தக் கடன் விரிவடைய, இந்த ரசீதுகள் மற்றப் பாங்கிகளில் மறுசெலாவணி ஆகி, கடைசியில் ரிசெர்வ் பாங்கியில் சேர வேண்டும். விவசாயச் சந்தையையும், வெளி வியாபாரத்தையும் பிரிக்கும் தடைகளை அகற்ற வேண்டுமென்பதே என் விருப்பம். அதிக ஒத்துழைப்பு இதற்குத் தேவை; விவசாயத்திலோ, வியாபாரத்திலோ, உள்ள பொருளாதார அமைப்பில் 'பணம்' பூரணப் பங்கையும் கொள்ளவேண்டும்.

நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தின் மூலம் விவசாயத்தில் அபிவிருத்தி ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

> மாகாணம் முழுவதிலும், விவசாயத்துக்கு மின்சாரச் சக்தியின் உதவி அளிக்கப்பெற வேண்டும். குடிசைத் தொழிலிலும், நீர்க் குழாய்களிலும் மின்சாரம் உபயோகப்படுவதில் மிகச் சிறிய அளவு முன்னேற்றமே ஏற்பட்டிருக்கிறது. மின்சாரச் சக்தி மிகப் பரந்த அளவில் விநியோகிக்கப்பெறுவதற்குச் சீக்கிரத்தில் பூரண ஆதரவும் கிடைக்கும். இப்போதுகிடைத்து வரும் மிகக் குறைந்த அளவு மின்சார விநியோகத்தை, சர்க்கார் இன்னும் அதிகப்படுத்தலாம். பல் வேறு பிரதேசங்களுக்கு விநியோகமாகும் இந்த மின்சாரத்துக்கு அதிகக் கிராக்கியும் இருக்கும். சர்க்காரின் வருமானமும் அதிகப்படும். இதில், செலவைக் கண்டு பயப்படக் கூடாது. யுத்தப் பிற்காலச் சீரமைப்புத் திட்டங்களில் இதையும் ஒன்ருகக் கொள்ள வேண்டும்.

விலைக் கட்டுப்பாட்டினல் விவசாயத்துக்கு ஏற்படும் தீமையைப் பற்றியும் நான் நன்கு அறிந்திருக்கிறேன். சீராக்கப் பெற்ற உற்பத்திப் பொருளுக்கு விலைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி, கச்சாப் பொருள்கள் தாமாகச் சரிப்படும்படி விட்டு விட்டால், ஆரம்ப உற்புத்தியாளனுக்குப் பலனுள்ளதாக இருக்கும். உதாரணமாக, கடலை எண்ணெய்க்கு விலைக் கட்டுப்பாடு செய்யாமல் விட்டுவிடலாம். இதனல், கடலையைப் பயிரிடுகிற விவசாயி, எண்ணெய் எடுக்கும் வியாபாரியிடமோ, தரகு வியாபாரியிடமோ தன் சரக்கின் முழுப் பெறுமானத்தையும் அடைய முடியும். இப்பொழுது இருக்கும்முறையில் தரகு வியாபாரி உற்பத்தியாளனை அடியோடு சுரண்டிவிட இடம் இருக்கிறது. ஆனல், இவையெல்லாம் தற்காலிகப் பிரச்னைகள். நிரந்தர ஏற்பாடு ஒன்றைச் செய்து, விவசாயிக்கு நியாயமான தொகை கிடைக்க ஏற்பாடு செய்வதில்தான் எனக்குச் சிரத்தை அதிகம். விலைக் கட்டுப்பாடு என்பது மத்தியச் சர்க்காரும், மாகாணச் சர்க்காரும் சேர்ந்து, உலக நிலைக்கு ஏற்ப, வியாபாரக் கண்ணுடன் செய்ய வேண்டிய விஷயமாகும்.

நில வரி முறையிலும் பிரமாத மாறுதல் செய்யவேண்டியிருக்கிறது. இப்போ திருக்கும் முறையில் உள்ள சீர்கேடுகளை நீக்கி, பெரிய, சிறிய விவசாயிகள் அனைவருக்கும் சமத்துவத்தை ஏற்படுத்தக் கூடிய விவசாய வருமான வரி ஒன்று ஆலோசனையில் இருக்கிறது. சிறிய மிராசுதார்களை அழுத்திக்கொண்டிருக்கும் வரிப் பளுவை நீக்க வேண்டியதும் ஒரு முக்கிய வேலைதான்.

மிராசுதார்களுக்கும், குடியானவர்களுக்கும் இடையே

உள்ள உறவைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு பேரும் ஒத்துழைத்தால்தான் காரியம் சிறப்பாக நடக்கும் என்பதில் சந்தேக மில்லை. சிற்சில இடங்களில், குடியானவர்களுடைய கூலி உயர்த்தப்பெற்றிருக்கிறது. சிலர் இதைக் கண்டிக்கிருர்கள். இந்தச் 'சம்பள உயர்வு' கிடைத்த பின்னரும் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எவ்வளவு கீழ்த்தரமாக இருக்கிறது என்பதை அவர்கள் கவனிக்க வேண்டும். இந்தச் சம்பள உயர்வைச் சட்டப் பூர்வமாக நிர்ணயிக்க முடியாது.

விவசாயி திருப்திகரமான வாழ்க்கை வசதியைப்பெற்றிருந்தால்தான், நிலச் சாகுபடியிலும் சுபிட்சம் இருக்கும் என்பதைப் 'பெரிய மிராசுதார்கள்' நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தங்களுடைய உற்பத்திக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்பதை மட்டுமின்றி, தங்களுடைய வேலையாட்களுக்கு அதிகக் கூலி கிடைக்க வேண்டும் என்பதையும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். விவசாய உழைப்பில் அனுதாபம் செலுத்தாவிட்டால், விவசாயப் புனருத்தாரணத்துக்கு இடமே கிடையாது. "ஒன்று பட்டால்தான் வாழ்வு உண்டு".

அனேக விஷயங்களை, மேலெழுந்தவாரியாகத் தொட்டுப் பேசியிருக்கிறேன்; விவசாயத்தில் இருக்கும் முக்கியப் பிரச்னைகளைத்தான் எடுத்துக் கூறியிருக்கிறேன். சகோதரத் தொழிலாளி என்ற முறையில் என் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளேன். விவசாயத்திலும், விவசாயிகளிடத்திலும்—சொந்த நிலமற்ற உழைப்பாளிகளையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்—பூரணச் சுபிட்சம் குடிகொள்ள வேண்டுமென்பதே என் ஆவல்; அதுவே என் பிரார்த்தனையுமாகும்.

✲

எல்லாம் நானே!

போர்த்துக்கீசியக் காடுகளில் இருக்கும் மரங்களில் கீழ்க்கண்ட வாக்கியங்கள் எழுதித் தொங்கவிடப்பட்டிருக்கின்றன:

"என்னைத் தாண்டிச் செல்லும்போது, எனக்கு எதிராகக் கையைத் தூக்கும், ஓ, பாட்டைசாரியே! எனக்குத் தீங்கு இழைக்கு முன் இதைக் கேள்!

"குளிர் மிக்க இரவுகளிலே, உன் கணப்பிலே இருக்கும் சூடு நான்; கோடைச் சூரியனிட மிருந்து உன்னைத் திரையிட்டு மறைக்கும் நிழல் தோழன் நான்; உன்னுடைய பிரயாணக் காலங்களில், உன் தாகத்தைத் தீர்ப்பது என் பழங்களின் ருசி மிகுந்த ரசம்.

"உன் வீட்டைத் தாங்கி நிற்கும் தூண் நான்; மேஜையின் பலகை நான்; நீ படுக்கும் படுக்கை நான்; உன் படகுக்குக் கட்டும் மரம் நான்.

"உன் உளியின் பிடி நான்; உன் வீட்டு வாசலின் கதவு நான்; உன் தொட்டிலின் தளம் நான்; உன் சவப் பெட்டியின் உறை நான்.

"அருளில் நான் உணவு; அழகில் நான் புஷ்பம்.

"என்னைக் கடக்கும் ஓ மனிதனே! என் வேண்டுகோளுக்குச் செவி கொடு; எனக்குத் தீங்கு செய்யாதே."

—ரோட்சைட் புல்லட்டின்

மாளாத மாளவியா

மனிதாபிமானி

உலகத்தின் தலை சிறந்த மதங்களில் ஒன்றாகிய ஹிந்து மதம் எத்தனை எத்தனையோ காலமாகச் சிறப்புடன் விளங்கிவருகிறது. உலகத்தின் தலை சிறந்த ஞானிகளும், மதாசாரியர்களும் ஹிந்து மதத்தில் பிறந்து, பாரத தேசத்தின் அணிகலன்களாகப் பிரகாசித் திருக்கின்றனர். பிற்காலத்தில், குருட்டு நம்பிக்கைகளும், போலிச் சமயவாதிகளும் சேர்ந்துகொண்டு, ஹிந்து மதத்திற்கு உலை வைத்துவிட இருந்த சமயத்தில், ஓர் அரும் பெரும் மத போஷகர் தோன்றினர். ஹிந்து மதத்தின் பழம் பெருமையையும், சிறப்பையும் மீண்டும் நிலை நாட்ட முயற்சி செய்து, அவர் அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார். தம்முடைய கனவுகளெல்லாம் நனவாக மாறி, ஆத்மத் திருப்தி யடைந்திருந்த அந்த மகாத்மாவை, சமீபத்தில் நடந்த வங்காளக் 'கசாப்புக் கடை வேலை' கொன்றுவிட்டது.

ஆம், பண்டித மதன் மோஹன் மாளவியாவைத்தான் குறிப்பிடுகிறேன். வங்காளப் பயங்கரமே அவருடைய மரணத்துக்கு மறைமுகமான காரணமாக ஆயிற்று என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். வங்கச் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொன்றுகொண்டது மாளவியாஜியின் திட நெஞ்சையும் குலைத்தது. அங்கே சிந்தப்பட்ட ஒவ்வொரு துளி ரத்தமும் அவருக்கு விஷ மாயிற்று; ஒவ்வொரு கத்திக் குத்தும் அவருடைய நெஞ்சிலேயே பாய்ந்தது. குறுகிக்கொண் டிருந்த வாழ் நாட்களுக்கு வங்கப் படுகொலையே முற்றுப் புள்ளி வைத்தது.

சாதாரணமாக, நம் மதிப்பைப் பெற்ற தலைவர்களோ, அறிஞர்களோ இறக்கும்போது, "அவர் செய்ய வேண்டியவை இன்னும் எத்தனையோ பாக்கி யிருக்கின்றன. அதற்குள் போய்விட்டார்" என்று சொல்லுவது வழக்கம். ஆனால், பண்டித மாளவியாவின் விஷயத்தில் மட்டும் நாம் அப்படிக் குறைப்படுவதற்கில்லை. அவர் நாட்டுக்குச் செய்ய வேண்டிய சேவை இனி ஏதும் பாக்கி யில்லை.

நம் நாட்டின் இரு சிறந்த தலைவர்கள் உபாத்தியாயர்களாகவே தமது வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறார்கள். ஒருவர் மகா கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார்; மற்றவர் பண்டித மாளவியா. (ஆனால், கனம் சாஸ்திரியாரைப் போல, நீண்ட காலம் மாளவியாஜி உபாத்தியாயராக இருக்க வில்லை). 1861-ம் வருஷம் டிசெம்பர் 25-ம் தேதி மாளவியா பிறந்தார். அவருடைய தகப்பனார் அந்தக் காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றிருந்த ஒரு சம்ஸ்கிருதப் பண்டிதர். சிறு பிராயம் முதலே அவர் ஹிந்து மதப் பண்பாட்டில் ஓர் அலாதிப் பிரியமும், நாட்டமும் கொண்டிருந்தார். இதுவே பிற்காலத்தில், அலகாபாத்தில், அவர் ஹிந்து சமாஜத்தை நிறுவுவதற்குக் காரணமாக ஆயிற்று;

"'நாட்டுக்கு நஷ்டம்' என்று சொல்வதில்—மாளவியாஜியைப் பொறுத்த வரையில்—அர்த்தமில்லை. செய்ய முடிந்ததை, செய்ய வேண்டியதை, செய்ய ஆசைப்பட்டதைச் செய்துவிட்டுத்தானே போயிருக்கிறார்?"

இந்த ஹிந்து சமாஜம்தான் ஹிந்து மகா சபையாகப் பிறப்பாடு உருவெடுத்தது.

பி. ஏ. பரீட்சையில் தேறி வெளிவந்ததும், மாளவியா உபாத்தியாயராக வேலை பார்த்தார். சிறிது நாட்களில், ஏதோ ஓர் ஆவலில், பத்திரிகைத் தொழிலை மேற்கொண்டார். ஹிந்துஸ்தான், இந்திய யூனியன் ஆகிய பத்திரிகைகளில் சிறிது காலம் ஆசிரியராக இருந்தபின், தாமே சொந்தத்தில் அப்யுதயம், லீடர் என்ற பத்திரிகைகளை ஆரம்பித்து நடத்தினர்.

'இந்திய தேசியக் காங்கிரசின் பிதா' என அழைக்கப்படும் ஒக்டேவியன் ஹ்யூமின் ஆதரவில், சட்டப் பரீட்சையிலும் மாளவியா வெற்றிகரமாகத் தேறினர். அந்தக் காலத்தில் சப்ரூ, மோதிலால்நேரு ஆகியோர் தேசத்தின் தலை சிறந்த சட்ட நிபுணர்களாக விளங்கிவந்தார்கள். அவர்களுடன் மாளவியாஜியின் பெயரும் சேர்ந்தது. காங்கிரசுக்கு இவருடைய சேவை தேவையா யிருந்தபோது—ஹ்யூமின் ஆதரவில்—காங்கிரசில் சேர்ந்தார்.

மாளவியாஜி சிறந்த பேச்சாளர். அந்தச் சின்னஞ் சிறு, எளிமை நிறைந்த உருவத்துக்குள் மறைந்து கிடந்த பேச்சுச் சக்தி கல்கத்தாக் காங்கிரசில் பூரணமாக வெளிப்பட்டது. வடமேற்கு எல்லைப்புற மாகாணவாசிகளுக்கு அவர் அளித்த பிரசங்க உபதேசங்களின் பயனாக, சென்னைக் காங்கிரசில் முப்பது எல்லைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அலகாபாத் காங்கிரசில் காரியதரிசியாக இருந்தபோது, அவருடைய அசாதாரணமான நிர்வாகத் திறமை வெளிப்பட்டது. 1909-க்குள் மாளவியாஜியின் பெயர் அகில இந்தியப் பிரசித்தம் அடைந்துவிட்டது. அதே வருஷம் காங்கிரசின் மன்னராகவும் ஆனர். மின்ட்டோ-மார்லிச் சீர்திருத்தங்களைப் பற்றிய அவருடைய ஆழ்ந்த தீர்க்க தரிசனமும், அரசியல் நிதானமும் நிறைந்த தலைமைப் பிரசங்கம் அங்குக் கூடி யிருந்த அனைவரையும் கவர்ந்தது.

காந்திஜியும், அவருடைய ஒத்துழையாமைக் கொள்கையும் காங்கிரசில் பிரவேசித்த பின், மாளவியாஜியின் செல்வாக்கு மிகவும் குறைந்து போயிற்று. அனேகர் ராஜிநாமாச் செய்தார்கள்; மாளவியாஜி ராஜிநாமாச் செய்யாவிட்டாலும், அரசியல் வாழ்வி லிருந்து விலகிக்கொண்டார். வகுப்புப் பிரச்னை, முஸ்லிம் லீக் இவைகளைப் பற்றிக் காங்கிரசின் கொள்கையை அவர் ஆதரிக்க வில்லை. ஆனாலும், அன்னியனை வெளியேற்றுவதிலும், தேச விடுதலைப் பிரச்னையிலும் அவருக்கும் காங்கிரசுக்கும் எவ்விதமான அபிப்பிராயப் பேதமும் கிடையாது. 1942, ஆகஸ்ட் மாதம் நடந்த காங்கிரசுக்கு விஜயம் செய்து, காந்திஜி நடத்த விருந்த போராட்டத்திற்கு ஆசியளித்தார். யதார்த்த அரசியலில் அவருடைய கொள்கைகள் நிரம்ப வித்தியாசப் படுகின்றன. ஆனல், அவர் கடைசிவரை காங்கிரசின் ஸ்வீகாரப் புத்திரனகவே யிருந்து வந்தார்.

காசி ஹிந்துச் சர்வ கலாசாலை அவருடைய அழியாச் சின்னமாக விளங்குகிறது. தம்முடைய சேவை முழுவதையும் மாளவியாஜி இதற்கே அர்ப்பணித்தார். தாம் பிறந்த காசியில், தாம் சிறு

விய கலாசாலையில், தம்முடைய பிரத்தியேக அறையிலேதான் அவர் தம்முடைய கடைசி மூச்சையும் விட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. அவருடைய மேற்பார்வையில், அவர் காட்டிய வழியில் நடந்ததாலேயே அது இன்று இவ்வளவு பிரம்மாண்டமான ஸ்தாபனமாக விளங்குகிறது. ஹிந்துக் கலாசாரத்துடன், நவீன விஞ்ஞானக் கலைகளையும் சேர்த்து வளர்க்க அவர் ஆசைப்பட்டார். அந்தக் கனவு நனவாகியது. காசியைப் பழையபடி ஹிந்து மதத்தின் புண்ணிய க்ஷேத்திரமாக ஆக்கியது இந்தக் கலாசாலை. கலைக் கோவிலாகவும், ஹிந்து மதத்திற்கே பெருமையளிப்பதாகவும் இன்று ஹிந்துச் சர்வ கலாசாலை இருக்கிற தென்றால், அதற்கு மாளவியாஜியின் இடைவிடா உழைப்பும், தன்னலமற்ற சேவையுமே காரணமாகும். உறுதி படைத்த நெஞ்சும், ஆற்றல் வாய்ந்த நிர்வாகத் திறமையும் அவருக்கில்லாதிருந்தால், ஹிந்துக் கலாசாலை வெறும் கனவாகவே போயிருக்கும்.

உள் மனத்தில் பழுத்த சநாதனியாகவும், மதத்தில் ஹிந்துவாகவும், செயலில் காங்கிரஸ்வாதியாகவும் விளங்கிய மாளவியாஜியை யாராலும் புரிந்துகொள்ள முடியாதுதான். அவருடைய அரசியல் ஞானம் ஆழ்ந்த அனுபவத்தில் உரம் பெற்றது. செயலுக்காகவே வாழ்ந்த அவருடைய வாழ்க்கை தியாகத்தின் சிகரமாக விளங்கிற்று. மேலோட்டப் பார்வை பார்க்கும் தீவிரவாதிக்கு அவருடைய சேவை அதிகமாகத் தோன்றுது. கூர்ந்து பார்ப்பவன், மாளவியாஜி ஆக்க வேலையே உருவானவர் என்பதை அறிந்துகொள்வான்.

கடைசிக் காலத்தில்,—அவருடைய எண்பத்தைந்தாவது வயதில்-மாளவியாஜியின் மன அஸ்திவாரமே கலகலத்துப் போயிற்று; மனிதத் தன்மையிலும், மனிதனின் தெய்விகக் குணங்களிலும் அவருக்கிருந்த நம்பிக்கை சிதறித் தூள் தூளாயிற்று; மனிதனின் வீழ்ச்சிப் போக்கையும், பலவீன மனப்பான்மையையும் கண்டு அவர் இடிந்து போனுர்: "தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும் சக்தியைக்கூட என் நாட்டு மக்கள் இழந்துவிட்டார்களா?" என்று கதறினுர்.

புண்பட்ட நெஞ்சத்துடனேயே இறந்துபோனுர் மாளவியாஜி. 'செய்ய வேண்டியது' என்ற 'பாக்கி' கிடையாது. பெரிய மனிதர் என்ற வார்த்தைக்கு அவர் தனி மதிப்பையும், தனி அர்த்தத்தையும் ஏற்படுத்தினுர். வயோதிகர்; தள்ளாதவர்; உலகத்தின் பிடிப்பிலிருந்து விலக வேண்டிய காலந்தான்; ஆனுலும், இன்னும் கொஞ்ச நாள் இருந்திருக்கலாமே என்று எண்ணுவது சகஜம்; இயற்கை.

"நாட்டுக்கு நஷ்டம்" என்று சொல்வதில் — மாளவியாஜியைப் பொறுத்த வரையில் — அர்த்தமில்லை. செய்ய முடிந்ததை, செய்ய வேண்டியதை, செய்ய ஆசைப்பட்டதைச் செய்துவிட்டுத்தானே போயிருக்கிறுர்?

✱

சக்தி: போர்மேன்! சுயராஜ்யம் வருதே, வேலை ஆகுமா?

போர்மேன்: சக்தி யிருக்கிறப்போ என்ன பயமுங்க—அடிச்சு ஜமாய்ச்சுடலாம்—மெஷின் மேன்—ம்! ஆகட்டும்—நடத்து!

காலை வேளையில் ஒரு இந்திய ரோஜா தோட்டத்திலேற்படக் கூடிய குதூகல உணர்ச்சியை வினோலியா ஒயிட் ரோஸ் சோப் உங்களுக்குத் தருகிறது. இச்சோப்பின் மிருதுவான செழிப்பாயுண்டாகும் நுரை மிகவும் நேர்த்தியான சருமத்தையும் ஒழுங்காக சுத்தம் செய்கிறது — மேலும் அதன் நறுமணம் உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது. உங்கள் அழகை அதிகப்படுத்த இச் சோப்பைவிட மேன்மையானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. வினோலியா ஒயிட் ரோஸை உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பாகக் கொள்ளுங்கள்.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 19-111 TM

VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

புதிய விஷயங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது

காய்கறித் தோட்டம்

தோட்டம் போடுவது எப்படி
விதை விதைப்பது எப்படி
எரு இடுவது எப்படி
காய்கறிகளிலுள்ள உணவுச்
சத்து யாது

என்ற விஷயங்களை
அறிய வேண்டுமா?

கத்தரி வகை, அவரை வகை,
கீரை வகை, பூசணி வகை, கிழங்கு
வகை, சீமைக் காய்கறி வகை

பயிரிடக் கற்றுக்
கொள்ள வேண்டுமா?

இதற்கேற்ற, புத்தகம்
காய்கறித் தோட்டம்
மு. அருணாசலம் எழுதியது

விலை ரூ. ஐந்து
தபால் செலவு தனி

சக்திகாரியாலயம்

ராயப்பேட்டை	:	சென்னை
வடக்கு வெளி வீதி	:	மதுரை
வெரைடி ஹால் ரோடு	:	கோயமுத்தூர்
ஹை ரோடு	:	திருநெல்வேலி

நாணுகிறான் தமிழன்

●

மு. வரதராஜன்

இந்திய நாடு பல்லாயிர வகையில் சிறப்புப் பெற்றிருக்கலாம்; இதன் வரலாறு பல மணி விளக்குகளால் ஒளி மிக்கு விளங்குவதாக இருக்கலாம். ஆயினும், இந்த அருமை நாட்டின் வரலாற்றில் தான் அழியாத மாசு ஒன்று படர்ந்து இடம் பெற்றுவிட்டது.

போர்கள் எல்லா நாடுகளிலும் நடக்கின்றன; இந்தியநாட்டிலும் போர்கள் நடந்தன; இனியும் நடக்கலாம். உள்நாட்டுக் குழப்பங்கள் எல்லா நாடுகளிலும் உண்டு; இந்த நாட்டிலும் உண்டு. மதப் பூசல்கள் எல்லா நாடுகளிலும் உண்டு; இந்த நாட்டிலும் உண்டு. கொள்ளை, கொலைகளுக்கு மற்ற நாடுகளும் இரையானது உண்டு; இந்த நாடும் அவற்றைக் கண்டது உண்டு; காண்பது உண்டு.

மற்ற நாடுகள் காணாத ஒன்றை இந்த அருமை நாடு அடிக்கடி கண்டுவந் திருக்கிறது; அதுதான் பெரிய மாசு. இதற்கு முன் கண்டிராத வகையில் இன்று— இருபதாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் — நாகரிகத்தின் எல்லையை எட்டிப் பார்க்கும் இந்தக் காலத்தில்—அந்தப் பெரிய மாசு கொடிய வடிவம் கொண்டு படர்ந்துவருகிறது. இதுதான் நினைப்பதற்கும் அருவருப்பான நிகழ்ச்சியாக இருக்கிறது.

போர், உள்நாட்டுக் குழப்பம், மதப் பூசல், கொள்ளை, கொலை முதலியன எல்லாம் அநாகரிகத்தின் அறிகுறிகள் எனலாம். ஆனால், அவை காட்டுமிராண்டியின் இருண்ட வாழ்வின் அறிகுறிகள் அல்ல. அணிவகுத்துப் போர் செய்வதும், அரசியல் காரணத்தால் உட்பகை கொள்வதும், மதம் என்பதை வகுத்து மாறுபடுவதும், ஒரு காரணம் பற்றிக் கொள்ளையடிப்பதும், கொலை செய்வதும் நாகரிகப் படிகளில் சிலவற்றையேனும் கடந்தவர்களுக்கே முடியும். காட்டுமிராண்டிக்கு முடியுமோ?

பெட்டி, பேழைகளைத் திருடுவது போல் பெண்களைத் திருடுவதும், ஆடு, மாடுகளை அடக்கியாள்வது போல் பெண்களை அடக்கியாள்வதும், வன விலங்குகளை வேட்டையாடுவது போல் பெண்களைத் துரத்தி அலைப்பதும், வெறி பிடித்த காமுகராய்க் கற்பழித்து வருத்துவதும், இணங்காத பெண்களை வதைத்துக் கொல்வதும் நாகரிகம் தலையெடுப்பதற்கு நெடுங் காலத்துக்கு முன்பே இருண்ட குகைகளிலும் அடர்ந்த காடுகளிலும் குரங்குகள்போல் வாழ்ந்து வந்த காட்டுமிராண்டிக் கூட்டங்களுக்கே உரிமையான செயல்களாகும்.

இந்தப் பாழுஞ் செயல்களை இன்று நீகிரோவர் செய்திருந்தால், "நீகிரோக்கள் அப்படிப் பட்டவர்களா? கூட்டம் கூட்டமாகச் சென்று பெண்களைத் தூக்கிப் போய்க் கெடுக்கிறார்களா? அவ்வளவு பொல்லாதவர்களா அவர்கள்? அதனால்தான் அவ்

வட நாட்டில் இன்று நடந்துவரும் சகோதரக் கொலைகளைக் கண்டு தமிழன் அனுதாபப்பட வில்லை, ஆத்திரப்பட வில்லை. ஆனால்—தமிழன் இதயத்தை, நண்பராகிய தமிழ்ப் பேராசிரியரே உங்களுக்குச் 'சொல்லட்டும்'!

வளவு கருப்பாக இருக்கிறார்கள்'' என்று எள்ளிப் பேசிக்கொண்டிருக்கலாம்.

இந்தக் கொடுஞ் செயல்களைச் சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கக் காட்டுமிராண்டிகளாகிய சிவப்பு இந்தியர் செய்திருந்தால்? ''சிவப்பு இந்தியர்களா அப்படிச் செய்தார்கள்? அப்படியானால், அவர்களை மரத்தில் கட்டித் தோலுரித்தாலும் தகும். தலைகீழாகக் கட்டித் தீயில் பொசுக்கினாலும் தகும். அந்தக் காலத்தில், ஐரோப்பியர்கள் அமெரிக்காவுக்குப் போனபோது, முதலில் இப்படியெல்லாம் அவர்களை வதைத்தார்களாமே, அவைகளெல்லாம் தகும், தகும்'' என்று தாளமிடலாம்.

ஆனால், கிழக்கு வங்காளத்தில், இன்று, பல கிராமங்களில் பட்ட துன்பங்களுக் கெல்லாம் கருத்த நீகிரோக்களும் காரணம் அல்ல; சிவப்பு இந்தியர்களும் காரணம் அல்ல. சரித்திரத்தில் புகழும் பெருமையும் பெற்று, நாகரிகத்தில் சீரும் சிறப்பும் வாய்ந்து, சமயத் துறையில் அறிவும் ஆற்றலும் மிகுந்த இந்த இந்திய நாட்டில் வாழும் சில இந்தியர்களே இதற்குக் காரணம்.

இதைவிடப் பெரிய மாசு எது? உலகத்தில் எந்த நாட்டின் வரலாற்றிலாவது இந்த மாசு உண்டா? பெண்கள் ஆடு மாடுகள் போல் கவரப்பட்டதும், கொல்லப்பட்டதும், கற்பழிக்கப்பட்டதும் எந்த நாட்டின் வரலாற்றிலும் இல்லை. இதைத்தான் இந்தியர்கள் மறக்கக் கூடாது; மறக்கவும் முடியாது. நாட்டுப் பெருமை பேச வாயெடுக்கும் போதெல்லாம் நாணித் தலை குனியும் நிலையே இருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டிலேயே இந்த நிலை என்றால், இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவில் பெண்கள் என்ன நிலையில் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கலங்க வேண்டாம். சில நூற்றாண்டுகளுக்கு முன்பு பெண்களைக் கவர்ந்து, கற்பழித்துக் கொல்லும் கொடிய காட்டுமிராண்டித்தனம் இந்த நாட்டினர்க்குத் தெரியவே தெரியாது. மற்ற நாடுகள் நாகரிகத்தைக் கற்று வரும்போது, இந்த நாடு காட்டுமிராண்டித் தன்மையைக் கற்கத் தொடங்கியது. வெளிநாட்டார் கலப்பால், மற்ற நாடுகளில் நாகரிகம் பெருகியது; ஆனால், இந்த நாட்டில் அதனால் பெருகியது அநாகரிகமே.

இரண்டாம் நூற்றாண்டின் வரலாறே வேறு. அப்போது இந்திய நாட்டில் மிகச் சிறந்த வளமும், வாழ்வும் பெற்றிருந்தது தமிழ் நாடே. தமிழ் மன்னர்களே நாட்டின் தலைவர்களாய்த் தனியரசு நடத்திவந்த காலம் அது.

அந்தக் காலத்தில் காதல் வாழ்ந்தது; குடும்பம் தழைத்தது. காதல் குடும்பங்கள் அன்பையும், அறத்தையும் போற்றிவந்தன. பிற உயிர்களின் வாழ்க்கைக்கு இடையூறு செய்வதே அநாகரிகம் எனக் கருதப்பட்ட காலம் அது.

குடும்பத் தலைவன் ஒருவன் வெளிநாட்டுக்குச் சென்று, சில மாதங்கள் தங்கி யிருந்து மீண்டான். திரும்பி வரும்போது, விரைந்து சென்று, தன் காதலியைக் காண வேண்டும் என்று மனம் ஆவல் கொண்டது. அதனால், தேரை மிக வேகமாக ஓட்டிவந்தான். மாலைக் காலத்தில், வழி யெல்லாம் புதர்களில்

பூக்கள் மலர்ந்திருந்தன. தேரை நல்ல வழி அறிந்து செலுத்திக் கொண்டு வந்தவன் இந்தப் புதர்களையும் கண்டு, இவற்றில் பூத்து விளங்கிய அழகிய பூக்களையும் கண்டான். ஆயினும், அவனுடைய மனம் தன் காதலியை நாடி விரைந்தது. கண்டு சில மாதங்க ளானபடியால், அவளுடைய அழகான முகத்தையே அவன் உள்ள மெல்லாம் நாடியது. ஆயினும், புதர்களையும், பூக்களையும் அவனால் புறக்கணித்துவிட்டுப் போக முடியவில்லை. காரணம், அவற்றின் அழகு அல்ல; அவற்றில் தேனுண்டு மயங்கித் துணையோடு தங்கிய வண்டுகளின் இன்ப வாழ்க்கையே காரணம்.

அந்த வண்டுகளின் இன்ப வாழ்க்கை—குடும்ப வாழ்க்கை—குலையக் கூடாது என்று அவனுடைய நெஞ்சம் அருளோடு எண்ணியது. தேரை மெல்லச் செலுத்தினான். அதனாலும் பயன் இல்லை என்று உணர்ந்து, தேரை விட்டுக் கீழே இறங்கினான். தேரின் கடகட என்ற ஓசை வண்டுகளைக் கலக்கும் என்று எண்ணியது போலவே, அதன் மணியோசையும் கலக்கும் என்று எண்ணினான். இந்த அருள் நெஞ்சத்தைக் கூற வந்த புலவர், அவன் அஞ்சியதாகவே குறித்தார். அவன் அந்த மணியின் நாக்கை இழுத்துக் கட்டினான். தேரும் மெல்லச் செல்ல, மணியும் ஒலிக்காமல் சென்றால், வண்டுகள் அந்தப் புதர்களில் பூத்த பூக்களில் அமைதியாக வாழும், அவற்றின் அமைதி குலையாது என்று எண்ணியே அவ்வாறு செய்தான்:

பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்

(அகநானூறு—4)

இது ஒரு பழம் பாட்டு; தமிழ்ப் பாட்டு; தமிழ் நாட்டில் வாழ்ந்த நல்லமனத்தை ஓவியமாக்கிக்காட்டும் பாட்டு. இது இந்த நாட்டின் வரலாற்றிற்கு நந்தாவிளக்காய் விளங்கும் ஒரு சான்றாகும்.

ஆணும் பெண்ணுமாய் வாழும் மக்கள் தனித்தனியே சிதறுண்டு, முரடர்களின் கொலைக் கருவிகளுக்கும் கொடுஞ் செயல்களுக்கும் ஆளாகி, உயிரும் கற்பும் இழந்து அல்லல்படும் இந்தக் காலத்தில், இந்தப் பாட்டைப் படிப்பதா? வேண்டாமா? வண்டுகள் ஆணும் பெண்ணுமாய் வாழ்ந்த புதர்களின் பக்கத்தே தேரை விரைந்து செலுத்த அஞ்சினான் தமிழன். தன் காதலியைச் சில மாத காலம் பிரிந்திருந்து விரைந்து செல்லும் வழியில், கண்ட வண்டுகளின் வாழ்வைக் குலைக்க மனம் நடுங்கினான் தமிழன். வண்டுகளின் குடும்ப வாழ்வைத் தன்னால் அல்ல, தன் தேர் மணி ஓசையாலும் கெடுக்கக்கூடாது என்று முயன்றான் தமிழன். அந்தத் தமிழன் இந்திய நாட்டின் புகழை வளர்த்தவன். அவனே இன்று கிழக்கு வங்காளத்தில் பழி வளர்க்கும் கொடுஞ் செயல்களைத் தன் செவியால் கேட்டு உணர்கிறான்; உலகம் சிரிக்குமே என நாணுகிறான். ஏன்? "இந்தியர்களாம், இப்படியாம்" என்று உலகம் சிரிக்குமே? இந்தியர்கள் என்றால், அந்தப் புகழிலோ, பழியிலோ, தமிழனுக்கும் பங்கு உண்டு அல்லவா?

✲

உபயோகம்தான் அழகு என்பது. —ஜான் ரஸ்கின்

ஏனழுதாய் என் திருவே?

●

சுரபி

தாய்: தேவர் பதிவிட்டுத் தேடி இவண்வந்த
செல்வக் களஞ்சியமே—உன்னைத்
தேமலர் வாய்திறந் தேங்கி யழுதிடச்
செய்தவ ராரடியோ

சேய்: ஆவி பறித்திடப் பாழும் அணுவினைக்
கூடிப் பிளந்திடுவார்—அந்த
அரக்க குருவைக் கண்டு பயந்து-
க-தறி யழுதேனம்மா

தாய்: எட்டுத் திசையும் ஒடுங்கி யுறங்கிடும்
நள்ளிர வேளையிலே—கண்ணே
திட்டுத் திடுக்கென்று வீரிட் டலறிடும்
செய்கையி தென்னடியோ

சேய்: பட்டிக் கடாவினில் வந்திடும் ஏமனும்
பார்த்து மருண்டிடவே—கொடும்
பாதகர் வாளுடன் சோதரர் மீதினில்
பாய்ந்திடக் கண்டேனம்மா

தாய்: காற்றி லசைகொடி போலத் துவண்டிடும்
கஞ்சமலர்த் திருவே—என்றன்
கையிற் கிடந்துநீ வெய்யிற் புழுவெனத்
துள்ளித் துடிப்பதுமேன்

சேய்: சேற்றில் கிடந்துபல் லாயிரங் கோடியர்
தேய்ந்து மடிகையிலே—அவர்
தேடும் பொருளில் திளைத்திடும் வினரைக்
காணத் துடிக்குதம்மா

தாய்: காலை மலர்ந்திட்ட கஞ்ச மலரெனக்
காணுந் திருவதனம்—கொடுங்
கானல் பட்டாலென வாடுதல் காணவென்
கண்கள் கலங்குதடி

சேய்: ஞால மெலாமொரு நற்குடி யென்றுயர்
ஞானங்கள் பேசிடுவார்—இங்கு
நாயென வாட்டிடும் வாயற்ற மக்களைக்
கண்டுளம் வாடுதம்மா

தாய் : கொஞ்சுங் குவளைகள் போலக் குலவிடும்
அஞ்சனக் கண்ணிரண்டும்—நல்ல
கொவ்வைக் கனியெனச் செவ்வரி பாயக்-
க-லங்கிக் கசியுதேடி

சேய் : தஞ்ச மடைந்தவர் அத்தனை பேரையும்
தாங்கி வளர்த்தருளும்—நாட்டில்
பஞ்சமென்றே மக்கள் கெஞ்சி இரப்பதைக்
காணக் கலங்குதம்மா

தாய் : தங்க மிழைத்துத் தடவி மெருகிட்ட
சங்கவெண் மேனியினாய்—இன்று
தாகத்தினால் கடல் மொண்டதோர் மேகம்போல்
ஆகங் கருத்ததுமேன்

சேய் : கங்குல் நிகர்த்த மனத்தினர் மேனியைக்
காட்டி அலைக்கழிக்கும்—அந்தப்
பங்கத்தைக் கண்டு பதறியதா லிந்தப்
பாழுடல் காந்துதம்மா

தாய் : சாந்த சொரூபியர் போற்றிப் பணிந்திடும்
தண்மதி போன்றவளே—உன்னைத்
தாங்கிடுங் கைகள் தவித்து வருந்திடக்
காங்கை பறப்பதுமேன்

சேய்: காந்த மின்னார் தெய்வக் கற்பு நெறியினில்
காதல் விளைத்திடுவோர்—வெறுங்
காமக் கிழத்திய ராகக் கிடப்பதைக்
காணக் கொதிக்குதம்மா

தாய் : உள்ளங் கொதித்துடல் ஊறுகொண்டே துயர்
வெள்ளத்தில் நீந்தியவள்—ஒரு
கொள்ளைச் சிரிப்புடன் துள்ளி வருவதைக்
கண்டு மலைத்தேனடி

சேய் : கள்ளங் கபடங்கள் காமக் குரோதங்கள்
வெள்ளஞ் சுழித்தடிக்கும்—இந்தப்
பள்ளத்தில் வந்துடல் பற்றிய என்மதி
எள்ளி நகைத்தேனம்மா

ஒழுக்கம் விழுப்பம் தருமா?

●

சுப. நாராயணன்

வாழப் பிறந்தும் வாழ முடியாமல், சாகப் பிறந்தும் சாக மனமில்லாமல், திண்டாடித் தெருவில் நின்று, மாயாஜாலப் பேர்வழிகளின் ஒழுக்கங் கெட்ட இரும்புப் பிடியில் சிக்குண்டு, தவியாய்த் தவித்து, மனம் வெதும்புகிற பாவி மக்கள், "ஒழுக்கம் விழுப்பம் தரவே தராது! அது அடியோடு ஒழிக!" என்றுதான் ஆத்திரமாய்ச் சொல்லுவார்கள்.

ஒழுக்கம் என்று நாம் கொள்வது ஒரு கூட்டுப் பொருள்: (1) வாழ்வில் பற்றுதல் கொள்ளல், (2) பிறகு, வாழவழி தேடுதல், (3) தேடிய வழியை முறைப்படுத்துதல், (4) அதன்படி முன்னேறி நடத்தல், (5) நடந்து பண்படல், (6) பண்பட்டு உயர்ச்சி பெறல் ஆகிய ஆறு படிகளையே ஆறு கூறுகளாகக் கொண்டது. கடைசிப் படிக்கு வந்ததும், எல்லாப் படிகளும் ஒரே படியாகவும், எல்லாக் கூறுகளும் ஒரே கூறாகவும் இணைந்து, பிணைந்து சுவறிப் போய், (1) நன்மை, (2) சிறப்பு என்ற இரு கூறுகளைக் கொண்ட விழுப்பமாக முளைவிட்டு, நமது பேரின்ப வாழ்வுக்கு உயிர்ப்பூட்டும். அப்போது, பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல், பின்னே சரிந்து விழாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதனால், கிடைத்த ஒழுக்கத்தை—ஒவ்வொரு கூறையும்—பாதுகாத்து, வளர்க்க வேண்டும். எப்படி வளர்க்க வேண்டும்? உயிரையும் விட மேலாகக் கருதி வளர்க்க வேண்டும். ஏன்? உயிர் உயிர்ப்புத்தான் தரும். உயிர் தரும் உயிர்ப்பால் பெறத் தக்க பேரின்பம் உயிரை விட மகத்தானது. இதைப் பற்றிச் சரியாய்த் தெரிய நமக்கு வாய்ப்பிராத காரணத்தால், இதை நாம் புறக்கணித்துவிடுவதற்கில்லை. தெரியாத கெடுதலை விடத் தெரியாத நன்மையைப் பற்றி நம்புவது பிசகல்ல.

வாழ எழுச்சியில்லாதவன் செத்தே தீர்வான்: அவனைப் பற்றி நமக்குக் கவலையில்லை. எழுச்சி வந்ததும் வழி தேடுகிறோம். வழி, எண்ணற்ற சில்லறைக் கூறுகளையுடையது. இந்தக் கூறுகளையே அறம் என்கிறோம். இந்தக் கூறுகள், வாழ்க்கை என்ற வயிரக் கல்லின் பலபட்ட பட்டைகள். தீட்டத் தீட்டப் பட்டையில் மெருகேறும். அப்போது, பிரபஞ்சத்தின் ஒளிக் கதிர்களை அது பற்றிப் பற்றி, நம்மீது ஒளி இழைகளாகத் தூவிப் பரப்பி, வர்ண ஜாலம் காட்டி, நம்மை இன்புறுத்தும். இப்படிப்பட்ட பட்டைகள்—கூறுகள், அறங்கள்—முப்பத்திரண்டாம். ஏன் முப்பத்திரண்டு மட்டும்? அது, ஒழுக்கம் உருத் தேறிவந்த காலம்; அறிவு குழம்பியிருந்த காலம்; நாடோடிகளான ஆரியர் வருகையால், நாடு அல்லோல கல்லோலப்பட்டு, தமிழனுடைய பண்பட்ட நாகரிகமும், ஆரியனுடைய பண்படாத நாகரிகமும் முட்டி மோதிக்கொண்டிருந்த காலம்: (1) ஏழைக்கு வீடு கட்டிக் கொடுப்பது, (2) படிக்க வைப்

"ஒழுக்கம் விழுப்பந்தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது சரிதானா?

பது, (3) பிச்சை யிடுவது, (4) பசுக் காப்பது, (5) ஏழைக்குச் சோறிடுவது, (6) மகப் பேற்றுக்கு உதவுவது, (7) குழந்தை வளர்ப்பது, (8) குழந்தைக்குப் பால் கொடுப்பது, (9) திக்கற்ற பிணத்தைக் காடேற்றுவது, (10) திக்கற்றவருக்கு உடை வழங்குவது, (11) நோய்க்கு மருந்தளிப்பது, (12) பிறர் துயர் காப்பது, (13) தண்ணீர்ப் பந்தல் வைப்பது, (14) குளம் வெட்டுவது, (15) தோப்பு உண்டாக்குவது, (16) விலங்குகளுக்கு உணவளிப்பது, (17) பிறர் உயிரைக் காக்கப் பணம் கொடுப்பது, (18) மணவினைக்கு ஒத்தாசை செய்வது ஆகியவை மிக உயர்ந்த அறங்கள்; சந்தேகமில்லை.

(1) கைதிகளுக்கு உணவளிப்பது, (2) பிரயாணிகளுக்கு வசதி பண்ணுவது, (3) சுண்ணம்பு கொடுப்பது, (4) வண்ணான், (5) நாவிதனுக்குக் கூலி கொடுப்பது, (6) கண்ணாடி, (7) காதோலை, (8) கண் மை, (9) எண்ணெய் கொடுப்பது, (10) ஆடு, மாடுகள் சொறிந்து கொள்ளக் கம்பம் நடுவது—இந்தத் தசாவதாரக் கோமாளிச் சட்டங்கள், மக்கள் நிலையின்றி நாடோடிகளாய்த் திரிந்த காலத்தில் ஏற்பட் டிருக்க வேண்டும்.

பாக்கி நாலு சட்டங்களும் படு மோசமானவை: (1) ஆறு சமயத்தவர்களுக்கு உணவளிப்பது, (2) பெண்ணைப் புணர்வதற்கு ஒத்தாசை செய்வது, (3) பிராமணர்களுக்கு மடம் கட்டுவது, (4) பசுக் கருத் தரிக்கப் பொலி காளை கொடுப்பது. —விஷயம் எப்படி? " அறத்தால் வருவதே இன்பம்; மற்ற எல்லாம் புறத்த; அவற்றால் புகழும் இல" என்று சொன்ன தமிழனுக்கு இவை ஒவ்வுமா?

இனி, இந்த அறங்கள் என் உண்டாயின? கொலை, களவு, கள், காமம், பொய் ஆகிய ஐந்து தீமைகளிலு மிருந்து நம்மைக் காப்பாற்ற. நம்மை வாட்டும் தீமைகள் ஐந்து மட்டுந்தானா? வெள்ளைக்காரர்கள் ஏழு சொல்லுகிறார்கள்: கர்வம், பேராசை, காமம், கோபம், அமித போஜனம், பொறாமை, சோம்பல்—இப்படி ஏழு மா பாதகங்கள்.

கொலை, காமம் இரண்டை மட்டுமே இன்று நாம் கண்டிக்கிறோம். மற்றவைகளைப் பொருட்படுத்துவ தில்லை—அதாவது, நமக்குப் பாதகமா யில்லாத போது! மனித நாகரிகத்தின் வளர்ச்சி—ஒழுக்க வளர்ச்சி—எச். ஜி. வெல்ஸ் சொன்னதுபோல், அதன் முடிவை நெருங்குவது போலத் தான் தோன்றுகிறது. தொடக்கமும்—காமத்தால், உடம்பும் உடம்பும் சேர்ந்து புணர்வதால், புது உயிரின் தொடக்கமும்—முடிவும்—கொலையால், உயிரும் உடம்பும் பலவந்தமாய்ப் பிரிக்கப்படுவதால், பழைய உயிரின் முடிவும்—சந்தித்து, ஒன்றை மற்றது வென்றுவிட மல்லாடுகின்றன. இயற்கைச் சக்தி கெக்கலித்து நகைக்கிறது. மனிதன் ஆக்கிக் கொண்ட வாழ்க்கை ஒழுக்கங்கள் அவனாலேயே தவிடு பொடியாகின்றன. புதிதாக என்ன வெல்லாமோ சப்பைக் கட்டுக் கட்டிப் பார்க்கிறோம்.

பஞ்சமா பாதகர்கள், தமது மனச் சாட்சியைத் தலை தூக்காமல் சாகடித்துவிட்டு, அதன் தொல்லை யில்லாமல் திரட்டிக் குவித்த செல்வங்களால் இன்பங் காணாமல், புனுகு பூனைபோல்,

இருப்புக் கொள்ளாமல் அலைபடு கிறார்கள். பஞ்சை மக்கள், தூரத் துப் பச்சையைக் கண்டு, ஏங்கி, உள்ளம் நெக்குருகி, அணு அணு வாய்ச் சாகிறார்கள். இயற்கை யின் ஒழுக்கப்படிப் பகிரங்கமாய் அவர்கள் நடக்கச் சமூகம் இடந் தராது; வசதி தராது. பணம் படைத்தவன் இயற்கை ஒழுக் கத்தையும், மனித ஒழுக்கத்தை யும் தள்ளவோ, கொள்ளவோ முடியக் கூடிய பரிதாப நிலைக்கு உலகம் வந்துவிட்டது. இயற்கை நம்மைச் சாட்டை வாங்குகிறது. சாவதா, வாழ்வதா?

சாகத் தேவையில்லை. நீங்களும் நானும் வாழத்தான் பிறந்தோம்.

நீங்களும் நானும் ஆரியரல்ல, திராவிடரல்ல; ஹிந்துவல்ல, முஸ்லிமல்ல; முதலாளியல்ல, தொழிலாளியல்ல; மேதையல்ல, முட்டாளல்ல; பஞ்சமா பாதக ரல்ல, துறவிகளல்ல; நாம் மனி தர்கள். மனிதர்களாய் வாழ் வோம். நம்முடைய இன மனிதர் களையும் நம்மைப் போன்ற மனி தர்களாய் மதித்து, அவர்க ளுடன் உறவு பூணுவோம். உங்க ளுக்கும் எனக்கும் ஒழுக்கம் விழுப்பம் தந்தே தீரும்.

*

தப்ப வழி யில்லை

ஒரு ஹாலிவுட் நட்சத்திரத் தம்பதிகளுள் ஏதோ ஒரு விஷயத்தில் தக ராறு எழுந்தது. கடைசியில் புருஷன்: "கண்ணே! நான் இத்தனை நேரமாக யோசித்துப் பார்த்தேன். நீ சொல்வதுதான் சரியென்று எனக்குப் படுகிறது."

பெண் நட்சத்திரம் சீறி விழுந்தாள்: "அதனால் விஷயம் ஒன்றும் சரிப்பட்டுப் போகவில்லை. நான் என் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டுவிட்டேன்."

—ஆர்தர் மர்ரே

சக்தி • மாத வெளியீடு

தனிப்பிரதி 'தபால்'	0	8	ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0	2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0	9	ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0	2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0	10	ஆறு மாதம்	4	8
ஒரு வருஷம்	8	0	2 வருஷம்	15	0

SHAKTI KARYALAYAM :: MADRAS—14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

சேதமின்றி சலவை
செய்யப்பட்டு
அதோடு ஸன்லைட்டால்
வெண்மையாக்கப்பட்டு
— ஜாஸ்தி அழுக்குப்
படிந்த இடங்கள் உள்பட
உங்கள் ஆடைகளில் பழக்கத்தால் சேதமடையு மிடங்களை கவனியுங்கள்! இவைதான் ஜாஸ்தி அழுக்குப்படியும் பாகங்கள். ஆடைகளை சிறிது சோப்பைத் தேய்த்து தண்ணீரில் நனைத்து, அடித்துத் துவைப்பதால் அதிகமாக கெட்டுப் போகக் கூடிய இடங்களும் இவையே.
உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படி
சுத்தம் செய்து அடித்துத் துவைப்பதனா
லேற்படும் நாசத்தை விலக்குங்கள்.
ஸன்லைட்டின் ஏராளமான சுயமாக இயல்கிற நுரையை, நனைந்த துணியில் புகுத்திக் கசக்கினால் அதிகமாக அழுக்குப்படிந்துள்ள இடங்கள்கூட தூய வெள்ளையாகிறது. இச்சுத்தமான சோப் உங்கள் துணிகளுக்கு நன்மையளிக்கிறது—அவைகளுக்கு இறகையொத்த அழகைக் கொடுக்கிறது, அன்றியும் உங்கள் கைகளை மிருதுவாகவும், மழமழப்பாகவும் வைத்துக்கொள்ளுகிறது.
இது
ஸன்லைட் முறைப்படி
சுத்தம் செய்தது!
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
S. 80-50 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

கர்பாசயரோக நிவாரணி

அருணா ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக். முறைப்படி தவறாமல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்கு ரசிக்கச் செய்யும்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
தி-நகர் . . . . மதராஸ்.

EASTERNS 3/76.

நிதமிஞ்சி போஷிப்பது கெடுதலை விளைவிக்கும்

இது மிகவும் மெல்லிய தன்மை வாய்ந்த, அங்க அமைப்புள்ள குழந்தைகள் விஷயத்தில் மிகவும் பொருந்தமாகும்.

அளவுக்கு மீறி உணவு அளிப்பதாலும், வேளை தப்பிய வேளையில் உணவு கொடுத்தாலும் ஈரலுக்கு அதிக வேலை உண்டாகி சொற்ப காலத்தில் ஈரல் பெருக்கம் ஏற்பட காரணம் ஆகிறது. இந் நிலைமையை அறியாமல் நீடிக்க விட்டாலும், சரியான சிகிச்சை செய்யாவிட்டாலும் அது அபாயகரமான நிலைமைக்குக் கொண்டுவிடும்.

ஆரம்ப அறிகுறிகளை கவனிக்கவும்



அடிக்கடி, ஜுரம் ஏற்படுதல், மலசிக்கல், அதிக மலப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், பொதுவாக சோர்ந்திருத்தல், அடிக்கடி சிணு சிணுத்தல்.

அபாயத்தை ஆரம்பத்திலேயே அகற்றுங்கள்

வியாதி குறிகள் கண்ட உடனே ஜம்மியின் லிவர் க்யூர் கொடுங்கள். அப்படிச் செய்வது உங்கள் கவலையை நீக்கி பணச்செலவைக் குறைத்து, வியாதியை முற்ற விடாமல் செய்து பின்னிட்டு ஏற்படக்கூடிய அபாயத்தை தவிர்க்கும்.

ஜம்மியின்
லிவர்க்யூர்
உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குலைக்கட்டிக்கு ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படுகின்றன

ஜம்மி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்
மைலாபூர் — மதராஸ்.

பிராஞ்சுகள்:— பம்பாய், கல்கத்தா, டெல்லி.
திருச்சிராப்பள்ளி, வேலூர், கும்பகோணம்

அமெரிக்காவில் தேர்தல்

●

ரா. ராமநாதன்

சமீபத்தில் ஐக்கிய அமெரிக்காவில் நடந்த தேர்தலில் குடியரசுக் கட்சி வெற்றி பெற்றது. ஜனப் பிரதிநிதிகள் சபையில் 246 ஸ்தானங்களையும், மேல் சபையில் 51 ஸ்தானங்களையும் அந்தக் கட்சி கைப்பற்றி யிருக்கிறது. பல வருடங்களுக்குப் பிறகு குடியரசுக் கட்சி இந்தத் தேர்தலில் தான் பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றும் வேலையில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் விளைவு தேசிய ரீதியிலும், சர்வ தேசிய ரீதியிலும் பயங்கரமானதாக இருக்கும்.

இந்த வெற்றி, ஐக்கிய அமெரிக்க சர்க்கார் கடந்த ஒரு வருஷ காலமாக மேற்கொண்ட பிற்போக்குக் கொள்கையின் நேரடியான பலன். ரூஸ்வெல்ட்டின் மரணத்திற்குப் பிறகு அமெரிக்க சர்க்கார் ஏகாதிபத்திய நோக்கத்துடன் செயல் புரிந்தது. ட்ரூமன் சர்க்கார் பிற்போக்காளர்களுக்கு ஆக்கம் அளித்தது. அமெரிக்க முதலாளிகளுக்கு ட்ரூமன் சர்க்கார் துணை புரிந்தது; அவர்கள் நலன்களைப் பாதுகாக்கப் பெரு முயற்சி செய்தது.

அணுக் குண்டைக் காட்டிப் பயமுறுத்தி அமெரிக்கா சிறிய நாடுகளை ஆடக்கி ஆள முயன்றது. பணச் செருக்கால் அது சர்வதேச அரங்கத்தில் கொக்கரித்தது. ஏகாதிபத்திய வெறி படைத்த அமெரிக்கா உலக சமாதானத்தை இன்று அச்சுறுத்துகிறது.

அமெரிக்கப் பிற்போக்காளர்களின் பிரதிநிதி அன்னிய நாட்டு மந்திரி பயர்ன்ஸ். அவர் அணுக் குண்டையும், பணத்தையும் பணயமாக வைத்துச் சூதாடுகிறார். இந்த ஆயுதங்களைக் கொண்டு அவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கைப் பெருக்க முயலுகிறார். புதிய சந்தைகளைக் கைப்பற்றவும், வலிமையற்ற நாடுகளை அமெரிக்காவின் குடியேற்ற நாடுகளாக மாற்றவும் அவர் 'பகீரதப் பிரயத்தனம்' செய்கிறார். அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆசைக்குக் குறுக்கே நிற்கும் மூன்று வல்லரசுகளின் கூட்டுறவுக்கு (இது பாஸிஸ எதிர்ப்புப் போரில் உருவெடுத்தது) விடை கொடுக்கவும் பயர்ன்ஸ் முயலுகிறார். உலக சமாதானத்தை நிலை நிறுத்தப் பாடுபடும் சோவியத் யூனியனுக்கு எதிரான முன்னணியைச் சிருஷ்டி செய்ய அவர் பாடுபடுகிறார். சமீபத்தில் நடந்த தேர்தலில் குடியரசுக் கட்சி பெற்ற வெற்றி, பயர்ன்ஸின் பிற்போக்குக் கொள்கைக்கு ஆக்கம் அளிக்கும்.

சர்வதேச ரீதியில், சீனத்தை அடிமைப்படுத்தவும், அமெரிக்காவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற பிற்போக்காளர்களைக் கொண்ட சர்க்காரை ஜெர்மனியிலும், ஜப்பானிலும் ஸ்தாபிக்கவும்

"உலகத்தின் நன்மையை முன்னிட்டு, அமெரிக்க முற்போக்காளர்கள் ஒன்றுபட வேண்டும். இதைச் சார்ந்து நிற்கிறது அமெரிக்காவின் எதிர் காலம்."

அமெரிக்க ஏகாதிபத்தியம் முயலுகிறது. உள்நாட்டில் தொழிலாளர்களின் உரிமைப் போரை மிருகத்தனமாக நசுக்கவும், ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டு நிற்கும் அமெரிக்கத் தொழிலாளர்களின் முதுகெலும்பை முறிக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் முயலுகிறது. அத்துடன் கள்ளச் சந்தையைத் தடுக்கும் விலை நிர்ணயக் கொள்கைக்கு விடை கொடுத்துவிட்டு, லாபக் கொள்ளைக்காரர்கள் சந்தைகளில் தனி அரசு செலுத்த ட்ரூமன் சர்க்கார் இடம் அளிக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிப்பதற்காக ரூஸ்வெல்ட் சர்க்கார் மேற்கொண்ட பொது இலாகா மான்யத்தை ட்ரூமன் சர்க்கார் பெரிதும் குறைத்து விட்டது. உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் அமெரிக்க சர்க்கார் பாசிஸ்டுக் கொள்கையை மேற்கொள்ளுகிறது. குடியரசுக் கட்சி அதிகாரத்திற்கு வந்ததும், இந்தக் கொள்கை மிகக் குரூரமான வடிவத்தில் அனுஷ்டானத்திற்கு வரும்.

ட்ரூமன் சர்க்காரின் பிற்போக்குச் செயல்கள் ஜனங்கள் கழுத்தை நெரித்தன. ஜனங்கள் கஷ்டம் அதிகரித்தது. தொழிலாளர்கள் நியாயமான கோரிக்கைகளைப் பெற வேலை நிறுத்தப் போரில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டங்களை ராணுவத்தின் உதவியுடனும், சட்டங்களின் பக்கபலத்துடனும் ட்ரூமன் நசுக்க முயன்றார், முயலுகிறார். எனவே, ஜனங்களில் பெரும்பான்மையோர் ஜனநாயகக் கட்சியை வெறுத்தனர். இந்த வெறுப்பைத் தேர்தல் காலத்தில் குடியரசுக் கட்சி பெரிதும் பயன்படுத்திக்கொண்டது. சுமார் பதினைந்து வருடங்களுக்குப் பிறகு குடியரசுக் கட்சி தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றது. அமெரிக்கா எங்கே போகிறது என்பதை இந்த வெற்றி படம் பிடித்துக் காட்டுகிறது.

வருங் காலத்தில் குடியரசுக் கட்சி சோவியத் யூனியனைத் தாக்கும் வேலையில் முழு மூச்சுடன் ஈடுபடும்; தன்னை ஆதரிக்காதவர்களுக்குப் பொருளுதவி புரிய அது மறுக்கும்; அமெரிக்கப் பொருள்களுக்குச் சந்தைகள் அளிக்காத நாடுகளை அது துன்புறுத்தும்; ஏகாதிபத்திய வெறி படைத்த அமெரிக்கா பிற நாடுகளுடன் முட்டி மோதும். இதைத் தடுக்கவில்லை என்றால், உலகத்தின் எதிர்காலம் பயங்கரமானதாக இருக்கும்.

ஆனல், அமெரிக்கப் பிற்போக்காளர்களைத் தடுத்து நிறுத்த முடியும். அமெரிக்கத் தொழிற் சங்கங்கள் (காங்கிரஸ் ஆஃப் இன்டஸ்ட்ரியல் ஆர்கனைசேஷன், அமெரிக்கன் பெடரேஷன் ஆஃப் லேபர்) பிற்போக்காளர்களுக்கு எதிரான ஐக்கிய முன்னணியை உருவகப்படுத்தினல், முற்போக்காளர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக ஒன்றுபட்டு நின்றால், அமெரிக்கப் பிற்போக்காளர்களை நிச்சயமாகத் தடுத்து நிறுத்த முடியும். தேசத்தின் நன்மையை உத்தேசித்து, உலகத்தின் நன்மையை முன்னிட்டு, அமெரிக்க முற்போக்காளர்கள் ஒன்றுபட வேண்டும். இதைச் சார்ந்து நிற்கிறது அமெரிக்காவின் எதிர்காலம்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். —பாரதி

எண்ணெய் தெரியுமா?

●

ப. வெ. வேங்கடசுப்பிரமணியன்

எண்ணெய் என்ற வார்த்தைக்கு எள்+நெய், எள்ளினின்றும் எடுக்கப்படுகிற தைலம் அல்லது நெய் என்றுதான் பொருள். தேங்கா யெண்ணெய் என்று தேங்காயினின்று கிடைக்கிற தைலத்தைக் குறிப்பிடுகிறோம். வார்த்தையைப் பிரித்துப் பார்த்தால், தேங்காய்+எள்+நெய் என்று இருக்கிறது. எள் எங்கிருந்து வந்தது? இத் தவறு நம்மை யறியாமல் எப்படியோ பழக்கத்தில் புகுந்து விட்டது. "எள்" தானே! எந்தக் கூட்டத்திலும் எளிதில் புகுந்துவிடும். அது பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். ரசாயன ரீதியில் எண்ணெய் என்பதற்கு உள்ள பொருளை ஆராய்வோம்.

நெய்க்கு அடுத்தாற்போல் நாம் உணவாகக் கொள்வது தேங்கா யெண்ணெய்தான். நம்மில் அனேகருக்கு அப்பளம் தேங்கா யெண்ணெயில் பொரித்தால்தான் பிடிக்கும். இப்படியிருக்க, எள்ளினின்றும் எடுக்கும் எண்ணெயை மாத்திரம் நல்லெண்ணெய் என்று சொல்லுகிறோமே! சிலருக்குத் தேங்கா யெண்ணெய் பித்தத்தைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கும். நல்லெண்ணெய் மிகவும் சாது. அப்படி ஒன்றும் பித்தத்தைக் கிளப்பாது. அதனால், அதன் பெயரும் அதற்கு ஒருவாறு பொருந்தும். ஆமணக்கெண்ணெய் மாத்திரம் என் அவ்வளவு வழ வழப்பாகவும், வயிற்றைக் குமட்டும் மணம் பொருந்தியதாகவும் இருக்கிறது? இவற்றை யெல்லாம் தெரிந்து கொள்வதும் நல்லதுதான்.

கடையில் வாங்கும் நெய்யில் கொழுப்புக் கலந்திருக்குமோ என்ற சந்தேகம் நம்மில் பலருக்கு வரச் சந்தர்ப்பம் இருந்திருக்கும். கொழுப்பு என்பதுதான் என்ன? எண்ணெய்க்கும் கொழுப்புக்கும் ஏதேனும் வித்தியாச முண்டா? கொழுப்பு என்ற வார்த்தையைக் கேட்டவுடனே நம் மனத்தில் எழுவது, மிருகங்களைக் கொன்று அவற்றினின்றும் எடுக்கிற ஒருவித எண்ணெய் என்ற எண்ணம்தான். பார்க்கப் போனால், கொழுப்புக்கும் எண்ணெய்க்கும் வித்தியாசமே இல்லை. சாதாரண உஷ்ண நிலையில் திடமாக (அதாவது கட்டியாக) இருக்கிற எண்ணெயைக் கொழுப்பு என்றும், திரவமாக இருக்கிறதை எண்ணெய் என்றும் ரசாயன ரீதியாகக் குறிப்பிடுவார்கள். உதாரணமாக, உஷ்ணம் மிகுந்த நம் தமிழ் நாட்டில், திரவமாக இருக்கும் தேங்கா யெண்ணெயை "எண்ணெய்" என்று சொல்கிறோம். குளிர் மிகுந்த மேலை நாட்டில், தேங்கா யெண்ணெய் வருஷம் முழுவதும் திடமாகவே இருப்பதால், அங்கே இதைத் "தேங்காய்க் கொழுப்பு" என்றே சொல்லுவார்கள். சுமார் இருபது செண்டிகிரேட் டிகிரி உஷ்ணத்துக்கு மேல் உருகும் எண்ணெயைக் கொழுப்பு என்றும், அதற்குக் கீழ் உருகும்

எண்ணெய் பற்றிய எண்ணெப் பற்றி மிக்க நயமாக, சரளமாகக் கூறும் இது, விஞ்ஞானக் கட்டுரை வரிசையில் முதலாவது. மற்றவை அடுத்து வரும். 'பிரபலப் பேர்' ஆசிரியர்களும், எழுத்தாளர்களும் கூடப் படிக்கலாம்!

எண்ணெயை "எண்ணெய்" என்றும் சொல்வது வழக்கம்.

எண்ணெயையும் கொழுப்பையும் கீழ்க்கண்டவாறு நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்:

1. தாவர எண்ணெய்,

2. தாவரக் கொழுப்பு,

3. மிருக எண்ணெய்,

4. மிருகக் கொழுப்பு. (மிருக எண்ணெய் என்பது பன்றி முதலிய மிருகங்களிலிருந்தும், சுரு மீன், திமிங்கலம் முதலியவைகளிலிருந்தும் எடுக்கும் எண்ணெயையும் குறிக்கும்.) எண்ணெயும் கொழுப்பும் மனிதனுக்கு மிகவும் முக்கியமானவை. மனிதன் உண்ணும் உணவில், கொழுப்பு, சர்க்கரை, புரதம் என்று மூன்று விதச் சத்துக்கள் அடங்கியுள்ளன. இவற்றுள், தேகத்துக்கு வேண்டிய உஷ்ணச் சக்தியைக் கொழுப்பே அதிகம் கொண்டிருக்கிறது.

தாவர எண்ணெய் அல்லது கொழுப்புக்கும், மிருக எண்ணெய்க்கும் என்ன வேறுபாடுண்டு? தயாரிக்கும் வித்தியாசங்களைத் தவிர வேறு கிடையா. இருவித எண்ணெய்க்கும் பொது இயல்புகள் ஒன்றே. தாவர எண்ணெயில் உள்ள எல்லாக் கொழுகாடி(கொழுப்புங் காடியும்)களும் மிருக எண்ணெயிலும் உண்டு. சில காடிகள் தாவர எண்ணெயில் அதிகமாகக் காணப்படும். வேறு சில காடிகள் மிருக எண்ணெயில் அதிகம். தாவர எண்ணெயிலிருந்து கிடைக்கிற கொழு காடிகளைக் கொண்டே, குறிப்பிட்ட ஒரு மிருக எண்ணெயை உண்டு பண்ண முடியும்.

ஒவ்வொரு தாவர எண்ணெயிலும், மிருக எண்ணெயிலும், சில சில கொழு காடிகள்தான் அதிகமாகக் காணப்படும். இப்படி அதிகமாகக் காணப்படும் கொழு காடிகளைப் பொறுத்து எண்ணெய்களின் தன்மையும் வேறுபடும். உதாரணமாக, தேங்கா யெண்ணெயில் அதிகமாய்க் காணப்படும் கொழு காடி நல்லெண்ணெயில் அதிகமாக இராது. நெய்யில் அதிகமாய்க் காணப்படும் கொழு காடி வேறு எந்த எண்ணெயிலுமே இராது.

"செட்டியாரே, தேங்கா யெண்ணெய் மிகவும் காறலாயிருக்கிறது. காசைத் திருப்பிக் கொடும்" என்று கேட்கிறோம். எண்ணெயில் காறல் எங்கிருந்து வந்தது? எண்ணெயில் காடி எப்பொழுதும் 'கிளிசரின்' என்ற மற்றொரு வஸ்துவுடன் கூடித்தான் காணப்படும். இப்படிக் காடியும் கிளிசரினும் கூடிய கூட்டுப் பொருளுக்குக் "கிளிசரைடு" என்று பெயர். எண்ணெயைச் சேமித்து வைப்பதில் அஜாக்கிரதையாக விருந்தால், அதில் ஈரமும் வெளிச்சமும் படுகின்றன. ஈரமும் வெளிச்சமும் எண்ணெயைத் தாக்கும் பொழுது, கிளிசரினும் கொழு காடியும் தனித் தனியாகப் பிரிந்துவிடுகின்றன. இப்படித் தனியாகப் பிரிந்த கொழு காடியே எண்ணெய்க்குக் காறலை உண்டு பண்ணுகிறது.

எண்ணெயிலுள்ள அனேக கொழு காடிகளும் தனித்தனியாகக் கிளிசரின் என்ற வஸ்துவுடன் சேர்ந்து, அந்தந்தக் கொழு காடிக்குரிய கிளிசரைடுகளாகவே காணப்படுகின்றன. ஆகவே, எண்ணெய் அல்லது கொழுப்பு என்று நாம் சொல்லும்போது, பல கொழு காடிகளின் கிளிசரைடுகள் சேர்ந்த

ஒரு கலவை என்பதுதான் பொருளாகும்.

கொழு காடி என்றல் என்ன என்று இப்பொழுது தெரிந்துகொள்ள வேண்டும். கொழு காடி என்பது, கரி, ஹைட்ரோஜன், பிராணவாயு, (ஆக்சிஜன்) இவை மூன்றும் கூடுவதனால் உண்டாகும். இவை மூன்றும் வெவ்வேறு விகிதங்களில் ஐக்கியமாகும் பொழுது, வெவ்வேறு கொழு காடிகள் உண்டாகும். இம் மூன்றும் ஐக்கிய மாவதில் ஏதேனும் விதி இருக்கிறதா? விதி ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அந்த விதி விதிக்கிற வரம்பிற்குள் இவை தங்கள் இஷ்டப்படி ஒன்றே டொன்று ஐக்கிய மாகின்றன.

ஒரு கரி அணுவுக்கு நான்கு கைகள் உண்டென்று வைத்துக் கொள்வோம். கைகள் இருப்பதை ஆங்கிலத்தில் "வாலன்ஸி" என்பார்கள். ஒரு பிராண வாயு அணுவுக்கு இரண்டு கைகளும், ஒரு ஹைட்ரோஜன் அணுவுக்கு ஒரு கையுமுண்டு. நான்கு கையுள்ள ஒரு கரி அணு மற்றோர் அணுவுடன் சேரும் பொழுது, தன்னுடைய நான்கு கைகளாலும் மற்ற அணுவின் கைகளைக் கோத்துக்கொள்வதாக வைத்துக் கொள்ளலாம். ஆகவே, நான்கு கையுள்ள ஒரு கரி அணுவானது, இரண்டு பிராண வாயு அணுக்களுக்குரிய நான்கு கைகளையும் தன்னுடைய நான்கு கைகளில் கோத்துக்கொண்டு, பூர்த்தியாக ஐக்கியமாகும். இதே மாதிரி, ஒரு கரி அணுவானது, நான்கு ஹைட்ரோஜன் அணுக்களுடன் சேரக்கூடும். ஒரு கரி அணு, இரண்டுக்கு மேற்பட்ட பிராண வாயு அணுக்களுடனே, அல்லது நான்குக்கு மேற்பட்ட ஹைட்ரோஜன் அணுக்களுடனே சேர்ந்து ஐக்கியமாகாது. ஆனல், ஒரு கரி அணு, ஒரே பிராண வாயு அணுவுடனே, அல்லது நான்குக்குக் குறைந்த ஹைட்ரோஜன் அணுக்களுடனே சேரக் கூடும். இவ்வாறு சேர்ந்தது போக, எஞ்சின கைகளால் வேறு எந்த அணுவையாவது தன் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளத் தயாராயிருக்கும். ஒரு மனிதன் தன் இரண்டு கைகளால் ஒரே சமயத்தில் இரண்டு பேருடன் கை கோத்து நிற்கலாம், அல்லது ஒரு கையால் ஒருவருடன் மாத்திரம் கை கோத்து நிற்கவுங் கூடும். ஒரு மனிதன் மூன்று பேருடன் கை கோத்து நிற்றல் முடியாதல்லவா?

ஒரு கரி அணு, தன் நான்கு கைகளும் பூர்த்தியாக நான்கு ஹைட்ரோஜன் அணுக்களுடன் சேரும் என்று பார்த்தோம். இரண்டு கரி அணுக்கள் எத்தனை ஹைட்ரோஜன் அணுக்களுடன் சேரும்? எட்டு ஹைட்ரோஜன் அணுக்களுடன் அல்ல. ஆறு ஹைட்ரோஜன் அணுக்களுடன் தான் சேரும். ஏனென்றல், முதலாவது, இரண்டு கரி அணுக்களும் இரண்டு கைகளால் தங்களைத் தாங்களே பிணைத்துக் கொள்கின்றன. இவை போக, மீதியிருப்பன ஆறு கைகள்தான். இதே மாதிரி, மூன்று கரி அணுக் கூட்டு, எட்டு ஹைட்ரோஜன் அணுக்களுடன்தான் ஐக்கியமாக முடியும். இவ்விதமாக, கரி அணுக்களின் நான்கு கைகளும் ஒன்றுகூட மீதியில்லாமல் வேறு அணுக்களின் கைகளுடன் கோத்து நிற்கும் கூட்டத்தை "நிறை கூட்டம்" என்று கொள்ளலாம். ஒன்றே அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கரி அணுக்

களின் கைகளோ மீதியா யிருக்கும் கூட்டத்தைக் "குறை கூட்டம்" என்று கொள்ளலாம்.

ஆகவே, கொழுகாடிகளை இரு வகையாகப் பிரிக்கலாம்: ஒன்று, "நிறை கொழுகாடிகள்". மற்றொன்று, "குறை கொழுகாடிகள்". நிறை கொழு காடிகளில் கோத்துக்கொள்ள எஞ்சின கைகள் இல்லாததால், ஹைட்ரொஜன் அணுக்களையோ வேறு எந்த அணுக்களையோ அங்கே புகுத்த முடியாது. "குறை கொழு காடி"களில் குறிப்பிட்ட முறைகளால் ஹைட்ரொஜன் அணுக்களை உட் புகுத்த முடியும்.

எல்லா எண்ணெய்களிலும் நிறை கொழு காடிகளின் கிளிசரைடுகளும், குறை கொழு காடிகளின் கிளிசரைடுகளும் கலந்தே இருக்கும். அவற்றில் குறை கொழு காடிகளுக்கு மாத்திரம் ஹைட்ரொஜனைத் தன்னிடத்தில் சேர்த்துக்கொள்ளும் சக்தி இருக்கிறது. குறை கொழு காடிகளின் இத்தன்மையே வனஸ்பதி செய்வதில் உபயோகப் படுகிறது.

கரி அணுக்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல், நிறை கொழு காடிகள் ஒரு வரிசைக் கிரமமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. நான்கு கரி அணுக்களையும், எட்டு ஹைட்ரொஜன் அணுக்களையும், இரண்டு பிராண வாயு அணுக்களையும் கொண்டது "பியூட்டிரிக் காடி" என்பது. இது நெய்யில்தான் மிகவும் அதிகமாகக் காணப்படும். ஆறு கரி அணுக்களும், பன்னிரண்டு ஹைட்ரொஜன் அணுக்களும், இரண்டு பிராண வாயு அணுக்களும் கொண்டது "கேப்ராய் காடி". இது தேங்கா யெண்ணெயில் மிகவும் அதிகமாகக் காணப்படும். இவ்வாறாக, கரி அணுக்கள் இரண்டிரண்டாகவும், ஹைட்ரொஜன் அணுக்கள் நான்கு நான்காகவும் கூடிக் கொண்டே போகின்றன. பிராண வாயு அணுக்கள் மாத்திரம், கூடாமலும் குறையாமலும் இரண்டிலேயே நிற்கின்றன. வரிசையாகப் போனால், பதினெட்டுக் கரி அணுக்களையும், முப்பத்தாறு ஹைட்ரொஜன் அணுக்களையும், இரண்டு பிராண வாயு அணுக்களையும் கொண்ட காடி ஒன்றிற்கு வருகிறோம். இதற்குப் பெயர் "ஸ்டீரிக் காடி" என்பது. இது மிகவும் முக்கியமான காடிகளில் ஒன்று. சவுக்காரம் செய்வதிலும், மெழுகுவர்த் செய்வதிலும் மிகவும் பயன் படுகிறது.

கொழுப்பில் காணப்படும் பொருள்களில் ஒன்றாகிய காடியைப் பற்றி இது வரையில் பார்த்தோம். இனி, காடியுடன் கூடிக் காணப்படும் கிளிசரினைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். கிளிசரின் என்ற வஸ்துவும், கரி, ஹைட்ரொஜன், பிராணவாயு ஆகிய மூன்றின் அணுக்களினால் ஆனதே. மூன்று கரி அணுக்களும், எட்டு ஹைட்ரொஜன் அணுக்களும், மூன்று பிராண வாயு அணுக்களும் சேர்ந்தது. இதெப்படி முடியும்? மூன்று கரி அணுக்கள் கொண்ட தொகுதிக்கு எட்டுக் கைகள்தானே இருக்க முடியும். மூன்று கரி அணுக்கள், எட்டு ஹைட்ரொஜன் அணுக்கள் போக, மூன்று பிராண வாயு அணுக்களை எப்படிச் சேர்த்துப் பிடித்துக்கொள்ள முடியும்? கரி அணு ஒன்றுக்கு ஒருபோதும் நான்கு கைகளுக்கு மேல்

கிடையா. பிராண வாயு அணு வுக்கு இரண்டு கைகள் உண்டென்று பார்த்தோம். ஒரு பிராண வாயு அணு தனியாக ஒரு ஹைட்ரொஜன் அணுவுடன் ஐக்கியமானல், அதன் கையிலொன்று மீதி யிருக்கும். இந்த ஒரு கையால் கரி அணுவின் ஒரு கையை இது பற்றிக்கொள்ளலாமல்லவா? ஆகவே, ஒரு பிராண வாயு அணுவும் ஒரு ஹைட்ரொஜன் அணுவும் சேர்ந்த கூட்டானது ஒரு தனி ஹைட்ரொஜன் அணுவைப் போலத் தானே? இந்தக் கூட்டை ஆங்கிலத்தில் "ஹைட்ராக்ஸிலியன்" என்று சொல்வார்கள். இக் கூட்டு எப்பொழுதும் ஒரு தனி அணுவைப்போல் நடந்துகொள்கிறது. அதாவது, இது மற்ற வஸ்துக்களோடு கூடும்போதும், மற்ற வஸ்துக்களை விட்டுப் பிரியும்போதும், ஒரே வஸ்துப் போலக் கூடுகிறது அல்லது பிரிகிறது. ஆகவே, கிளிசரினிலுள்ள மூன்று பிராண வாயு அணுக்களும் தனித் தனியாக மூன்று ஹைட்ரொஜன் அணுக்களுடன் சேர்ந்து, பிறகு, மிச்சமுள்ள தம் தம் ஒற்றைக் கைகளால் மூன்று கரி அணுக்களின் மூன்று கைகளைப் பிடித்துக் கொள்கின்றன. மூன்று கரி அணுக்களில், மீதியுள்ள ஐந்து கைகளையும் மீதியுள்ள ஐந்து ஹைட்ரொஜன் அணுக்கள் பிடித்துக்கொள்கின்றன. இப்படியாக, கிளிசரினிலுள்ள மூன்று கரி அணுக்களின் எட்டுக் கைகளும் பூர்த்தியாகின்றன.

காடிகளையும் கிளிசரினையும் பற்றிப் பார்த்தோம். இனி, இவை இரண்டும் எப்படி ஒன்று சேர்கின்றன என்று பார்க்க வேண்டும். இவ்விரண்டு பொருள்களும் ஒன்றுகூடுவதற்கு ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கை மிச்ச மிருக்க வேண்டும். கொழு காடியும் கிளிசரினும் சேரும் பொழுது கொழு காடியி லிருந்து ஒரு ஹைட்ரொஜன் அணு விலகிவிடும். அதேபோல், கிளிசரினி லிருந்து ஒரு ஹைட்ரொஜன், பிராண வாயுக் கூட்டும் விலகிக் கிளிசரினும் காடியும் ஐக்கியமாகும். மேற் சொன்னவாறு விலகுகிற ஹைட்ரொஜன், பிராண வாயுக் கூட்டும், தனி ஹைட்ரொஜன் அணுவும் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து, ஒரு நீர்த் துகள் ஆகிவிடும். நீர்த் துகள், இரண்டு ஹைட்ரொஜன் அணுக்களும் ஒரு பிராண வாயு அணுவும் கூடியதாகும்.

கிளிசரினும் காடியும் சேர்ந்து எப்படிக் கிளிசரைடாக மாறுகின்றன என்று பார்த்தோம். இந்தக் கிளிசரைடுடன் காரத்தைச் சேர்த்தால் என்ன வாகும் என்பதை இனிப் பார்ப்போம் :

காரம் என்பது ஒரு சோடியம் அணுவும், ஒரு ஹைட்ரொஜன் அணுவும், ஒரு பிராண வாயு அணுவும் கூடுவதினல் கிடைப்பது. எண்ணெயில் காரத்தைச் சேர்த்தால், கிளிசரைடுகள் கொழு காடிகளாகவும், கிளிசரினாகவும் தனித் தனியாகப் பிரிக்கப்படுகின்றன. காரத்தில் உள்ள சோடியம் அணு, கொழு காடியுடன் சேர்ந்து ஓர் உப்பாகிறது. இந்த உப்பையே நாம் சோப்பு என்கிறோம். ஆகவே, எண்ணெயுடன் காரத்தைச் சேர்க்கும் பொழுது சோப்பும் கிளிசரினும் கிடைக்கின்றன.

தேங்கா யெண்ணெய்: நெய்க்கு அடுத்தாற்போல் நாம் உண

வாகக் கொள்ளும் எண்ணெய் வகைகளில் இதுவே முக்கியமாக இருக்கிறது. இந்த எண்ணெய் சோப்புச் செய்வதற்கு மிகவும் ஏற்றது. இதனுல், இந்த எண்ணெயை மேலே நாட்டினர் ஒருவருக் கொருவர் போட்டி போட்டுக்கொண்டு நம் தேசத்தில் ஏராளமாக இறக்குமதி செய்கின்றனர். கொச்சித் தேங்கா யெண்ணெயே முதல் தரமானது என்பது உலகப் பிரசித்தம். இது மலபார் கடற் கரையிலும், ஜாவா, சுமத்திராத் தீவுகளிலும், ஆப்பிரிக்காக் கண்டத்தின் கீழ்க் கடற் கரையிலும் ஏராளமாகத் தயாராகிறது.

கடலை எண்ணெய்: இந்தியாவில், அதிலும் சென்னை ராஜதானியில், ஏராளமாகக் கடலை பயிராகிறது. இது, நாம் உணவாகக் கொள்ளும் எண்ணெய்களில் ஒன்று. வனஸ்பதி செய்வதில் மிகவும் உபயோகப்படுகிறது. உலகத்தில் வருஷம் ஒன்றுக்குச் சுமார் பத்து லட்சம் டன் கடலை எண்ணெய் உற்பத்தியாகிறது.

ஆமணக் கெண்ணெய்: பதினெட்டுக் கரி அணு, முப்பத்து நாலு ஹைட்ரொஜன் அணு, மூன்று பிராண வாயு அணுக் கொண்ட காடிக்கு "நீஸினோ லீக்" காடி என்று பெயர். இந்தக் குறைகொழு காடி மற்ற எண்ணெய்களில் இல்லை என்றே சொல்லலாம். ஆமணக் கெண்ணெயில் மாத்திரம் இந்தக் காடி தொண்ணூற் றிரண்டு சத விகிதம் இருக்கிறது. இதனுல்தான் ஆமணக் கெண்ணெய் ஆமணக் கெண்ணெயாகவே இருக்கிறது போலும்.

நெய்: மனிதன் மிகவும் எளிதாகச் சீரணித்துக் கொள்ளும் கொழுப்பு. கரி அணு நாலு, ஹைட்ரொஜன் அணு எட்டு, பிராணவாயு அணு இரண்டு இவைகளால் ஆனது பியூட்டிரிக் காடி. இது நெய்யில்தான் அதிகமாகக் காணப்படுகிறது; வனஸ்பதியில் கொஞ்சம்கூடக் கிடையாது.

✲

அங்கே!

கூழுக்கு விதியின்றி அலைகையில்—அங்கே
கோப்பையில் சாராயம் ஓடுது
அம்மையின் மார்பிலே ரத்தத்தை—எங்கள்
அருமைக் குழந்தை குடிக்கையில்
'ஆர்லிக்சு' மாவுக்கு அலைகிருர்—அதற்கு
ஆயிரம் பேருசி பாரிசு!

—சிவசங்கரன் (கவிக்குயில் மலர்)

அப்பா வாகனம்!

மற்ற வாகனங்களைவிட எனக்கு நிரம்பப் பிடித்த வாகனம் ஒன்று உண்டு. எல்லோருமே (சிறுவர்கள் மட்டும்) இந்த வாகனத்தை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அப்பாவை, குதிரை மாதிரி நாலு காலில் (இரண்டு கை, இரண்டு கால்) நிற்கும்படிச் செய்துவிட்டு, அவர் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டு, சவாரி செய்வது அளவு கடந்த சந்தோஷத்தைக் கொடுக்கும். அப்பாவைவிட நல்ல வாகனம் உலகில் ஏது?

—அம்பி (பாசரசு)

நாகரிக வாழ்க்கைக் கேற்ற

Godrej கோத்ரெஜ் சாதனங்கள்



கோத்ரெஜ் உலோக பர்னிசர் சாமானில் நாகரிக மனை நிலையின் நல் விருப்பத்திற்கு ஒத்த சௌகரியத்திற்கேற்ற சாதனங்கள் நன்றாக அமைக்கப்பட் டிருக்கின்றன. அதன் சிறப்பான வேலைப்பாடும் துல்லித மான பளபளப்பும், அதற்கு, உஷ்ணப் பிரதேசத்தில் மிகவும் விரும்பும் குளிர்ந்த தோற்றத்தைக் கொடுக்கிறது. கோத்ரெஜ் பர்னிசர் சாமானை சுத்தம் செய்வது மிகவும் எளிது. அதில் தூசியோ அல்லது பூச்சி, எலி முதலியன இருக்க இடம் கொடாது. பல ஆண்டுகளாகச் செய்த ஆராய்ச்சியின் பலனாலும், விசேஷ உலோகத்தினால் செய்யப்பட் டிருப்ப தாலும் அதன் மெருகு ஒருபொழுதும் கெடாது. உங்கள் நண்பர்களின் நன் மதிப்பையும் அதிகரிக்கச் செய்கிறது.

கோத்ரெஜ் அண்ட் பாய்ஸ் மான்யுபாக்சரிங் கோ., லிமிட்.

உருதியும் பாதுகாப்பும் வாய்ந்த உலோக பர்னிசர் தயாரிப்பவர்கள்

மதராஸ்: 164, பிராட்வே. பெங்களூர்: தி கமிஷன் & ஜெனரல் ஏஜன்ஸி, 180, நரசிம்ம ராஜா ரோடு; கோயமுத்தூர்: தி கமிஷன் & ஜெனரல் ஏஜன்ஸி, பெரியகடைத் தெரு. திருச்சினாப்பள்ளி: ST. RM. CT. ராமஸ்வாமி செட்டியார் அவர்கள், மோட்டார் வேர் ஹவுஸ். மதுரை: மெசர்ஸ் S.R.S. பிரதர்ஸ் 45, கீழ் சித்திரை வீதி.

சரும ஆரோக்யத்திற்கும் அழகிற்கும்

Godrej கோத்ரெஜ் டாயலெட் (ஸ்நான) சோப்புகள்

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர் சில்க்

மைசூர்
கவர்ன்மெண்ட்
தயாரிப்பு.

கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-10 TM

இரண்டு வருஷங்களாக
நீங்கள் எதிர்பார்த்த

சக்தி ★ பொங்கல் மலர்

பொங்கல் தினத்தில்
உங்களுக்குக் கிடைக்கும்

சுமார் 164-பக்கங்கள் அழகிய படங்களுடன் விலை ரூபாய் ஒன்று. முன்பணம் ரூபாய் ஒன்றேகால் அனுப்புபவர்களுக்கு ரெஜிஸ்தர் தபாலில் அனுப்பப்பெறும். குறைவான பிரதிகளே அச்சிடுவதால் உங்கள் பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை :: சென்னை—14

நோயும் மருந்தும்

●

குரு

தனி மனிதனுக்கு நோய் வருவதுண்டு; அதைப் போலவே, மனிதத் திரளாகிய சமூகத்துக்கும் பிணிகள் நேரிடும். தனி மனிதனைப் பீடிக்கும் வியாதி அவன் உடலைக் கெடுத்து, உள்ளத்தின் பாங்கையும் கெடுத்துவிடும். உள்ளத்தைக் கெடுக்காமல், உடலோடு நின்றுவிட்டால் பெரிய புண்ணியந்தான். சமூகத்தைப் பீடிக்கும் நோய் சமூகக் கட்டைக் குலைப்பதோடு அமையாது; சமூகத்தின் அறப் போக்கினையே மாற்றிவிடவும் கூடும். இந்த உண்மையை விளங்கிக்கொள்ளத் தமிழ் நாட்டின் நிலையே போதுமானது.

தமிழ் நாட்டின் தென்பாலுள்ள ஓர் ஊருக்குச் செல்ல நேர்ந்தது. அங்கே, ஒரு பெரிய ஊர்வலம் வருவதைக் கண்டேன். கதருடையும், மூவர்ணக் கொடியும் ஆதிக்கம் பெற்ற அந்த ஊர்வலத்தின் எக்காளமாகத் தேசியப் பாடல்கள் முன்னே பராக்குக் கூறின. முழக்கொலிகள் தேசியப் பாடல்களைப் பின்பற்றின. ஆவல் தூண்ட, நான் திண்ணையில் வந்து நின்றேன். "வந்தே மாதரம்", "அல்லாஹு அக்பர்", "நமதே ராஜ்யம்—விடவே மாட்டோம்" என்ற முழக்கங்கள் வானைப் பிளந்தன. நம்முடைய ராஜ்யத்தை நம்மிடமிருந்து எவனோ பிடுங்குகிறதாகவும், நாம் அதை விட்டுவிடுவதா என்ற மனப்பான்மையில் "விடவே மாட்டோம்" என்று முழங்குவதாகவும் ஊர்வலத்தைக் கண்டவர்கள் எண்ணக்கூடும். 'காந்திக்கு ஜே' போட்டார்கள்; நேருவையே சென்று எட்டும்படியாக "ஜவாஹர்லால் நேருவுக்கு ஜே!!!" எனத் தங்கள் ஒலிவலிமையைக் காட்டினார்கள். "ஜேய் ஹிந்த்", "நேத்தாஜிக்கு ஜே"— இந்த இரண்டு முழக்கங்கள் ஊர்வல முழக்கங்களில் தலைமை தாங்கின என்பதைச் சொல்லவே வேண்டாம். பரீட்சை எழுதுகிற மாணவன் பிள்ளையார் சுழியை விட்டு, 'ஸ்ரீராம ஜய'த்தையும் விட்டு, 'ஜேய் ஹிந்த்' எழுதுகிற காலம் இது. அப்படியானால், 'கதர் ஊர்வல'த்தில் விட்டுவிடுவார்களா? எல்லாம் சரி; கடைசியாகத்தான் அணுக் குண்டு வெடித்தது; சாயமும் வெளுத்தது. 'மகாத்மா காந்திகீ ஜே'— 'ஜவாஹர்லால் நேருகீ ஜே'— 'நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸுகீ ஜே'—'குயில் மார்க் பீடிகீ ஜே'! எப்படி விஷயம்? கதரும், மூவர்ணக் கொடியும், ஜேய் ஹிந்த் முழக்கமும், நேத்தாஜியின் தியாகமும் பயன்படும் வகையைப் பார்த்தீர்களா?

இன்னொரு காட்சி: பேசும் படக் கொட்டகை. தமிழ்ப் படம் பார்ப்பவர்களின் தலை வலி சிறிதேனும் குறையட்டும் என்ற கருணை நோக்கத்தால், இடைவேளை (இன்ட்டர்வல்) வைத்திருக்கிறார்கள். அது முடிந்த பிறகு விளம்பர 'ஸ்லைடு'கள். விளம்பரக் காலமாகிய இந்த நாளிலும் எனக்கென்னவோ விளம்பரப் படங்களைப் பார்க்க நாட்டம் கிடையாது. மனம் என்னென்னவோ கருத்துக்களை அலசி, ஆழம் பார்த்துக்கொண்

> "உயர்ந்த கோட்பாடுகள் கயமையின் பலிகளாக மாறிவிடாமலிருக்க நோய்க்கு மருந்து வேண்டும்."

டிருந்தது. இருந்தாற்போல விருந்து 'தரை மகா ஜனங்க'ளின் கை தட்டும் பேரொலியால் நிமிர்ந்தேன். நேத்தாஜியின் படம் ஒன்று திரையில் அழகாகக் காட்சி யளித்தது. நேத்தாஜியையே கண்டது போன்ற உற்சாகம் மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது. ஆனல், ஏன் அந்தப் படத்தை அப்போது காட்ட வேண்டும்? ஒன்று மில்லை; ஒரு பீடி விளம்பரம்தான். அடுத்து ஒரு படம்—காந்தியடிகளின் படம். மீண்டும் கரவொலி. அடிகளின் படத்தை ஒட்டி, அழகாகத் தீட்டி யிருந்த சொல் தொடர் இதுதான்: "பீடிகளுக்கு அரசன்"-!!

விளம்பர மனப்பான்மையை நோவதா? மக்களின் அறியாமையை நினைந்து நோவதா?

தேசிய உணர்ச்சி மக்கள் உள்ளங்களில் பொங்கிப் பொலிந்து, பூரணமாய் விளங்கும் காலம் இது. மக்களின் நல்லுணர்ச்சியைக் கேவலம் சுய நலத்துக்காகப் பயன்படுத்த முனைகிறது வியாபார உலகம். விளம்பரத்தின் பின்னணியாக அமைந்துள்ள நஞ்சு பொதுமக்களுக்குத்தெரிய வில்லை. ஒரே உற்சாகம்; கண் மூடிக் கருத் திழக்கும் எழுச்சி. இதைப் பயன்படுத்துகிறன் சமூகப் புல்லுருவியாகிய முதலாளி.

இதுதான் நம் சமூகத்தை இன்று பிணித்துள்ள நோய். உயர்ந்த கோட்பாடுகளின் சின்னங்களாக விளங்கும் தலைவர்களையும், முழக்கங்களையும் கீழ்த் தரமான மனப்பான்மை கையாளுகிறது. இது, சமூகத்தின் அமைப்பை மட்டுமல்ல, அறப் போக்கினையே மாற்றிவிடும்.

உயர்ந்த கோட்பாடுகள் கயமையின் பலிகளாக மாறிவிடாமலிருக்க நோய்க்கு மருந்துவேண்டும். மருந்து என்ன? விழிப்புத்தான். வேறென்று மில்லை. எச்சரிக்கையோடு, ஜாக்கிரதையாக வாழ வேண்டும்.

*

'கோட்டு' ரகஸ்யம்

சென்னைச் சர்க்கார்க் காரியாலயத்தைச் சேர்ந்த ஒரு குமாஸ்தா ஒரு நாள் பல வர்ணத் துணித் துண்டுகள் ஒட்டுப்போட்ட 'கோட்'டைப் போட்டுக்கொண்டு வந்தார். அவர் அதுமாதிரி வந்ததின் காரணத்தை விசாரித்தபோது, துணிக் கிராக்கியினல் அப்படிச் செய்ததாகக் கூறினர்.

தையல்காரர்கள் இது மாதிரி 'கோட்டு'த் தைக்க நூறு ரூபாயாவது கேட்பார்களாதலால், அந்த உத்தியோகஸ்தர் இந்தக் 'கோட்'டைக் குடுகுடுப்பாண்டிகளிட மிருந்தே வாங்கி வந்திருக்க வேண்டுமென்று சிலர் நினைக்கிறர்கள்.

—மாலதி

நடைமுறை இலக்கியம்

இலக்கியம் என்பது மன அம்சத்தின் எழுச்சிதானே? நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், சினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம் இத்தியாதி நபர்களை நாள் தவருமல் பார்த்துக் கொண் டிருந்துவிட்டு, இவர்களது வாழ்வுக்கு இட மளிக்காமல், காதல் கத்திரிக்காய் பண்ணிக்கொண் டிருப்பது போன்ற, அனுபவத்துக்கு நேர் முரணன விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடை முறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை.

—புதுமைப்பித்தன் (முல்லை)

சிங்காரி

●

க. சு. அறிவோன்

எனது மதிப்புரைகள், சிலவேளை, கடுமையான கண்டனங்களாக அமைந்துவிடுகின்றனவாம்: தமிழைப் பற்றி இங்கிலீஷில் எழுதிய ஒரு தமிழர் இப்படிச் சாடை பேசியிருக்கிறார். எடுத்ததற்கெல்லாம் மேற்குத் திசையிலேயே கண்ணை உருட்டி விழித்து மேற்கோள் காட்டுகிற வழக்கம் தன்னம்பிக்கையைத் தேய்த்தழித்துவிடும். இப்படிச் சாடை பேசுகிற ஆசாமிகள், வியர்சனத் தொழிலின் உண்மை நிலையையும், தமிழ்ப் பெரு மக்களாகிய வாசகர்களின் உண்மை நிலையையும் உணரும்படிச் செய்ய இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

விமர்சகனின் தொழில், விமர்சனத்துக்கு எடுத்துக்கொண்ட நூலில் பொதிந்துள்ள சக்திகளை எடை போட்டு மதிப்பிட்டுச் சொல்லுவது, ஆசிரியருக்கும் வாசகருக்கும் இடையே நெருங்கிய உறவு ஏற்பட உதவுவது, கூடியவரை நடுவு நிலை பிறழாமல் ஆலோசனை கூறுவது. நபர்க் காழ்ப்புக்கோ, கூலிக்கு மாரடிக்கும தரகு மன நிலைக்கோ இரையாகிறவன் உண்மை விமர்சகனல்ல. தனக்கு உண்மை என்று பட்டதைச் சொல்ல அஞ்சுகிறவன் விமர்சனம் எழுதத் தேவையில்லை. அனுவசியமான பொல்லாங்கு விளையும் என்று தெரிந்தாலொழிய, அவன் உண்மையை மறைக்கவோ, மழுப்பவோ தேவையில்லை.

ஆசிரியர்களை ஆக்குவதும், அழிப்பதும் விமர்சகனுடைய வேலை யல்ல. அது, வாசகர்களுடைய சொந்த விவகாரம். மெய்யான திறமைசாலியை யாரும் அழித்துவிட முடியாது. போலியை யாரும் தூக்கிவிட முடியாது. தமிழ் வாசகர்களைச் 'சொல்' ஜாலங்களாலோ, 'சப்த' ஜாலங்களாலோ ஏமாற்றிவிட முடியாது. எனது மதிப்புரைகளைச் சரிபார்த்துக்கொள்ள உங்களுக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியும். எனது பொறுப்பை நான் துஷ்பிரயோகம் செய்தால், நீங்கள் என்னைச் சும்மா விட மாட்டீர்கள். அதனால், உங்களிடம் நான் நேரடியாகப் பேசிவருகிறேன்.

எனது விமர்சனப் போக்கு உங்களுக்குப் புதிதல்ல: ரா. நாராயண ஐயங்கார், நாரண துரைக்கண்ணன், சுப. நாராயணன், பி. வி. சுப்பிரமணியன், ரா. சு. கிருஷ்ணசாமி, மோ. ஸ்ரீ. செல்லம் முதலிய எத்தனையோ பேர் என் சமூகத்தவர். வ. ரா., 'புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் போன்றவர்கள் எனக்கு மூத்த வாரிசு. சு. வையாபுரிப் பிள்ளை, "டி. கே." சி. போன்றவர்கள் என் சுற்றத்தார். தி. ஜ. ர. என் சிற்றப்பா. மஞ்சேரி ஈஸ்வரன் என் அண்ணன். கம்பன், வ. வே. சு. ஐயர் போன்றவர்கள் எனக்கும் உங்களுக்கும் மூதாதையர்.

இப்படிப்பட்ட ஓர் ஏக குடும்பத்தில், பூசி மெழுகத் தேவை

சிங்காரி (சிறு கதைகள்): ஆசிரியர்: மஞ்சேரி. எஸ். ஈச்வரன். மொழிபெயர்ப்பு: தி. ஜ. ர. வெளியீட்டோர்: சக்தி காரியாலயம், சென்னை-14. க்ரௌன் 1×8. 148 பக்கம். விலை ரூ. 3.

யென்ன? தேவையில்லையல்லவா? —சரி:

மஞ்சேரி சுந்தரம் ஈஸ்வரன் மலையாளத்து யுவதியல்ல: அது, சமீப சில காலமாகத் தெரிந்துவிட்ட உண்மை. அவர் தமிழ் எழுத்தாளரல்ல: தெரிந்துகொள்ளுங்கள். அவர் கதாசிரியரல்ல: அதை, இங்கே தெரிவிக்கப்போகிறேன். அவர் தலை சிறந்த விமர்சகர்: அவருடைய "சக்தி" விமர்சனங்களைப் பார்த்திருக்கிறீர்கள். அவர், அதிமேதையான பிறவிக் கவிஞர்: உங்களுக்கு நன்றாய்த் தெரியும்.

இந்தக் கதைகளையும், ஆசிரியரையும் பற்றித் தமது முகவுரையில் தி. ஜ. ர. கூறுவனவற்றை முதலில் பார்ப்போம்:

> ஈச்வரனின் ஆங்கிலம், ஆங்கிலேயர் பாராட்டும் ஆங்கிலம். தாம் ஆங்கிலத்தில் எழுதிய கதையை, ஈச்வரன் என்னிடத்தில் ஒப்படைத்துவிட்டுத் தம் பாட்டுக்குப் போவதில்லை. என் பக்கத்திலேயே உட்கார்ந்து கொள்ளுவார். வரி வரியாக, வார்த்தை வார்த்தையாக, ஆங்கிலத்தில் தாம் இட்ட தமது உள்ள உணர்ச்சியும் கருத்தும் வேகமும் வர்ணமும் தமிழிலே வந்தாலன்றி, என்னை அடுத்த வாக்கியத்துக்குப் போக விடமாட்டார். தமிழ்ச் சொற்களும் வாக்கிய அமைதியுமே என்னுடையவை. ஆங்கில மூலத்தின் எதிரொலியை அவற்றிலே எழுப்பியவர் நண்பர் ஈச்வரன்தான். ஆகையால், உண்மையிலே மொழியைப் பெயர்த்த பொறுப்பு மட்டிலுமே என்னுடையது. கதைகளின் உருவப் பொறுப்பு, அவரையே சாரும்—

என்று தி. ஜ. ர. சொல்வதில் பாதி உண்மைதான் இருக்கிறது. ஆங்கிலப் புலவராகிய ஆசிரியருக்குத் தமிழிலும் ஒத்த புலமையிருக்குமென்று எதிர்பார்ப்பது நியாயமல்ல. தமிழ் உருவத்துக்கு அவரைப் பொறுப்பாக்கியதன் விளைவு நூல் நெடுகிலும் தெரிகிறது. "ஈச்வரனின் கதைகள்," சிறந்த கதாசிரியரும், பழுத்த ரசிகரும் ஆன தி. ஜ. ர.-வுக்குக் "கணுவில்லாத கரும்"பாக அமைந்தது அவருக்கு ஆத்மலாபமாகவும், நமக்கு நயக்குறையாகவும் முடிந்திருக்கிறது. "நமது நித்திய வாழ்க்கையில் நிகழும் மிகச் சாதாரணமான நிகழ்ச்சிகள்தான் அநேகமாய் அவருடைய பல சிறு கதைகளிலும் முக்கிய சம்பவங்களாய் அமைந்திருக்கின்றன." ஈஸ்வரன்—

> சிறு சிறு நுணுக்கங்களையும் விவரிக்கிறார். அபூர்வமாய் நகாசு செய்கிறார்... மனிதப் பண்பையும் ஆசாபாசங்களையும் உள்ளது உள்ளபடி பிரதிபலிக்கும் பாத்திரங்களைச் சிருஷ்டிக்கிறார்...கதைகளின் இடையிடையே அற்புதமான வர்ணனைகளைக் கொட்டிவிடுகிறார்... பிரபஞ்சத்தை அவர் பார்க்கும் பார்வை அனைத்திலும் ஒளி நிழல் வர்ண சப்த ஜாலங்களாகவே பார்க்கிறாரோ என்றுதான் தோன்றுகிறது ... ஈச்வரன் ஏராளமான கதைகள் எழுதியிருக்கிறார்... ஒன்றின் துளிச் சாயையும் மற்றொன்றில் இல்லை. எத்தனையோ பாத்திரங்களைச் சிருஷ்டித்திருக்கிறார்;...ஒருவர்போல் மற்றொருவர் இல்லை. எத்தனையோ காட்சிகளை வர்ணித்திருக்கிறார்; ஒவ்வொன்றும் நவ நவமான வர்ணனை... இத்தனையிலும் ஒரே ஒரு சுருதி ஊடுருவிப் பாய்கிறது. அதிலே ஒரு சோகத் தொனி இருக்கிறது. அது வாழ்வைச் சீர்குலைக்கும் சோகமல்ல. அன்பை எழுப்பும் சோகம்; ஏக்கத்திலே இன்பம் காட்டும் சோகம்; மனித உள்ளம் கம்பீரமாய் நிமிர்ந்து நின்று நன்மையிலே தீரமும் தீமையிலே அச்சமும் கொண்டு மேலெழச் செய்யும் சோகம். அந்தச் சோகத்தின் சிகரமே ஆனந்தம்.

அற்புதமான விமர்சனம்! ஆனால், பூரணமானதல்ல. ஏன்? அடிப்படையைத் தொட மறந்துவிட்டார். ஈஸ்வரன், தமது கதைகளைத் தத்துவ உண்மைகளாகக் கருத்தரித்து, கவிதைகளாக உயிர்ப்பூட்டி, கலை ஓவியங்களாக வடித்தெடுத்து, வாழ்க்கை விமர்

சனங்களாகச் சமைக்கிறார். ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு கவிதையின் விரிவடைந்த வசன காவியம். ஆங்கில மூலம் அப்படித்தான் இருக்கிறது. ஈஸ்வரனின் ஆங்கிலம், பெரும் பான்மை, கவிதை நடையில் அமைந்தது. ஆழ்ந்த தத்துவப் பேருண்மை நெடுகிலும் சரடு ஓடும். கலை மெருகு, சில சமயம், நம்முடைய கண் கூசும்படி எதிரொளி சொரியும். புதிதாய்ப் படிக்கிறவன், முதலில் திகைத்துப் போவான்; பிறகு ரசிப்பான். மீண்டும் மீண்டும் படிக்கிறவன், பழகப் பழக, புதிது புதிதான நயங்களைக் கண்டு, அப்படியே சொக்கிப் போய்விடுவான்.

இந்தப் பண்புகளும், விளை பயன்களும் சிறப்பாகக் கவிதை ஒன்றுக்கே உரித்தானவை. ஈஸ்வரனைப் போல் இங்கிலீஷ் எழுதுகிற சாக்கில், சில தமிழர்கள் ஷேக்ஸ்பியரைத் தந்த இங்கிலீஷை—தமிழை அமுக்கப் பார்த்த இங்கிலீஷை—ச் சந்து சந்தாகப் பிய்த்துப் பிடுங்கி, உருத் தெரியாமல் அடித்து, புதிய இங்கிலீஷ் ஒன்றைச் சுயமாகச் சிருஷ்டித்து வருகிறார்கள்: சந்தோஷம்! ஈஸ்வரனின் இங்கிலீஷ் நயமானது—கடினமானதல்ல. கருத்துக்கள் நயமானவை—கடினமானவை யல்ல. சரக்கு நயமானது — கரடு முரடானதல்ல. ஈஸ்வரனுக்குச் சிறப்புத் தரும் இந்த நயங்கள்தான் 'இவரை'த் தமிழ்ப்படுத்துகிறவனுக்கு அரும்பாடாய் வந்து விடிகின்றன.

மூலத்தின் நயம் பூராவும் தமிழில் வரவில்லையே என்ற ஏக்கம், என்னையும் அறியாமல், என் மனத்தில் பொடித்தது. அவ்வளவுதான் செய்ய முடியுமோ, என்று சமாதானம் செய்து கொள்ளப் பார்த்தேன். முடியவில்லை. திண்டாடினேன். மூலத்தையும், மொழிபெயர்ப்பையும் வரி வரியாய் ஒப்பிட்டுப் பார்த்தேன்:

அட, தென்னாடு போற்றும் சிவனே! என்ன ஆச்சரியம்! இதைவிடப் பெரிய ஆச்சரியத்தைச் சகோதரத் தொழிலாளி ஒருவரின் இது பற்றிய விமர்சனத்தில் கண்டேன்:

> சில சமயங்களில் நான் எண்ணுவது உண்டு, மஞ்சேரி ஈஸ்வரன் தமிழிலேயே இந்தக் கதைகளை எழுதி யிருந்தால் இப்படித் தான் எழுதியிருப்பாரா? இந்த நடையை, இந்த ரகமான வாக்கிய அமைப்புகளை, சில இடங்களில் வர்ணனையோ, கவித்துவமோ இல்லாத சாதாரண முறையைத் தான் கையாண்டிருப்பாரா என்று நினைப்பது உண்டு....மஞ்சேரி ஈஸ்வரன் ஆங்கிலத்தில் நினைத்து தி. ஜ. ர, தமிழில் எழுதி 'சக்தி'யில் பிரசுரமான கதைகள் எல்லாம் படிக்க இனிப்பன—

என்று கூறும் (கிராம ஊழியன்) ரா. சு. கிருஷ்ணசாமிக்கு இந்த எண்ணம் ஏன் உதித்தது? இதைத் துணிந்து சொல்ல அவரால் எப்படி முடிந்தது? மடக்கிக் கேட்டால், மழுப்பாமல் பதில் சொல்ல அவருக்கு ஆதாரம் உண்டா? சிங்காரி என்ற முதல் கதையில், ஒரே ஒரு பகுதியை மட்டும் மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்:

> சகோதரப் பிரயாணிகள் என்னைப்பற்றி என்ன நினைத்தார்களோ! அதைக் குறித்து நான் லட்சியமே செய்யவில்லை. வாய் விட்டு அவர்கள் பொழிந்த வசவு மாரியின் வேகம் தணிந்து, அவர்கள் பாட்டுக்குத் தங்களுக்குத் தாங்களே 'கசமிச' என்று ஏதோ முறு முறுத்துக் கொண்டார்கள். நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். சுற்றிலும் காணும் பொருள்களைக் குறித்துச் சிந்திக்கும்போது—தன்னை மறந்து புற உலகக் காட்சியைப் பார்க்கும்போது — தன்

னுடைய இருப்பிடம் மிகக் குறுகினாலென்ன, விரிந்திருந்தால்தான் என்ன; ஒருவனுக்கு எத்தகைய ஆனந்தம் உண்டாகிறது! ஒவ்வொரு சிறு சிந்தனையும், நம் மனதைப் புதுமைப்படுத்தி, அதற்கு ஜீவன் கொடுக்கிறது; நம் உள்ளத்தினுள்ளே உறையும் கருணைக்கு மணங் கொடுக்கிறது; சிருஷ்டியிலே பிரகாசமாயுள்ள களிப்பையெல்லாம்—வாழ்க்கையின் நானாவகையான அழகுகளையெல்லாம்—நமக்கு வெளிப்படுத்துகிறது. புற உலகைப் பற்றிச் சிந்தனை செய்வதே பேரின்பம்; ஆனால், ஆத்மத் தியானமோ துன்பமாகும். ஏனெனில், ஆத்மத் தியானம் செய்பவன், மனோதத்துவச் சுழலிலே அடியோடு புகலடைந்து விடுகிறான்; தன் மனதைத் தானே சேதித்துக் கொள்ளுகிறான்; எல்லையற்ற அகண்டத்தைவிட்டு தன்னிலே தானே முடங்கிவிடுகிறான்; சாந்தியும் ஒளியும் இலங்கும் பெருந் தடாகத்தை விட்டு, இருள் சூழ்ந்து சேறும் சகதியுமான ஒரு சிறு குழியிலே மூழ்கி விடுகிறான்!

—தி. ஜ. ர.

Indifferent to what my fellow passengers thought of me—their open curses had subsided into hisses of soliloquy—I reflected. Ah, what joy it is to reflect on things one sees around, to take an objective view of the world, though the sphere in which one finds oneself be attenuated or expansive! Every little reflection freshens and vitalizes the mind, adds a dash of civet to our innate sympathy, revealing to our gaze the gayer side of creation, the kaleidoscope of life. To reflect is to be happy, but to introspect is painful. For introspection demands a surrender to the metaphysical, a dissection of oneself; to turn the flow from the universal to the individual, to make a dark puddle of a calm, luminous lagoon.

—Isvaran

சகோதரப் பிரயாணிகள் என்னைப் பற்றி என்ன நினைத்தார்களோ! அதைப்பற்றி நான் சட்டை செய்யவில்லை. அவர்களுடைய வெளிப்படையான திட்டுக்கள் வரவரத் தணிந்துபோய், இப்போது, அவர்கள் தமக்குத் தாமே தனிமையில் 'தஸ் புஸ்' என்று சீறிக்கொண்டிருந்தார்கள். நான் சிந்தனையில் ஆழ்ந்தேன்: நம்மைச் சூழ்ந்துள்ள பொருள்களைப் பார்க்கிறோம்; அவற்றைப் பற்றிச் சிந்திக்கிறோம்; உலகத்தில் நாமும் சம்பந்தப்பட்டவர்கள்தான் என்பதை மறந்துவிட்டு, அதைத் தனியாக நிறுத்திவைத்துப் பார்வையிடுகிறோம்: ஆகா! அப்போது என்ன ஆனந்தம் உண்டாகிவிடுகிறது! இந்த மன நிலையில், நாம் அமர்ந்திருக்கும் இடம் நொய்யதாயிருந்தால் என்ன, விரிந்துபோயிருந்தால்தான் என்ன! எல்லாம் ஒன்றுதானே! ஒவ்வொரு சின்னச் சிறு சிந்தனையும் மனத்தைப் புதுப்பித்து, அதற்கு உயிர்ப்புப் பலம் தருகிறது; நமது உள்ளார்ந்த பரிவுப் பண்புக்கு மணம் கூட்டித் தருகிறது. அப்போது, படைப்பிலுள்ள களிப்பு நிரம்பிய பகுதி—வாழ்க்கையின் வர்ண ஜாலம்—நமது பார்வைக் கோணத்தில் விகசிதமாகிறது. சிந்திப்பது இன்பகரமானது. அகச் சோதனை செய்வதோ, வேதனை தருவது. ஏன்? அகச் சோதனை செய்வதானால், நமது உடம்புக்குப் புறம்பான ஒரு சக்தியினிடம் நாம் நம்மை ஒப்படைத்தாக வேண்டும்; நம்மை நாமே கூறுகூறாகச் சேதித்துக் கொண்டாக வேண்டும்; பிரபஞ்சத்தினிடமிருந்து கிளம்பும் பிரவாகத்தை நபரின் பக்கமாய்த் திருப்பியாகவேண்டும்; சலனமற்று, ஒளி மினுங்குகிற ஒரு சிறுகுடாக்கடலைச் சேறு குழம்பிய ஓர் இருண்ட குட்டையாக ஆக்கிவிட வேண்டும்.

—அறிவோன்

நான் தந்திருக்கும் புது மொழிபெயர்ப்புப் பரிபூரணமானதல்ல. ஆனால், பிழைபட்டதல்ல. பிழையுமில்லாமல், பரிபூரண எழிலும் ஒளிரும் வண்ணம் செய்வது மகா சிரமம். அதற்கு, இரண்டு மொழியிலும் ஒத்த திறமை வேண்டும். ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயாவின் இங்கிலீஷ் கூண்டுக் கிளியை அதைவிட நயமான தமிழ்க் கிளியாக

ஆக்கித் தந்த தி.ஜ.ர. இப்படி அடி சறுக்கி யிருப்பதற்குக் காரணம் ஏதோ அவசர நிர்ப்பந்தமாய்த்தா னிருக்க வேண்டும். அட்டைப் பொம்மையும் அப்படித்தான் சொல்லுகிறது.

கதைகளைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. மிகக் கடுமையான சட்டங்களை வைத்துக் கொண்டு விமர்சனம் செய்வது ஆபத்து. ஆனால், அந்த ஆபத்தையும் சமாளிக்கக்கூடிய மிக உயர்ந்த சரக்கு இது என்பது இப்போது தெரிந்துவிட்டது. பல பிரபலஸ்தர்களுடைய கதையும், மொழிபெயர்ப்பும் விமர்சனச் சட்டத்தின் பெயரைக் கேட்டாலே 'பூமிக்கு அடியில்' போய்விடும். இதை இவ்வளவு சுத்தமாகவும், அழகாகவும் பதிப்பித்திருப்பது பாராட்டத்தக்கது.

✿

உருப்படாதவன்!

எழுத்தாளன் : நீங்கள் ஆசிரிய ரல்லவா? மறந்து போனேனே!

பேர் ஆசிரியர் : என்னடா?

எழுத் : இல்லே, ஆசிரியராக இருப்பவருக்கு எழுதத் தெரிந்திருக்க வேண்டும் என்பது விதியில்லையே? பத்திரிகாசிரியர்கள் பலர் பேராசிரியர்கள்! அதாவது, பேர் ஆசிரியர்கள்—பெயருக்காக ஆசிரியர்கள்.

பே. ஆசி : அதிகப் பிரசங்கி! எழுத்தாளன்னு நினைக்க ஆரம்பித்ததுமே தலைக் கனம் வந்துடுத்து பாருமேன்! ஹ! அதுதான் உருப்படாமப் போறதுக்கு வழி. டே, சுப்பு! நான் சொல்றதைக் கேளு—உருப்படியாப் பிழைக்கணும்னா! வேறே எதாவது வேலை பாரு. பத்திரிகைத் தொழில் இருக்கே, அது மனிதனை நாசமாப் போகும்படி செய்யற வேலை.

எழுத் : ஏனோ?

பே. ஆசி : பத்திரிகை வேலை அல்பாயுஸானது.

எழுத் : மனிதனே அப்படித்தானே?

பே. ஆசி : கேளுடா, முட்டாள்! பத்திரிகை வேலை நிரந்தரமானதல்ல. ஆனால், ஒருவனை நிரந்தரமாக உருப்படாமல் அடிப்பது. பத்திரிகாலயத்திலே வேலை பார்த்தவன் வேறே எங்கேயும் ஒழுங்கா வேலை பார்க்க மாட்டான். அவன்தான் தன்னையே பிரம்மா—கடவுளுக்கும் அப்பன்—என்று நினைக்க ஆரம்பித்துவிடுகிறானே! அப்பறம், குமாஸ்தா வேலை அல்லது கடைக் கணக்கு வேலை இப்படி ஏதாவது அவனாலே பார்க்க முடியுமா? அதனாலே வாழ்க்கையே பாழாகும். வேலை பார்க்கும் போதும் பட்டினி, கஷ்டம். வேலையை விட்ட பிறகும் கஷ்டம். எழுத்தாளனுக்குச் செத்த பிறகு மட்டும்தானா நிதி திரட்டணும்! இருக்கிற போதே அவன் பிச்சை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுதே!

—செ. மூ. (கவிக்குயில் மலர்)

அவருக்குத் தெரியும்......!

ஏழையா யிருப்பதில் இன்னொரு நன்மையும் இருக்கிறது—வைத்தியர், மற்றவர்களைவிட உங்களைச் சீக்கிரமாகக் குணப்படுத்திவிடுவார்.

—கின் ஹப்பர்டு

சிந்தனை

•

பூரா

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" —சிந்தனைக்கும். சிந்தனையாவது, உள்ளுதல், ஊடுருவிப் பிழைகளைப் பிளந்து உண்மையடைதல்—இராமவாளிபோல். "நான் சிந்திக்கிறேன், எனவே சீவிக்கிறேன்" என்று சொன்ன [ரெனி தெஸ்கார்த்தே, தலை சிறந்த பிரஞ்சுத் தத்துவ விசாரகர், 1596—1650.—ஆசிரியர், சக்தி.] தத்துவ ஞானி சிந்தனையின் சீர்மையை உலகமறிய எடுத்துக் காட்டினர். ஆகையால், சிந்தனைக்கும் வந்தனை செய்வோம்.

சிந்தனை எவ் வழிப் போகும்? அது, தன் ஒளியை நம்பும்; பின்பற்றும்; பிற ஒளியை இகழாது; பிற ஒளியில் மயங்காது, தங்காது; நேர் நோக்கி, முடிந்தால் சீர்தூக்கிப் பின் ஏற்றபடி பயன்படுத்திக்கொள்ளும். தன் இல்லத்துச் சாளரங்களைப் புறத்தே வீசும் பல்வேறு சிந்தனைப் பண்புகளுக்கு என்றும் திறந்தே வைத்துக்கொள்ளும்; எனினும், தன்னொளி பிறழாது, பிழையாது, குன்ருது; — ஏன்? எங்கணும் கதிர் வீசி, புயலிலும், மழையிலும், காரிருளிலும், உறுதுணையாய் ஒளிக் கை கொண்டு நாவாய்களின் இடுக்கண்களையும் கலங்கரை விளக்கம் போன்ருகும். "விளக்கு, தான் ஒளி பெறும் பொழுதே மற்றெங்கும் ஒளி கொடுப்பதுபோல், ஆத்மீய விஷயங்களிலும், பெறுவதும் கொடுப்பதும் ஒன்றே" என்ருர் தாகூர்...சீரிய சிந்தனை இத் தன்மையது: ஊருக் கடுத்த மணற்கேணி; குன்றின் மீது குன்ருச் சுடர்த் தீ; கலங்கரை விளக்கம்; இராம வாளி.

இராம வாளி இராமனுக்கே உரியது. எனினும், சிற்றுளிகளும் குத்து விளக்குகளும் புழுங்கி மழுங்கலாகாது; துருப்பெறலாகாது. சிந்தனை: ஆயுதம், நிதி; விதியையும் தவிர்ப்பதென்பர். இதைப் பயன்படுத்தி, நமக்கும் பிறர்க்கும் பேறு பெறுதல் மனிதன் கடமையாகும். இதைப் பயன்படுத்தியே இருள், இன்மை, இரத்தம், இவற்றைக் கடந்து, மன்பதை தன் லட்சியங்களைக் கிட்ட முடியும்.

சிந்தனை இருளடைப்புப் பெரும் பிழையும், தீங்குமாகும். கும்பலுக்கும், ரோஷத்திற்கும், "சுலோகன்" களுக்கும் பயந்து, தன் ஆயுதத்தைக் கைவிடுதல் கோழைத்தனம் மட்டு மின்றிப் பெரும் தீங்கு மாகும்—மாட்டுக்குப் பயந்து, வேலி பயிரிடம் சரணடைவதுபோல். அச்சமின்மை சிந்தனையின் சிறப்பு மட்டு மன்று; சீவ நிலையே அது. அச்சம் தவிர்தல் சிந்தனையின் உச்சம்; மற்றது எச்சம். சிந்தனை வழிகாட்டி; புதரையும் முள்ளையும் ஒதுக்கி, கற்களையும் குழிகளையும் தவிர்த்து, பாதையை ஆக்கிப் பின்னேரை இட்டுப் போகும் தகுதி வாய்ந்தது. எனின், வழிகாட்டி தன் ஆயுதத்தையும் விளக்கையும் கை விடல் தீங்கன்றி மற்று யாது?

ஆனல், சிந்தா மந்தமாய்ப் போகும் மந்தைக்குச் சிந்தனை

சிந்தனை, "தனக்கு இடுக்கண் செய்யும் மந்தைக்கு உருசாமல, பத்துத் திசையிலும் பாய்ந்து நிறையும் பண்பு பெற்றது."



டால்டாவில் வறுத்த பூரிகள் வாயில் கரைகின்றன—மேலும் ஊக்கத்தையும் அளிக்கின்றன!

டால்டா உங்கள் தின்பண்டங்களை ருசியுள்ளதாகச் செய்யும் வஸ்துமட்டுமன்று—அதுவே ஊக்கமளிக்கும் உணவு! எளிதில் ஜீரணமாகக் கூடியதும், விடமின் நிரம்பியதுமான இச் சமையல் செய்ய உதவும் சாதனத்தின் அறிந்த சத்தையளிக்கும் திறமையைக்கொண்டு உங்கள் தினந்தோறுமுள்ள சாப்பாட்டைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒரு நன்கொடை—அது அவர் தயாரிக்கும் சாதாரண தின்பண்டங்களுக்கு விசேஷச் சுவையையளிப்பதோடு அவர் குடும்பத்திற்கு அதிகப்படியான ஊக்கத்தையும் கொடுக்கிறது.

★ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டாலடா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. **A462** P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திறகு நான்கு அணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.

HVM. 48-50 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

சோறைல்

படை, சொறி, சிரங்கு, முகப்பரு, சேற்றுப் புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்மரோகங்களுக்கும் சிறந்த களிம்பு

க்யூரோசால்

இருமல், காசம், க்ஷயம் ஈளை, இளைப்பு முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

BHARATH DRUG HOUSE, MADURA

டிஸ்டிரிபியூடர்கள்

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்

மருந்து ஷாப் : : மதுரை

"சக்தி" "மங்கை" "கதைக் கடல்" "தியாகி"

மற்றும் இதர "சக்தி", "தியாகி", வெளியீடுகளுக்கும் **1—12—1946** முதல் சிங்கப்பூர், மலாயா பூராவுக்கும் சோல் ஏஜெண்டாக நாம் நியமனம் பெற்றிருக்கிறோம் என்பதை அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

விபரங்களுக்கு எழுதுங்கள்

ஹிந்துஸ்தான் நியூஸ் ஏஜென்சி

1, வெல்மென் தெரு

ரவாங் : : மலாயா

இடும் வேலி—காட்டும் வழி—வெறுப்பாகவே இருக்கலாம். ஏன்! வெறுப்பினுலும், பயத்தினுலும், சிந்தனை வழிப் போகும் அஜபாலன் மீது இந்த மந்தை பாய்வதும் இயல்புதான். புதியன புகுத்தலையும், பழையன கழித்தலையும் மந்தையானது வெறுத்தலும் இறுத்தலும் அதன் தன்மையே: சாக்ரதீசுக்கு விடம் கொடுத்தது; இயேசுவைச் சிலுவையி லேற்றிற்று. சீரிய, கூரிய சிந்தனை—வைரம்போல் கதிர் வீசும் சிந்தனை—வைரம் பாய்ந்தது. தனக்கு இடுக்கண் செய்யும் மந்தைக்கு அஞ்சாமல், பத்துத் திசையிலும் பாய்ந்து நிறையும் பண்பு பெற்றது.

இடுக்கணுக்கு இடுக்கண் இழைக்கும் சிந்தனையில் உதிக்கும் உயரிய, நிறை பயனளிக்கும், பண்புடை நினைவுகளை, பாவங்களை, லட்சியங்களை, எவ் வகையிலும் சேதனம் செய்தல் பிழையே. ''ஒரு மனிதனைக் கொல்வது பகுத்தறிவு பெற்றதொரு ஜீவனைக் கொல்வதாகும்; ஆனல், அரியதொரு புத்தகத்தை அழித்தல் அறிவையே அழிப்பதாகும்'' என்ருர் ஆங்கில மில்ட்டன். அறிவையும் சிந்தனையையும் சேதித்தல் பெரும் தீங்காகும்.—சிறு நலன்களை உடனே பெற விரும்பி, பரந்த, சிறந்த சிந்தனைகளை மங்க வைத்துப் பங்கம் செய்தால், அதன் பயன் பெரு நலன்களை இழத்தலேயாம். சிறு நலன்கள் பெரு நலன்களின் விரோதிகளென்பர். தனது சிந்தனைச் சிகரத்திற்குக் கூட்டம்—சமூகம்—ஏறி வராது என்று கருதி, கூட்டம் தங்கித் தேங்கியிருக்கும் பள்ளத் தாக்கிற்குச் சிந்தனை தாழலாகாது. சிந்தனை உண்மை பிறழாத காந்தம்—துருவ நட்சத்திரம். துருவத்தைச் சுற்றியே பூமி சுழல வேண்டும்: என்றும் இதுவே நியதி.

✱

புகைப்பட விஷயம்

'சக்தி'யின் படப் பகுதி உங்கள்—ஆண்கள், பெண்கள், குழந்தைகள்—அனைவருடைய பற்றுதலையும் பெற்றுவருவது காணப் பெரு மகிழ்ச்சி. உங்களுடைய அமோகமான ஆதரவு எங்கள் மீது பட மாரி பொழிந்து, படங்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் எங்களை மூச்சுத் திணற வைத்திருக்கிறது. புகைப்பட நிபுணர் ஒருவருடைய ஒத்தாசையைக் கொண்டு சமாளித்து வருகிறோம்.

போன இதழில் வெளியான படங்களில், 'பிரத்தியட்ச மனித'னை அனுப்பிய கும்பகோணம் ஸ்ரீ ஆர். கிருஷ்ணன் முதற் பரிசையும், 'பச்சைப் புள்ளை'க் குறத்தியை அனுப்பிய திருவானைக்காவல் ஸ்ரீ எஸ். ராஜாராவ் இரண்டாம் பரிசையும் பெறுகிறார்கள். அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள்.

புகைப்படப் பரிசுக்குப் புகைப்படங்கள் மட்டுமே அனுப்பலாம். மற்றவை தேவை யில்லை; திருப்பி யனுப்ப முடியாது. வேண்டாத படங்களைத் திரும்பப் பெறப் போதிய தபால் தலை அனுப்ப வேண்டும். படம் ஒவ்வொன்றின் பின்புறத்திலும், அனுப்பியவரின் பெயரையும், முழு விலாசத்தையும், காட்சி விவரத்தையும் குறிக்க வேண்டும். தேவையில்லாத படங்கள் சில நாளில் திருப்பி யனுப்பப் பெறும். பிரசுரமாகும் பரிசு பெருத படங்கள் உசிதம் போல் சன்மானம் பெறும். படங்களின் அளவு 'சக்தி'ப் பக்கத்தில் முக்கால் பகுதிக்கு மேல் போகாமலிருப்பது நல்லது.

— ஆசிரியர், சக்தி

மார்க்ஸீயப் பொருளாதாரம்

●

ரா. ஹாலாஸ்யநாதன்

VI

தொழிலாளர்களை முதலாளிகள் எப்படிச் சுரண்டுகிறார்கள்? கோபாலன் என்ற பெயருள்ள முதலாளியிடம் ஏராளமாகப் பணம் இருக்கிறது. யந்திரங்களையும், பஞ்சும் (மூலப் பொருள்களையும்), விறகு, நிலக்கரி, எண்ணெய் முதலிய பொருள்களையும் வாங்குகிறார். பின்னர், தொழிலாளர்களை வாடகைக்கு அமர்த்துவதன் மூலமாக, தேவையான உழைப்புச் சக்தியையும் வாங்குகிறார். தொழிற்சாலை ஓடுகிறது. நிலக்கரி, எண்ணெய் முதலியன எரிந்து மறைந்து போகின்றன. யந்திரம் இயங்குகிறது. தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். பஞ்சு, நூலாகவோ, துணியாகவோ மாறுகிறது. பின்னர் துணியையும், நூலையும் விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு மேலும் இதே மாதிரியாகத் துணியையும், நூலையும் உற்பத்தி செய்கிறார்.

இவ்வாறு உற்பத்தி செய்த பொருளின் மதிப்பென்ன? உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு பணம் செலவாயிற்றோ, அது தான் பொருள்களின் மதிப்பு—அதாவது, யந்திரங்கள் உபயோகிக்கப்பட்ட பொழுது தேய்ந்ததின் மதிப்பும், நிலக்கரி எண்ணெய் முதலியன எவ்வளவு செலவாயிற்றோ அதன் மதிப்பும், மூலப் பொருளின் மதிப்பும், 3,000 மணி நேரம் உழைப்பு என்று வைத்துக் கொள்வோம். இத்துடன் பண்டங்களுக்கு மேலும் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதாவது, தொழிலாளர்கள் வேலை செய்தார்கள் அல்லவா? அவர்களின் உழைப்பு நேரமும் பண்டத்தின் மதிப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. 20 தொழிலாளர்கள் ஒரு நாளைக்குப் பத்து மணி நேரம் விகிதம் 5 நாட்கள் வேலை செய்தார்கள் என்று வைத்துக் கொண்டால், 1,000 மணி நேர உழைப்பு அந்தப் பண்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது, முதலாளியின் பண்டத்தின் மதிப்பு 3,000+1,000+4,000 மணி நேர உழைப்பு.

ஒரு மணி நேர உழைப்பின் மதிப்பு ஒரு ரூபாய் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது மொத்த மதிப்பு ரூ. 4,000.

வாஸ்தவத்தில் முதலாளி எவ்வளவு செலவழித்திருக்கிறார்? யந்திரம் தேய்ந்ததற்கும், மூலப் பொருளுக்கும், நிலக்கரி, எண்ணெய் முதலியனவற்றிற்கும் முழு மதிப்பு—3,000 மணி நேர வேலை, அல்லது 3,000 ரூபாயை —செலவழித்திருக்கிறார். ஆனால், உற்பத்தி செய்த பண்டத்திற்கு 1,000 மணி நேர உழைப்பை, அல்லது 1,000 ரூபாய் மதிப்பைத் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தி கொடுத்திருக்கிறதே, அந்த 1,000 ரூபாயை அப்படியே 20 தொழிலாளர்களுக்கு கொடுத்துவிட்டாரா? இல்லை. முதலாளித்துவச் சுரண்டலின் ரகசியம் இதில்தான் பொதிந்து கிடக்

வேலை வாங்குகிறவன் வேலைக்காரன் கூலியைச் சுரண்டும் விதம் இந்தக் கட்டுரையில் விவரிக்கப்பெறுகிறது. அடுத்த கட்டுரை முதலாளித்வப் பித்தலாட்டக் கூலி முறையைப் பற்றிப் பேசும்.

கிறது. "சிதம்பர ரகசிய"மாக இருந்ததை கார்ல் மார்க்ஸ்தான் வெட்ட வெளிச்சமாக்கினர்.

20 தொழிலாளர்களுக்கு முதலாளி 500 ரூபாய் கொடுக்கிருர். முதலாளியின் கொள் முதல் 3,500 ரூபாய்தான். ஆனல், பண்டத்தை 4,000 ரூபாய்க்கு விற்கிருர். 500 ரூபாய் முதலாளிக்குக் கிடைக்கிறது.

இந்த உதரணத்தி லிருந்து முதலாளிக்கு எப்படி லாபம் கிடைக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய 500 ரூபாயை முதலாளிகள் ஏப்ப மிடுகிருர்கள். அதாவது, ஒரு நாளில் 10 மணி நேரம் வேலே செய்யும் தொழிலாளி, 5 மணி நேர உழைப்புக்குச் சமமான கூலியைப் பெறுகிருன். மிஞ்சிய 5 மணி நேர வேலேக்குக் கூலி கிடைக்கவில்லே. அதாவது, அதிகமாகச் சம்பள மின்றி உழைக்கிருன். இந்த "அதிக உழைப்"பை முதலாளிகள் சுரண்டுகிருர்கள். கூலி கொடுக்கப்படாத இந்த உழைப்புதான் முதலாளிகளின் லாபத்திற்கு உறைவிடம்.

ஆண்டான் அடிமைச் சமூகத்திலும், நிலப்பிரபுத்துவச் சமூகத்திலும் சுரண்டுதல்—அதிக உழைப்பைக் கபளீகரம் செய்தல்—இருந்தது. ஆனல், அதற்கு ஓர் எல்லே இருந்தது. ஏனெனில், ஆண்டான் அல்லது நிலப் பிரபுக்கள் தங்களுடைய சுய தேவைகளேத் திருப்தி செய்து கொள்வதற்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவு அதிக உழைப்பைத்தான் அடிமைகளேயும், பண்ணே அடிமைகளேயும் சுரண்டி வந்தார்கள். ஆனல், முதலாளித்துவச் சகத்தில் அதிக உழைப்பைச் சுரண்ட வேண்டுமென்ற தாகத்திற்கு எல்லேயே கிடையாது. மேன்மேலும் சுரண்டி வரும் பணம், மேன்மேலும் சுரண்டுவதற்கு உபயோகப் படுகிறது.

ஆகவே, முதலாளித்துவ முறையை அடியோடு ஒழித்தால் தான், தொழிலாளர்களேச் சுரண்டி வருவதற்கும் முற்றிப் புள்ளி வைக்கப்படும்.

முதலாளித்துவச் சுரண்டலே இன்னும் சிறிது ஆராய்ந்து பார்க்கலாம்.

யந்திரங்கள், மூலப் பொருள்கள், நிலக்கரி, எண்ணெய் முதலியவைகளுக்காகச் செலவழிக்கப் படும் பணம், பண்டங்களுக்கு மாற்றப்படுகிறது. இவைகளின் மதிப்பின் அளவில் மாற்ற மேற்படுவதில்லே. ஆகவே, யந்திரம், கட்டடம், மூலப் பொருள்கள், நிலக்கரி எண்ணெய் முதலியவைகளே "ஸ்திரமான மூலதனம்" என்று அழைக்கிருேம்.

இத்துடன் பண்டங்களுக்கு மற்ருெரு முக்கியமான அம்சமும்—தொழிலாளர்களின் உழைப்பும்—மதிப்பைக் கொடுக்கிறது என்று முன்பு கூறினேம். அதாவது, 100 தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாள் 10 மணி நேரம் வேலே செய்தால், ஒரு மணி நேர உழைப்பின் மதிப்பு 8 அணு என்று வைத்துக் கொண்டால், அவர்கள் உற்பத்தி செய்த பண்டத்திற்கு மொத்தம் 500 ரூபாய் மதிப்பைப் புதிதாக உண்டு பண்ணுகிருர்கள். ஆனல், 100 தொழிலாளர்களுக்கு 250 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, 250 ரூபாயைக் கொடுத்து, தொழிலாளர்களே வேலே செய்யும்படி செய்து, தாம் போட்ட 250 ரூபாய்

மூலதனத்தை 500 ரூபாயாகப் பெருக்குகிறார்கள் முதலாளிகள். 250 ரூபாய் மூலதனம் இப்பொழுது 500 ரூபாயாகப் பெருகியிருப்பதால், தொழிலாளருக்குக் கூலியாகக் கொடுக்கப்படும் மூலதனத்தை "மாறும் மூலதனம்" என்று அழைக்கிறோம்.

ஸ்திர மூலதனம், மாறும் மூலதனம் என்று மூலதனத்தைப் பிரிப்பதன் மூலமாக அதிக மதிப்பைத் தெளிவாகக் கண்டு பிடிக்கலாம்.

அதிக மதிப்பை அதிகமாகச் சுரண்ட முதலாளிகள் ஆசைப்படுகிறார்கள். இந்த நோக்கத்தை எப்படிப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள்?

100 தொழிலாளர்கள் மூலமாக 250 ரூபாய் கிடைத்தால், உற்பத்தியை விஸ்தரித்தால், 20 தொழிலாளர்கள் மூலம் 500 ரூபாய் அதிக மதிப்புக் கிடைக்கும்.

ஆனால், உற்பத்தியை விஸ்தரிப்பதற்கு முதலாளியிடம் ஏராளமாக மூலதனம் இருக்க வேண்டும். இவ்வாறு போதிய மூலதனம் இல்லாதவர்கள் எப்படி அதிக மதிப்பை அதிகரிக்கிறார்கள்?

ஒரு தொழிலாளி பத்து மணி நேரம் வேலை செய்தால் 5 மணி நேர வேலைக்கு கூலி கொடுக்கப்படுகிறது. இதைத் தேவையான வேலை நேரம் என்று அழைக்கிறோம். மிஞ்சிய 5 மணி நேர வேலைக்குக் கூலி கொடுக்கப்படவில்லை. இதைக் கூலி கொடுக்கப்படாத, அல்லது அதிக நேர வேலை என்று அழைக்கிறோம்.

இந்த நிலைமையில், தொழிலாளியை மேலும் சுரண்ட வேண்டுமானால் வேலை நேரத்தை மேலும் நீட்டுவதன் மூலமாக—12 மணி நேரமாக நீட்டுவதன் மூலமாக—அதிக மதிப்பை அதிகரிக்கலாம். அதாவது 7 மணி நேர உழைப்பை இப்பொழுது சுரண்டி யிருக்கிறார்கள்.

மற்றொரு முறையும் இருக்கிறது. சம்பளத்தைக் குறைப்பதன் மூலமாகவும் அதிக மதிப்பை அதிகரிக்கிறார்கள். மொத்தம் 10 மணி நேரம் வேலை செய்தால் 4 மணி நேரத்திற்கு மாத்திரம் கூலி கொடுக்கிறார்கள்.

திடீரென இவ்வாறு கூலியைக் குறைத்தால் தொழிலாளர்கள் வாளா விருப்பார்களா? எனவே, அவசியமான வேலை நேரத்தைக் குறைக்க மற்றொரு முறையைக் கையாள்கிறார்கள். அதாவது, யந்திரங்களின் உற்பத்தி சக்தியைப் பெருக்குகிறார்கள். ஒரு மணி நேரத்தில் 10 கஜம் துணியை உற்பத்தி செய்த யந்திரம் இப்பொழுது ஒரு மணி நேரத்தில் 20 கஜம் துணியை உற்பத்தி செய்கிறது. முன்பு 10 மணி நேரம் வேலை செய்து 10 கஜம் துணியை உற்பத்தி செய்த தொழிலாளி இப்பொழுது 5 மணி நேரம் வேலை செய்தால் அதே அளவு துணியை உற்பத்தி செய்யலாம். ஆனால், இப்பொழுது 20 கஜம் துணியை உற்பத்தி செய்கிறான். இதற்காகக் கூலி கூட்டிக் கொடுக்கப்பட்டதா? இல்லை. எனவே, யந்திரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமாகவும் முதலாளிகள் சுரண்டுதலை விஸ்தரிக்கிறார்கள். யந்திரத் தொழிற்சாலைகளில் குறைந்த கூலிக்குக் குழந்தைகளையும், பெண்களையும் வேலைக்கு அமர்த்துவதன் மூலமாகவும் அதிக மதிப்பை அதிகரிக்கிறார்கள்.

நவீன யந்திரங்களை வேகமாக ஓட வைத்து, தொழிலாளர்களை மூச்சு விடுவதற்குக்கூட அவகாசம் கொடுக்காமல், உழைப்பை அதிகரிக்கச் செய்கிறது. உற்பத்தியைப் பெருக்கும் பழக்கம் இப்பொழுது பல நாடுகளில் பரவியிருக்கிறது. ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டுள்ள தொழிலாளர்கள், வேலை நேரத்தைக் குறைப்பதற்காகப் போராடி வருவதால் இந்த முறை கையாளப்பட்டு வருகிறது. இது தொழிலாளர்களின் உடல் நலத்தைப் பெரிதும் பாதிக்கிறது.

இவ்வாறு தொழிலாளர்கள் முதலாளித்துவச் சமூகத்தில் பெரிதும் கஷ்டப் படுகிறார்கள். முதலாளிகளும், அவர்களது கூலிப் பண்டிதர்களும் "தொழிலாளர்களுக்குப் பூரண சுதந்தரம், பூரண சமத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விருப்ப மிருந்தால் வேலை செய்யலாம். இல்லையானால் வேலை செய்ய வேண்டாம். யார் நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள்?" என்று வரட்டு வாதம் பேசுகிறார்கள். விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரிடம் உற்பத்தி சாதனங்கள் குவிந்து கிடக்கின்றன. ஏராளமான மூலதன மில்லாமல் எந்தத் தொழிலாளியாவது தொழிற்சாலையை ஏற்படுத்த முடியுமா? ஏதேனும் முதலாளி யிடம் உழைப்புச் சக்தியை விற்றுத்தான் ஜீவனம் நடத்த வேண்டும்.

"ரோமாபுரியிலுள்ள அடிமைகளைத் தளைகளிட்டு நசுக்கி வந்தார்கள். ஆனால், கூலிக்கு உழைக்கும் தொழிலாளர்களை கண்ணுக்குத் தெரியாத கயிறுகளால் முதலாளிகள் கட்டிப் போடுகிறார்கள். இந்த முதலாளி, அல்லது அந்த முதலாளியிடம் மாறிமாறி வேலைசெய்யும் உரிமையைக் கொடுத்திருப்பதனால், சுதந்தர மளித்திருப்பதாகப் பறைசாற்றுகிறார்கள்........." என்று கார்ல்மார்க்ஸ் கூறுகிறார்.

ஆனால், வாஸ்தவத்தில், ஒரு முதலாளிக்கு அடிமையாக இருந்ததை விட்டுவிட்டு, மற்றொரு முதலாளிக்கு அடிமையாக இருக்கலாம் என்ற சுதந்தரம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

✲

அநியாயத் தீவாளி

பள்ளிக்கு வண்டியில் சென்றுதி ரும்புறேன்
பக்ஷணம் வேண்டியே ஊட்டுகிறார்
கொள்ளிபோல் வெய்யிலில் வாடிடும் பாஞ்சாலிக்
குட்டியைக் கூழின்றி வாட்டுகிறார்!

என்னைவ ளர்த்திடும் அன்னையும் தந்தையும்
என்மனங் கோணவி டுவதில்லை
என்னைப்போல் பெண்ணந்தப் பாஞ்சாலி சோறின்றி
ஏங்குவ தேனோபு ரியவில்லை!

என்னுடன் ஆடிடும் தோழியை எண்ணினால்
என்மனம் புண்ணாகிப் போகுதம்மா
அன்னமில் லாதவள் ஆவிது டிக்கையில்
அநியாயத் தீவாளி ஏதுக்கம்மா?

— சுரபி (பாப்பா தீபாவளி மலர்)

நாகரிகச் சந்தையில்

ரா. கி. பார்த்தசாரதி

உள்ளே கலியாணக் கொம்மாளம். நாயனத்தின் ஊளையும் தவுலின் இடியும் காதைத் துளைத்தன. அந்தப் பேய்ச் சத்தத்தையும் அடக்கிக்கொண்டு மேலே கிளம்பியது விவரமற்ற வைதிகக் கோஷம். பெண்களின் கலகலப்பு இவ் வனைத்தையும் கிழித்துக்கொண்டு ஹோமப் புகையோடு கலந்தது. குழந்தைகளின் குற்றமற்ற சிரிப்பும் குதூகலமும் இவற்றை யெல்லாம் அழுத்த முயன்றுகொண் டிருந்தன. அப்பப்பா! இந்தச் சத்தச் சிடுக்கிற்கு முடிவே கிடையாதோ!

அந்தப் பேரிரைச்சல் அதன் சிருஷ்டிகர்த்தர்களுக்கும், அச் சிருஷ்டியின் மேன்மையில் ஈடுபட்டுத் தம்மையே மறந்திருந்தவர்களுக்கும் பேரானந்தத்தைக் கொடுத்திருக்கலாம். ஆனால், அது, வெளியே, கலியாண வீட்டிற்கு அடுத்த வீட்டுக் குறட்டின் ஓர் மூலையில் உட்கார்ந்திருந்த ஒருவனுக்கு நிச்சயமாக ஆனந்தத்தைத் தரவில்லை; அதற்கு மாறாகத் தாங்க முடியாத வேதனையைத் தந்துகொண் டிருந்தது. நாழிகை ஆக ஆக அவனுடைய வேதனை அதிகரித்துக்கொண்டே வந்தது. ஹூம்! அவன் ஒரு மனித மாடுதானே! மற்ற மனிதர்களைப்போல் சுகத்தை யனுபவிக்கும் உள்ளம் அவனிடம் இருந்தால்தானே!

அவனுடைய வேதனைக்குக் காரண மில்லாமலு மில்லை. அவனுக்கு அந்தக்கலியாணத்தில்நேரடியான சம்பந்தம் ஒன்று மில்லை. பிள்ளை வீட்டாருக்கோ பெண் வீட்டாருக்கோ அவன் ஒரு தூர பந்துகூட அல்ல. அத்தகைய பந்தம் இருந்தாலாவது, அவன் உடல் சம்பந்தத்தை உத்தேசித்து உள்ள ஒருமையைக் கஷ்டப்பட்டேனும் வரவழைத்துக்கொண் டிருப்பான். அம் மாதிரி நிர்ப்பந்தமும் அவனுக்குக் கிடையாது. எனவே, அவனுடைய துயரம் தேங்கிய இதயமும் இந்த அர்த்தமில்லாத எக்களிப்பில் எதற்காக லயிக்க வேண்டும்?—லயித்து மகிழ்ச்சி யடைய வேண்டும்?

அவன் 'காஸ் லைட்' தூக்கும் கூலிக்காரன். வெளியே அவன் தூக்கிக்கொண்டு செல்ல வேண்டிய விளக்கு "ஜகஜ்ஜோதி"யாகப் பிரகாசித்துக்கொண் டிருந்தது. ஆனால், உள்ளே—அவன் இதயத்தின் உள்ளே—சிறிது வெளிச்சங்கூட இல்லை; ஒரே இருட்டு—மையிருட்டு.

தற்பெருமையிலும், தன்னலத்திலுமே சுழன்றுகொண் டிருந்த நாகரிகம் 'காஸ் லைட்' வெளிச்சத்தைவிட அதிகமாக விருந்தது. அது அவனுடைய கண்ணைக் கூச வைத்தது. என்றாலும் அவன் கண்களை மூடிக்கொண்டு விடவில்லை; அதற்கு மாறாகக் கண்களை அகலத் திறந்து பார்த்துக்கொண் டிருந்தான்—நாகரிகச் சந்தையின் 'ஓட்டை உடைசல்' கடையில் கருணை என்ற வஸ்து மாதிரிக்காகவேனும் கிடைக்குமா என்று.

முதலாளித்துவ உலகில் மூட்டை தூக்குகிறவன் யார் என்று உங்களுக்குத் தெரியும். நாகரிகச் சந்தையில் பொதி சுமக்கும் கழுதை யார் தெரியுமா? ஏழை அழுத கண்ணீரில் முக்கி எடுத்த இந்தக் கட்டுரையில்......

ஊஹூம்! கிடைக்கவே கிடைக்காது என்பது அவனுக்குச் சிறிது நேரத்திலேயே தெரிந்துவிட்டது. அப்படியானால், வேறு எங்காகிலும் கருணைப் பிச்சையைத் தேடிச் செல்லக் கூடாதோ? எப்படிச் செல்லுவது? அவன்தான் அடுத்த நாள் விடியற்காலை வரை அந்த வீட்டையும் 'லைட்'டையும் விட்டு வேறெங்கும் செல்ல முடியாதே!

எனவே, அடுத்த வீட்டுக் குறட்டைத் தனது இருப்பிடமாகக்கொண்டு, எஞ்சியுள்ள நேரத்தையும் தான் கண்ட உண்மையை—போலி மனிதனின் பொல்லாத நாகரிகத்திற்கும் உண்மைமனிதனின் உயர்ந்த கருணைக்கும் ஸ்நானப்ராப்திகூடக் கிடையாது என்ற உண்மையை—அசை போட்டுக்கொண்டிருந்தான். இதில் என்ன சந்தோஷமோ? அவ்வளவு நேரமாகியும், கருணைக்குக் காத்துக் கிடக்கும் முயற்சியை அவன் தளர்த்தவில்லை. என்ன பேராசை! கடைசி நிமிஷத்தில் கருணை ஒருகால் தவறிக் கீழே விழுந்து உடைந்து சிதறினால், பொறுக்கலாமல்லவா என்பது அவன் சபலம். எனவே, மனந் தளரும் நிலைமையை ஒத்திப் போட்டுக்கொண்டே வந்தான்.

நான்கு மணியின் இடைவிடாத அப்பியாசத்தினாலோ என்னவோ, இயந்திரம்போல் வீட்டுக்குள்ளே போகிறவர்களையும் வாசலுக்கு வருகிறவர்களையும் "அம்மா! சோறு கிடையாதா?" என்று கேட்டுக்கொண்டேயிருந்தான். தங்களைத் தவிர்த்து மற்ற எல்லோரையும் திரணமாக மதித்துச் சென்றுகொண்டிருந்த அவர்கள் இந்த 'அர்த்தமற்ற' வார்த்தைத் தொடருக்கு ஏன் செவி சாய்க்க வேண்டும், அர்த்தம் கற்பிக்கவேண்டும்?

அவர்களெல்லோரும் பேசாமலேயே அவரவர் காரியத்தைக் கவனித்துக்கொண்டு செல்வது அவனுக்கு முதலில் வருத்தத்தைக் கொடுத்தது. பைத்தியக்காரன்! தன் வார்த்தைகளுக்கு அர்த்தமிருப்பதாக நினைத்தது அவனுடைய மடமையல்லவா? சிறிது நேரத்தில் அவர்களுடைய மௌனம் அல்லது அலட்சியமான, ஏளனமான பதில் அவனுக்குத் தமாஷாகக்கூடப் போய்விட்டது. இப்போது, வருகிறவர் போகிறவர்களைச் "சோறு கிடையாதா சாமி?" என்று அவனால் சிரிக்காமல் கேட்க முடியவில்லை. இரண்டொரு சமயங்களில், அவனே கேள்வியைக் கேட்டுவிட்டுச் "சோறு கிடையாதுங்களே!" என்று, தானே பதிலும் சொல்லிக்கொண்டான். கேள்வியும் பதிலும் அவனுக்கு ஒரு 'தமாஷா'வாகப் போய்விட்டன. என்ன விந்தை! சந்தர்ப்பங்களின் சக்தியால் மனித உணர்ச்சி எவ்வளவு விபரீதமாக மாறுகிறது! சோக உணர்ச்சி ஹாஸ்ய ரசமாக அல்லவா மாறிவிட்டது! இதைக் கண்டுதான் பெரியவர்கள் 'துன்பத்தின் எல்லைக் கோட்டில் இன்பம் ஆரம்பிக்கிறது' என்று வேதாந்தம் பேசினார்களோ!

பாவம்! உள்ளே அரித்துக்கொண்டிருந்த பசி—வயிற்றைக் கிள்ளும் பசி—இப்பொழுது அவன் உதட்டு வரம்பில் சிரிப்பாகப் பரிணமித்துவிட்டது. ஆனால், இந்த இன்பத்திற்குக் காரணம் அளவற்ற துன்பம் என்பதை யார் ஊகித்தறிந்தார்கள்? ஊகித்திருந்தாலும், ஏதேனும் செய்திருப்பார்களா? சந்தேகமே

கிடையாது; ஒருநாளும் ஒன்றும் செய்திருக்கமாட்டார்கள்.

'தமாஷா'க்கூடத்தான் எத்தனைநேரம் நிலைத்து நிற்கும்? அவன் உடலையும் உள்ளத்தையும் 'சந்தர்ப்ப மறியாத' பசியல்லவா பிய்த்துக்கொண் டிருக்கிறது! பழைய நியதியில்—வேதாந்தரீதியில்—இப்பொழுது இன்பம் மீண்டும் துன்பத்தின் எல்லைக் கோட்டில் காலை வைத்துவிட்டது போலும்! அதட்டியவுடன் சிறிது சிரித்துவிட்டுப் பிறகு பெரிதாக அழ ஆரம்பிக்கும் குழந்தையைப் போல், அவன் சிரித்துவிட்டு இப்பொழுது அழ ஆரம்பித்து விட்டான். குழந்தை யுள்ளத்தைப் போல், அவன் இதயமும் நிஷ்களங்கமாக இருந்ததுதான் இதற்குக் காரணமோ?

இதுவரையில் எல்லோரும் அவர்களுக்கே புரியாத காரியங்களுக்காக வெளியே வந்து கொண்டிருந்தனர். இப்பொழுதோ, சாப்பிட்டுவிட்டுக் கையலம்பக் கூட்டம் கூட்டமாக வெளியே வந்துகொண் டிருந்தனர். இதைப் பார்த்துவிட்டு அந்தப்'பொருமைக்காரன்' எதற்குக் கருக வேண்டும்? மேலும், சாப்பாட்டின் உயர்வைப் பற்றிப் புகழ்ந்துகொண் டிருந்த அவர்களை இந்தக் 'கூலிக்காரன்' எதற்காக வெறுப்புடன் பார்க்க வேண்டும்? "அயோக்கியன்; பிறர் வாழச் சகியாதகிராதகன்". இல்லாவிட்டால், 'கலியாண வீடு' கௌரவப்பட்ட மனுஷ்யர்கள், என்றெல்லாம் பார்க்காமல்கூட "என்ன சாமி! சோறு எப்போ சாமி?" என்று சற்று அதட்டிய வண்ணம் தன் வேதனையை இப்படியா பிழிந்து கொட்டுவான்?

ஆகா! சம்பந்திகளுக்கு இது எத்தகைய அவமானம்! அவர்களுள் ஒரு மகானுபாவர் 'பளீர்' என்று அவனை அறைய ஓங்கிய கையுடன் ஓடி வந்தார். ஆனால், அவனைத் தொட்டு அடிக்கலாமா என்ற சந்தேகம் சட்டென்று அவர் மனத்தில் தோன்றவே, 'யாருடா கழுதை! சத்தம் கித்தம் போட்டாப் பொளந்து தள்ளிடுவேன்' என்று கைகளின் துடிப்பை நாக்கு நுனிக்கு மாற்றினார். அவனைத் தொட்டு அடிக்க முடிய வில்லையே என்று அவர் மனம் ஏங்கியது.

அவனும் ஏங்கினான். ஆனால், அந்த ஏக்கத்தோடு ஒருவிதச் சந்தோஷமும் அவனுக்கு ஏற்பட்டது. "யாருடா கழுதை?" என்று இப்பொழுதேனு மொருவர், அவனை ஒரு பிராணியாகக் கருதி அவனுடைய பிறப்பு வரலாற்றின் ஒரு பகுதியைக் கேட்க விரும்புகிருரே! 'மள மள' வென்று, கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், 'கழுதை யார்?' என்பதைத் தெரிவித்தான்.

"என்ன சாமி! நான்தான் லைட் தூக்கறவனுங்க. எம்மா நாழி யாக்காத்துக் கெடக்கேன், ஒரு வாய் சோறு இல்லீங்களா?"

'ஹூம்! இவ்வளவு அகம்பாவமா 'லைட்' தூக்குகிற மனிதப் பதருக்கு?' என்று வீட்டு எஜமானருக்குத் தோன்றியது நியாயந்தானே! "போடா கழுதை! சோறு கீறு ஒண்ணும் கிடையாது. லைட் தூக்கறத்துக்குத் தான் காசு வாங்கறியே. அப்புறம் சோறு வேறயா? இனிமே கத்தினப் பிச்சுடுவேன்" என்று சீறிவிட்டு, 'அது கெடக்குக் கழுதை' என்று சம்பந்தியை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். அப்பா! எப்படிப்பட்ட

உங்கள் விருப்பத்திற்கேற்ற
நேர்த்தியான பர்னிச்சர்களுக்கு

ரென் கம்பெனியே



ரென் பென்னட் அண்ட் கம்பெனி
(இந்தியா) லிமிடெட்

பர்னிச்சர்கள் தயாரிப்பவர்கள்

34, மவுண்ட் ரோடு - சென்னை

சக்தி சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு

அடுத்து, மார்கழி (ஜனவரி) மாதத்தில் வெளிவரவேண்டிய 'சக்தி' இதழ் பொங்கலன்று பொங்கல் மலராக அதிகப் பக்கங்களுடன்—அழகிய படங்களுடன் உங்களுக்குக் கிடைக்கும்.

சக்தி காரியாலயம்



For the Delightfully Refreshing Soap

KERALA SOAP INSTITUTE, CALICUT

FAS-193

கேரளா சோப் இன்ஸ்டிட்யூ

கள்ளிக்கோட்டை

அவமானத்திலிருந்து சம்பந்தியைக் காப்பாற்றிவிட்டார்! ஆமாம், அந்த 'லேட்'காரனைக் காப்பாற்றுவது யார்? ஏன், கடவுளில்லையா, என்ன?

சாப்பாட்டிற்குப் பிறகு, எல்லோரும் அடுத்த முக்கியமான வேலையைக் கவனிக்க உள்ளே சென்றுவிட்டனர். இனி, உண்ட களைப்புத் தீர நிம்மதியாகத் தூங்க வேண்டாமா? சிறிது நேரத்திற்குப் பின், ஒருவர் கூட வெளியே வரவில்லை. வீட்டினரின் குறட்டைச் சத்தம்தான் வெளியே வந்தது.

எச்சில் இலைகளைக்கூட அவர்கள் வாசலில் போடவில்லை. இதை நினைக்க 'லேட்'காரனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆத்திரப்படுவதற்குத் தனக்கு—ஒரு மனிதக் கழுதைக்கு—உரிமையுண்டா என்று அவனுடைய பசி வேதனை நிறைந்த நீச உள்ளம் நினைத்துப் பார்க்கவில்லை.

'அட, கடவுளே!' என்று முனகிக்கொண்டு, திரும்பித் தன்னுடைய குறட்டிற்கு வந்து உட்கார்ந்துகொண்டான். அவன் பக்கத்தில் ஒரு சொறி நாயும் வந்து படுத்துக்கொண்டது—அவனுக்குத் துணைபோல. 'சனியனே!' என்று அதைத் திட்டினான். அந்தச் 'சனியன்' அன்று அவன் கண்ணில் பட்டிராவிட்டால், அன்று அவனுக்கு ஒரு வேளைச் சோறேனும் கிடைத்திருக்கு மல்லவா?

அன்று காலை முதற்கொண்டு அதுவரையில் நடந்த சம்பவம் முழுவதும் அவன் அகக் கண் முன் தோன்றியது. பழைய சம்பவங்களைப் பின்னோக்கும் 'சினிமா'ப் படத்தைப் போல் பார்க்கும் சக்தி, பிரிந்த காதலர்களுடையவும், சிதைந்த கலைஞர்களுடையவும் உள்ளத்திற்குத்தான் உண்டோ? ஏன், இவன் இதயம் மட்டும் உடையவில்லையா? சிதையவில்லையா! வெடிக்கவில்லையா!! சிதறவில்லையா!!!

ஜாதியிலும், தொழிலிலும் உயர் சமூகம் தீண்டாத அந்தப் பிச்சைக்காரன், அன்று காலை, நடையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். இரண்டு நாட்களாகப் பட்டினி. தன்னுடைய இழி நிலையைப் பற்பல விதங்களால், பற்பல வார்த்தைகளால் பசியின் கொடுமை யறியாத புண்ணிய புருஷர்களுக்கு எடுத்துக் கூறிக்கொண்டிருந்தான். ஆனால், அவனுடைய 'சுய சரித'த்தைக் கேட்க அவர்களுக்கு மனமோ, அவகாசமோ இல்லை.

அந்த நடைக்கு வருவதற்கு முன் அவன் செல்லாத தெரு இல்லை; போகாத வீடு இல்லை. 'பஸ் ஸ்டாண்'டிற்குச் சென்று பார்க்கலாமென்று அவன் நினைத்தபோதுதான் அவனுக்கு அந்தச் சொறி நாயின் நட்புக் கிடைத்தது. அது அவனுக்கு எல்லா விதத்திலும் தகுதியான துணை என்பதை அதனுடைய உருவம் நன்கு புலப்படுத்தியது. காயங்களின் நடுவே, சிறிது சிறிது தோல் தெரிந்தது. நான்கு கால்களுக்கும் நடுவே ஒரு பலகையை வைத்ததுபோல் வயிறு காணப்பட்டது. எலும்புகளைச் சேர்த்துத் தொடுத்ததுபோலிருந்த வால் அது நாய்தான் என்பதற்கு அத்தாட்சியாக இருந்தது. பிச்சைக்காரனைப் பட்டினிப்போட்டியில் புற முதுகு காட்டி ஓடும்படிச் செய்தது அது.

இந்தத் துணை வழிகாட்ட, பிச்சைக்காரன் அந்த நடைக்கு வந்தான்.

எல்லோரையும் பிச்சை கேட்டுக் கேட்டு அலுத்துப்போன அவனுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் ஏற்பட்டது. 'பஸ்'ஸில் அவசரமாக ஏறிய ஓர் உத்தியோகஸ்தர் தம் கையில் வைத்திருந்த 'ட்டிஃபன்' பொட்டணத்தைக் கீழே போட்டுவிட்டார். மறுபடியும் அதை இறங்கி எடுக்க அவர் யோசித்தபோது, 'பஸ்' நகர்ந்துவிட்டது. பிச்சைக்காரன் அதை எடுத்தான். அவன் நேர்மைதான் என்னே! அதையெடுத்து அவரிடம் கொடுக்க, அந்தத் தள்ளாத நிலையிலும், ஓடினன். "பிச்சைக்காரக் கழுதே! நீ தொட்டு நான் சாப்பிடறதோ!" என்று அவர் அதட்டியவுடன், அவன் நின்றுவிட்டான். இந்த அழகான பிரதியுபகாரத்தை நினைந்துகொண்டே தன்னுடைய இருப்பிடத்திற்கு வந்தான். பொட்டணத்தைச் சாவகாசமாகப் பிரித்தான். அதில் வெகு குறைவாகத் தயிர்ச் சாதமிருந்தது. ஆவலுடன் ஒரு கவளம் எடுத்து வாயிற் போட்டுக் கொள்ளச் சென்ருன்.

தன்னை மறந்து விட்டதற்காக அந்தச் சொறி நாய்க்குக் கடுமையான கோபம் வந்தது. மரியாதையாக அவனே ஒரு பிடி சாதம் தனக்கும் போடுவான் என்று எதிர்பார்த்த நாய், தானும் மரியாதை தவறி நடந்தால்தான் தனது காரியம் நிறைவேறும் என்ற முடிவிற்கு வந்துவிட்டது போலும். உடனே, ஆத்திரமாகத் தயிர்ச் சாதத்தில் வாய் வைத்துவிட்டது—அவன் அடித்தாலும் அடிக்கட்டுமென்று. ஆனல், அவன் அடிக்கவில்லை. நாயின் துடிப்பை அறிந்துகொள்ளும் மனித வுள்ளம் அவனிடமிருந்தது. 'அடடா! உன்னை மறந்திட்டேனே!' என்று அங்கலாய்த்தான். அவனுக்கு என்ன தோன்றிற்ருே! அப்படியே அவ்வளவு சாதத்தையும் அந்தச் சொறி நாய்க்கே வைத்துவிட்டான். அப்படிச் செய்ததை ஒரு பிராயச்சித்தமாக நினைத்தானே?

இப்பொழுது, இந்தக் கலியாணக் கூட்டத்தில், ஒவ்வொரு பெரியவரும் கடைப்பிடித்த புனிதமான கொள்கையை அவனும் கடைப்பிடித் திருந்தால், அன்று ஒரு வேளைச் சோற்ருேடு உயிரை உடலுடன் ஒட்டிக் கொண்டிருக்கலாமல்லவா?

கைக் கெட்டியதை உதறி விட்டு, வேறெதையோ எட்டிப் பிடிக்க முயன்ருன் அந்த அறிவிலி. தள்ளாடும் கால்களுடன் உணவு தேடி, எங்கெல்லாமோ அலைந்தான். எங்கும் கிடைக்கவில்லை. அந்த நாயும் அவனுடன் கூடவே சென்றுகொண்டிருந்தது.

உணவிற்குப் பதிலாக 'லைட்' தூக்கும் வேலை கிடைத்தது. கலியாண வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்றவுடன் அவன் நாக்கில் நீர் ஊறியது. பாதிப் பசி கூடப் பறந்துபோய்விட்டது. நாய்க்குச் செய்த தருமத்தின் பலன்தான் அது என்று மனமார நம்பினன். பேதை! பின்னல் வரப்போவது அவனுக்கு எவ்விதம் தெரியும்?

இரவுச் சாப்பாட்டைக் கலியாண வீட்டில் முடித்துக் கொண்டுவிடலாமென்றும், அடுத்த நாளைய வாழ்க்கையைக் கூலிப் பணத்தில் ஓட்டிவிடலாமென்றும் அவன் கனவு கண்

டான். அன்று மாலை, ஆறுவது மணியிலிருந்து பத்தாவது மணி வரையில், இந்தப் பாழும் ஆசைதான் சக்தியற்ற அவன் கால்களை ஊர்வலம் சென்ற தெருக்களிலெல்லாம் இடையருது சுழற்றியிருக்க வேண்டும்.

கடைசியில்?......

ஊர் ஓசை அடங்கிவிட்டது. அப்போதும் அவனுடைய கனவு நனவு வரம்பிற்கு வர வில்லை. அவனுடைய சிந்தனைக்கு அனுதாபம் தெரிவிப்பதுபோல், அந்தச் சொறி நாய் அவனை நக்கிக் கொடுத்தது. அவன் சிந்தனை கலைந்தது. பசியின் வேதனை மீண்டும் அவனைத் திருகியெடுக்க ஆரம்பித்தது.

குறட்டை விட்டு நகர்ந்து, வாசலில் நின்றபடியே கலியாண வீட்டின் உட்புறத்தை அவன் நோக்கினான். உயிரின் நடமாட்டமே அங்கில்லை. எல்லோரும் அன்றையப் பாபச் செயல்களுக்கு ஓய்வு கொடுத்துவிட்டுச் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தனர்—நாளைக்கு மறுபடியும் புதிய பாபங்கள் செய்வதற்குச் சக்திபெற. அவன் "ஹூம்! மவராசங்க தூங்கருங்க!" என்று வயிற்றெரிச்சலுடன் கூறிவிட்டு, திரும்பவும் குறட்டிற்கு வந்தான். "அவ்வளவுதானா, கடவுளே!" என்று கூறிக்கொண்டே, கீழே சாய்ந்தான். நாயும் பக்கத்தில் படுத்துக் கொண்டது.

அடுத்த நாள் காலை ஆறு மணியிருக்கும். முதல் நாளிரவு வைத்த விளக்குகளில் ஒன்றுமட்டும் மிகவும் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது; அவிந்து போகும் தருணம். அதை நடைபாதையிலிருந்து அப்புறப்படுத்தும்படி 'லைட்'காரனிடம் சொல்லக் கலியாண வீட்டு வேலைக்காரி அடுத்த வீட்டின் குறட்டிற்கு வந்தாள். அங்கு, அவனுடைய உயிர், அவன் தூக்கிச் செல்ல வேண்டிய விளக்கைப்போல், மங்கிக்கொண்டிருந்தது. எந்த விநாடியில் அவிந்துவிடுமோ? மூச்சு இழைந்துகொண்டிருந்தது. மூர்ச்சையாகிக் கிடந்த அவனை எழுப்புவதற்கு வீட்டிற்குள் பரபரப்புடன் சென்று, கிடைத்த ஆகாரத்தை அவசரமாகக் கொண்டு வந்தாள் அவள்.

ஆனால், அதுவரையில் அவன் தேடிச்சென்ற ஆகாரம் அவனைத் தேடிக்கொண்டு அவன் தலைமாட்டிற்கே வந்தும்கூட அவன் எழுந்திருக்க வில்லை. இனி அவன் எழுந்திருக்கவா போகிறான்? கொண்டுவந்த ஆகாரம் அவன் பக்கத்திலேயே கிடந்தது.

இதற்குள், கலியாண வீட்டிலிருந்து நான்கைந்து பேர் வாசலுக்கு வந்தனர்—வேடிக்கை பார்ப்பதற்கு. "அயோக்கியக் கழுதை! பாசாங்கு பண்றது!" என்று முதல் நாளிரவு அவனை அறைவதற்கு ஓடி வந்த புண்ணியாத்மா கூறியவுடன், கூட்டம் கலைந்தது.

அவன் பக்கத்தில் அந்தச் சொறி நாய் ஊளையிட்டுக்கொண்டிருந்தது. அது இறக்கப் போகும் அவனுக்காக வருந்தி யழுததா? அல்லது 'உயர்ந்த' மனிதர்களின் ஈர மற்ற சுபாவத்தை மாற்றி யமைக்குமாறு ஆண்டவனிடம் அழுது முறையிட்டதா?

*

பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை. —திருவள்ளுவர்

புத்தக உலகம்

இடைக்கால சர்க்காருக்கு ஜயப் பிரகாஷ் அறைகூவல்: ஆசிரியர்: 'விகர்ணன்'. வெளியிட்டோர்: பாப்பா பத்திரிகாலயம் (புத்தக இலாகா), ராயவரம், புதுக்கோட்டை சமஸ்தானம். கிரௌன் 1X8. 16 பக்கம். விலை 2 அணா.

இன்றையப் பிரச்னை. முக்கியமான விஷயம். ஆணித்தரமான அபிப்பிராயம். சரளமான தமிழ் நடை. நல்ல காகிதம். வரவேற்க வேண்டிய முயற்சி.

அறிஞர் மார்க்ஸ்: ஆசிரியர்: ஆர். ராமநாதன். வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை-14. கிரௌன் 1X8. 123 பக்கம். விலை ரூ. 1-8-0.

கார்ல் மார்க்ஸின் பொருளாதாரத் தத்துவங்களில் ஒரு சில கூறுகள் இன்று வழக்கிழந்து போய்விட்ட போதிலும், அவைகளின் அடிப்படைத் தள வரிசையும், கட்டுக்கோப்பும் இன்றும் நிலைகுலையாமலே இருந்து வந்து, பொருளியல் துறையில் நமக்குப் பெரும் வழிகாட்டியா யிருந்து வருகின்றன. மார்க்சின் விஞ்ஞான ரீதியான லோகாயதத் தத்துவ அடிப்படைகளில் இன்றையத் தேவைகளுக்கேற்புடையவற்றையும், மார்க்சின் வாழ்க்கை வரலாற்றையும் சென்னை மாகாணத் தொழிற் சங்கக் காங்கிரஸ் கூட்டுக் காரியதரிசியாகிய ஸ்ரீ ரா. ராமநாதன் மிக்க நயமாக விளக்கியுள்ளார். முதலாவது அகிலம் (முதலாவது சர்வ தேசத் தொழிலாளர் மாநாடு) குறித்த, அர்த்தம் நிறைந்த, படம் முகப்பு அட்டையில் திகழ்கிறது. மார்க்ஸ் குடும்பப் படங்கள் உள்ளே உள்ளன. அருமையான புத்தகம்.

—நாரா

வரப் பெற்றோம்:

திரு ஆக்கூர்த் திருப்பதிகங்கள்: ஆசிரியர்கள்: திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர்: 2. திருக்கடவூர் மயானத் திருப்பதிகங்கள்: ஆசிரியர்கள்: சம்பந்தர், அப்பர், சுந்தரர். 3. திருக்கடைமுடித் திருப்பதிகம்: ஆசிரியர்: சம்பந்தர். 4. திரு நள்ளாற்றுத் திருப்பதிகங்கள்: ஆசிரியர்கள்: சம்பந்தர், அப்பர், சுந்தரர். தருமபுர ஆதீன வெளியீடுகள். விலை தெரியவில்லை.

அதி மேதை!

தெருவில் இரண்டு பலகாரக் கடைகள். ஒன்று இப்படி விளம்பரம் செய்தது:

"உலகத்திலேயே உன்னதமான தயாரிப்பு."

மற்றது, "அகில அண்டங்களிலும் மேன்மையான தயாரிப்பு" என்று கூறிற்று.

இரண்டுக்கும் நடுவில், புதிதாக ஒருவர் கடை திறந்து, இப்படி விளம்பரப்படுத்தினர்:

"இந்த வட்டாரத்திலேயே தலை சிறந்த தயாரிப்பு."

—ஏஷியாட்டிக் டைஜெஸ்ட்

"நட்சத்திர பூஜை"

"சக்தி" விய ஆடி இதழில் வெளிவந்த மேற்படி கதை அதன் ஆசிரியர் "கொனஷ்டை" க்கு உரிமை என்று அறிகிறோம்.

—ஆசிரியர், சக்தி

யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 4-கோடி

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2-கோடி

ரிஸேர்வு நிதி ரூ. 17½-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

ஸ்ரீ. எம். ஏ. இஸ்பஹானி
(வைஸ்-சேர்மன்)

ஸ்ரீ. ரமன்லால் ஜி. ஸரய்யா
(வைஸ்-சேர்மன்)

எல்லாவிதமான பாங்கு அலுவல்
களும் நடத்தப்படுகின்றன

பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் இந்தியா
விலும் வெளிநாடுகளிலும் எல்லா
முக்கிய நகரங்களிலும் உள்ளன

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

சென்னை கிளைகள் :

310-311, லிங்க செட்டி தெருவு
கே. ஆர். கே. ஐயங்கார்
கிளை மானேஜர்

சௌகார்பேட்டை
ஆர். வேணுகோபால்
கிளை மானேஜர்

UCB 3

ஆஸ்த்மா

க்ஷயம் போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரே நாளில் குணப் படுத்தப் படுகின்றன. முறைப்படி ஆஸ்மோலா, ஒரு பாட்டில் உட் கொண்டால் உபாதை யுற்ற சுவா சக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 2-8-0 தபால் செலவு ரூ. 0-12-0

மகரத்வஜா

எல்லா வகையான பலஹீனத்திற் கும் சிறந்தது. ஒரு தோலா ரூ. 8/- ஒரு வாரத்திற்கு ரூ. 1/- தபால் செலவு ரூ. 0-12-0

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந் தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன் மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3/- பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாய மில்லாத சிறந்த மருந்து. தற்காலிககர்ப்பத்தடைக்கு ரூ. 2/- நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4/8/- இந்த இரண்டு மருந்து களும் கிடைக்குமிடம். மெஸர்ஸ் அப்பா அண் கோ, 286, சைன பஜார், சென்னை.

பைத்தியம்

தூக்க மின்மை, மூளைக் கோளாறு முதலியவற்றை அற்புதமாகக் குணப் படுத்தும் முறையில் மருந்துகள் கொடுக்கப்படும். பலன் உத்தர வாதம். வாரத்திற்கு ரூ. 5-0-0

சவனப்ராஷ்

நிலையான சளி, இருமல்களுக்கு. ஒரு சேர் விலை ரூ. 12-0-0 ஒரு வாரத்திற்கு ரூ. 1-0-0.

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலே ரியா, முதலிய வற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது, இவ்வியாதி களுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3/- உட்கொள்ளும் மருந்து ரூ. 2/- தபால் செல்வு ரூ. 0-12-0.

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்ருல் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தி யின்றி, மனச் சோர்வுற்றுள்ள வாலிபர் களுக்கு புத்துயிரளிக்கிறது. நரம்பு களைப் பலப்படுத்தி புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்கு சுகமளிக்கிறது. சாதாரணம் ரூ. 3/- விரைவில் குண மளிப்பது ரூ. 10/- தபால் செலவு ரூ. 0-12-0

குஷ்டரோகம்

குஷ்டரோகம், வெண் குஷ்டம் முதலியவை அறவே குணப்படுத்தப் படுகிறது. ஒரே மாத வைத்தியத் தில் பலன் உத்தரவாதம் ரூ 24-13-0.

நீரழிவு

விரைவில் குணப்படுத்தக் கூடும், ஒரு முறை இம் மருந்தை உப யோகித்தால், சர்க்கரையே இல்லா மல் குறைந்துவிடும். ஒரு மாத வைத் தியம் பூர்ண சொஸ்தமளிக்கும். ரூ. 25/- தபால் செலவு ரூ. 0-13-0

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்

KAVIRAJ RABINDRA NATH CHAKRAVARTHI

AYURVEDHA SASTHRI (S. A. M.)

24, DEBENDRA GHOSE ROAD :: BHOWANIPUR, CALCUTTA, 25

Telephone: South 308



அயோடிசால்

மிகச் சிறந்த

ரத்த சுத்தி மருந்து

இது திரேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனுல் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.

ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

சைபால்

முகப்பரு, சேத்துப் புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப் பட்ட புண், கரப்பான் முதலிய வைகளுக்குக் கை கண்ட மருந்து

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

சிலோன் ஏஜண்டுகள் : M. C. A. ஹுதா அண்ட் கோ.,
20, டாம் தெரு : : கொளும்பு

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபன..

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவா சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களை போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தேவைக்கு உங்கள் மாகாணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட

மானேஜர்கள்



Karl Marx.

ஆர். ராமனுதன் எழுதிய

அறிஞர் மார்க்ஸ்

வரலாறும், கொள்கையும்

அழகான படங்களுடன் 128-பக்கம்.

ரூ. 1/8. (தபால் செலவு தனி)

★

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை—14